


# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

சுடர்: 30 கதிர்: 050 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 01, வியாழக்கிழமை 15.01.2015


# விரைவில் பேச்சை ஆரம்பிக்க இணக்கம்

## சந்திரிகா - கூட்டமைப்பு சந்திப்பில் தீர்வுத் திட்ட அடிப்படைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 15

கடந்த காலங்களில் ஆராயப்பட்ட அதியுயர் அதிகாரப் பகிர்வுத் திட்டங்களை முன் வைத்து, அரசியல் தீர்வு தொடர்பான பேச்சு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான இணக்கம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையே எட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்து புதிய அரசின் முக்கிய பிரமுகர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியான பேச்சை மேற்கொண்டுவருகின்றது. அந்தவரிசையில் நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, முன்னாள் ஜனாதிபதியும் தற்போது அமைக்கப்பட்டுள்ள அரசில் முக்கிய பிரமுகருமான சந்திரிகா பண்டாரநாயக்கவைச் சந்தித்துப் பேசியது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நடத்திய பேச்சு தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பு, சந்திரிகாவுக்கு விளக்கியது. தமிழ் மக்களின் மீள்குடியமர்வு, தமிழ் அரசியல் கைதிகளின்

பக்.21

உதயன்

வாசகர்கள், விளம்பரதாரர்கள், அபிமானிகள் அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்.



## என் வழி தனி வழி!

முதலமைச்சரின் சிறப்புப் பேட்டி

'உதயன்' பத்திரிகை முகவர்களிடம் செல்லுங்கள்! புத்தாண்டு மலரை வாங்கிப் படியுங்கள்!!

பக்கங்கள்: 100 விலை: ரூ.100

## மஹிந்த, கோத்தாவுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜன. 15

ஜனாதிபதித் தேர்தலின் இறுதி நேரத்தில் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியை தக்க வைக்க முயன்ற சம்பவம் தொடர்பில், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆதாரங்களுடன் இந்த முறைப்பாட்டை நேற்று மாலை செய்துள்ளார். முறைப்பாடு செய்த

பக்.21

## நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள்

### மடுவில் பாப்பரசர் அழைப்பு

மன்னார், ஜன. 15

தமிழ்–சிங்கள இனங்களுக்கு இடையில் ஒற்றுமை ஏற்பட நல்லிணக்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என நேற்று மன்னார் மடுப் பதியில் வைத்து அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்ஸிஸ்.

மடுத்திருப்பதிக்கு நேற்று பயணம் மேற்கொண்ட பாப்பரசர் அங்கு நடைபெற்ற ஆராதனையில் விசேட மறை உரையொன்றை நிகழ்த்தினார்.

அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது:–

மடு அன்னையின் திருச்சொரூபம் மடுப் பகுதியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட நாள் மறக்க முடியாத நாள். அந்தத் திருச்சொரூபம் மீண்டும் திரும்பி வந்ததுபோல தமிழ், சிங்கள உறவும் மீண்டும் திரும்பி வரவேண்டும்.

தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஒன்றாக ஒரே குடும்பமாக மடுப் பதிக்கு வருகின்றார்கள்.

இலங்கை நாட்டின் இதயத்தையே பிழந்த நீண்ட காலப் போரினால்

பக்.21



இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டி மடுப்பதியில் நேற்று சமாதானப் புறாவை பறக்கவிட்டார் பாப்பரசர். இலங் கையில் இனங்களுக்கு இடையே நல்லுறவு ஏற்பட்டு விரை வில் நிரந்தர அமைதி வேண்டி மடு திருப்பதியில் கூடியிருந்த இலட்சக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் சமாதானப் புறாவை பாப்பரசர் பறக்க விட்டார். (து-21)

## மீள்குடியேற்ற அமைச்சு அலுவலகம் வடக்கில்

யாழ்ப்பாணம், ஜன. 15

மீள்குடியேற்ற அமைச்சின் அலுவலகத்தை வடக்கில் அமைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டார் மீள்குடியேற்ற, புனர்நிர்மாணம் மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்.

பக்.21

## இலங்கை வருகின்றார் நரேந்திர மோடி

கொழும்பு, ஜன. 15

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தியப் பயணத்துக்குப் பின்னர் இந்தப் பயணம் இடம்பெறும்

பக்.21

## கூட்டமைப்பின் தலைமையில் கிழக்கில் ஆட்சி

### ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் இணக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 15

கிழக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமையில் ஆட்சியமைக்க, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன இணங்கியுள்ளன. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த ஒருவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பு மற்றும் ஐ.தே.கவுக்கு தலா ஒரு அமைச்சுப் பதவியும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 2 அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அதிலேயே மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

பக்.21

## பறிபோனது ஊவா மாகாணம்

கொழும்பு, ஜன. 15

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் சமல் ராஜபக்ஷவின் புதல்வர் சசீந்திர ராஜபக்ஷவின் ஆளுகைக்கு உட்பட்ட ஊவா மாகாண சபையின் அதிகாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் வசமாகியது. அதன் புதிய முதலமைச்சராக, ஹரீன் பெர்னாண்டோ நேற்றுப் பதவியேற்றார்.

பக்.10


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

இன்னும் 8 நாட்களில்

JITF 2015

# இலங்கை வங்கியின் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

பழையன கழித்து புதியன புகுத்தி
புதுமையாய் விளித்து வறுமையைத்தளர்த்தி
சேமிப்பில் செழித்து இன்பத்தில் கொளித்து
தம் வேளாண்மையை வளர்த்து பொங்கிவரும்
இத் தைத்திருநாளினை சிறப்புடன் கொண்டாடிட
இலங்கை வங்கி மனமார வாழ்த்துகின்றது



www.boc.lk | தலைமையகம் " BOC சதுக்கம்", இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# சுற்றுலாத்துறை அமைச்சின் நிதியில் மோசடி

## புதிய அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த அரசால், சுற்றுலாத் துறை அமைச்சின் நிதி முறை யற்ற விதத்தில் பயன்படுத் தப் பட்டுள்ளது. அவை தொடர்பான ஆவணங்களை தீ வைத்து எரிக்க தற்போது முயற்சி மேற் கொள்ளப்பட்டுள்ளது. அவற் றைப் பாதுகாப்பதற்காக, ஆவ ணங்களுக்கு சீல் வைக்கப் பட்டுள்ளது என்று புதிய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித் துள்ளார்.

புதிய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற நவீன் திசாநாயக்க, நேற்றுமுன் தினம் செவ்வாய்க் கிழமை, சுற்றுலாத்துறை அமைச்சில் கண்காணிப்பை மேற்கொண்டார். இந்தக் கண்காணிப்பு முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சுக்குள் சில கோப்புகளை அழிப்பதற்கு முயற்சிகள் நடப்பதாக எனக் குத் தகவல் கிடைத்தது. உட னடியாக சுற்றுலாத்துறை அமைச்சுக்குச் சென்று அங் கிருந்த கோப்புக்களுக்கு நான் சீல் வைத்துள்ளேன்.

ஊவா மாகாண சபைக்கு இந்த நிறுவனத்தின் ஊடாக 90 மில் லியன் ரூபா செலவு செய்யப் பட்டுள்ளமை தொடர்பில் குற் றஞ் சாட்டப்பட்டுள்ளது. ஜனாதி பதித் தேர்தலுக்கும் அதனை விட மூன்று, நான்கு மடங்கு செலவு செய்துள்ளமை தொடர் பில் அறியக்கிடைத்துள்ளது.

இதிலுள்ள ஒவ்வொரு சதமும் மக்களுடையது. இவ்வாறான ஆவணங்களை அழிப்பதாக ஏதேனும் தகவல்கள் கிடைத் தால், அது தொடர்பில் சம்பந் தப்பட்ட அதிகாரிகளுக்கும், அர சியல் அதிகார சபைக்கும் தக வல்களை வழங்குமாறு நாம் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் – என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-5)

# தாகசாந்தி நிலைய திறப்பு விழா

தென்மராட்சி, ஜன. 15

பொன்னாலை நாராயணன் தாக சாந்தி நிலையத்தால் பொன் னாலை சந்தியில் நிர்மாணிக் கப்பட்ட தாகசாந்தி நிலையம், அன்னதான மண்டபம், சன சமூக நிலையம் என்பன இன்று மதியம் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.

கலாபூஷணம் க.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு ஆசியுரையினை நல்லைஆதீன இரண்டாவது குரு சந்நிதான முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம் பந்த பரமாச்சாரியர் நிகழ்த்த வுள்ளார்.

நிகழ்வுக்கு முதன்மை விருந் தினராக சங்கானைப் பிரதேச செயலர் அ.சோதிநாதனும், சிறப்பு விருந்தினராக வலி. மேற்கு பிரதேசசபை தலைவர் திருமதி நா. ஜங்கரனும் கலந்து கொள் வர். (ற-9)

# 8,700 இந்திய வீடுகளுக்கு 6,673 பயனாளிகளே தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்.மாவட்டத்துக்கு ஒதுக்கப் பட்ட 8 ஆயிரத்து 700 இந்திய வீடுகளில், 6 ஆயிரத்து 673 வீடுகளுக்குரிய பயனாளிகளே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய 2 ஆயிரத்து 27 வீடு களுக்குரிய பயனாளிகள் யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செய லாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரி வித்தார்.

இந்திய அரசின் நிதி உதவியில், கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்திய வீட் டுத் திட்டம் இன்னமும் முடி வடையாத நிலைமையில் உள் ளது. யாழ்.மாவட்டத்தில் புதிய வீடுகள் நிர்மாணிப்பதற்கு 8 ஆயிரத்து 700 வீடுகளும், திருத் தம் செய்வதற்கு ஆயிரம் வீடு களும் ஒதுக்கப்பட்டிருந்தது.

8 ஆயிரத்து 700 வீடுகளில் 6 ஆயிரத்து 673 வீடுகளுக்குரிய பயனாளிகள் இனங்காணப்பட் டுள்ளனர். இதில் பெரும்பான் மையான வீடுகள் முழுமை யாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இறுதிக் கட்டத்தில் தேர்வு செய் யப்பட்ட பயனாளிகளுக்கு இன் னமும் முதலாம் கட்ட கொடுப் பனவுகள் வழங்கப்படவில்லை.

இதேவேளை, எஞ்சிய 2 ஆயி ரத்து 27 வீடுகளுக்கும் உரிய பயனாளிகள் மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளி லிருந்தும் தெரிவு செய்யப்பட வுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்குரிய பெயர்ப் பட்டியல் இந்திய அதிகாரிகளி டம் கையளிக்கப்பட்டுள்ளதாக வும், அவர்கள் இன்னமும் அந் தப் பட்டியலை இறுதி செய்ய வில்லை எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்திய வீட்டுத் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடை யும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது. (த-5)

# மைத்திரியின் வருகையை கூறியவருக்கு அச்சுறுத்தல்!

கொழும்பு, ஜன.15

ஜனாதிபதித் தேர்தலில், பொது வேட்பாளர் ஒருவர் அரசுக்குள் இருந்தே களமிறங்குவார் என்று எதிர்வு கூறியிருந்த சோதிடர் சுஜித் நிஸாந்த, தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள் ளது என்று கண்டி பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்துள் ளார்.

கட்சிகள், நிறங்கள் என்ற அரசி யல் சம்பந்தங்கள் எவையு மின்றி மக்களுக்காக தாம் சோதிடச் சேவையை மேற் கொண்டு வருகின்றேன். இன்று வரையிலும் தமது எதிர்வு கூறல் கள் உண்மையாகியுள்ளன. அவ்விதம் எதிர் கூறல்கள் காரண மாக தமக்கு இன்றுஉயிர் அச் சுறுத்தல்கள் விடுக்கப்படுகின் றன என்று அவர் தெரிவித்துள் ளார்.

கடந்த 10 ஆம் திகதி இரவு 7.30 அளவில் வாகனமொன்றில் வந்த இனந்தெரியாத தரப்பொன்று கண்டி நகரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது எனது மேற்சட்டையைப் பற்றிப் பிடித்த வாறு உன்னையும் கொலை செய்வோம். இனிமேலும் உன் தொழிலைத் தொடர இடமளிக் கப் போவதில்லை" என அச்சு றுத்திவிட்டுத் சென்றனர். அது குறித்து கண்டிப் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளேன் என்று அவர் கொழும்பு ஊடகம் ஒன் றுக்குக் கூறியுள்ளார்.

ஒரு சில சோதிட நிபுணர்கள் பணம் மற்றும் பலதரப்பட்ட வரப்பிரசாதங்களைப் பெற் றுக்கொள்வதற்காகச் செயற் பட்டு தமது நிலையைத் தாழ்த் திக் கொள்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-22)

# மஹிந்தவால் பறிபோன நிஸாந்தவின் ஜீப் வண்டி

கொழும்பு, ஜன.15

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது வைத்திருந்த அபரிமிதமான நம்பிக்கையால், தனது பெறுமதி மிக்க சொகுசு ஜீப்பை இழக்க வேண்டிய துர்ப் பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட் டார் வடமேல் மாகாண மீன் பிடித்துறை அமைச்சர் சனத் நிஸாந்த பெரேரா. தேர்தலில் மஹிந்தவே வெல்வார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் சகோதரர் டட்லி சிறி சேனவுடன் கட்டிய பந்தயம் காரணமாக அவருக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மாகாண சபைகளின் அமைச் சர்கள் மற்றும் உறுப்பினர் களுக்கு வழங்கப்பட்டிருந்த விஷேட அனுமதிப் பத்திரங்க ளின் கீழ் இறக்குமதி செய்யப் பட்ட டொயோட்டா லாண்ட் குரூசர் 200' ரக சொகுசு ஜீப் வண்டியையே அவர் டட்லிக்குக் கொடுக்க நேர்ந்துள்ளது. அதன் பெறுமதி சுமார் 250 லட்சம் ரூபாவாகும்.

இது குறித்துக் கருத்துத் தெரி விக்கும்போது, பந்தயத்தில் தோற்றுவிட்டேன். அதன்படி டட்லி சிறிசேனவுக்கு எனது ஜீப் வண்டியைக் கொடுக்கின்றேன். அரசால் வழங்கப்பட்ட அனு மதிப் பத்திரத்தின் மூலம் வாங் கப்பட்ட வாகனத்தைத்தான் நான் டட்லி சிறிசேனவுடன் பந்த யம் கட்டியிருந்தேன். அந்தள வுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் வெற்றியில் எனக்கு நம்பிக்கை இருந்தது. வாகனங் கள், வீடு வாசல்கள், காணி பூமிகள் மாத்திரமல்ல எனது உயிரைக் கூட மஹிந்த ராஜ பக்ஷவுக்காக இன்றும் நான் அர்ப்பணிக்கத் தயாராகவே இருக்கின்றேன். நாட்டை மீட்டெ டுத்த ஜனாதிபதியே தேர்தலில் தோல்வியடைந்துள்ளார். இந்த இரும்புக் குவியல் கைவிட்டுப் போனதற்காக நான் துக்கப்பட மாட்டேன்"! என்று தெரிவித்துள் ளார் நிஸாந்த பெரேரா.(ற-22)

# போதகர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 15

போதகர் ஒருவர் இனந்தெரியா தோரால் கடுமையாகத் தாக்கப் பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வாள், இரும்புக் கம்பிகளுடன் வந்த 9 பேர் கொண்ட குழு தன் மீது தாக்குதல் நடத்தியதாக அவர் தெரிவித்துள்ளார். யாழ். ஆஸ் பத்திரி வீதியில் வேம்படிச்சந்தியை அண்மித்து கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 9.15 அளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. 3 மோட்டார் சைக்கிள்களில் 3 பேர் வீதம் வந்த அவர்கள் இரும் புக் கம்பிகளால்; தாக்கி வாளால் வெட்டியும் காயப்படுத்தியுள்ள னர். இது தொடர்பில் பொலி ஸாருக்கு அறிவித்தபோதும் பொலிஸார் அங்குவரவில்லை. அங்கு சனக் கூட்டம் அதிகரித் ததால் அந்தக் குழுவினர் அங் கிருந்து சென்றுவிட்டனர்.

இது தொடர்பில் நேற்றைய தினமே பொலிஸார் முறைப் பாடுபதிவு செய்துள்ளனர். (த-4)

# பிழையெதுவும் செய்யவில்லை

## இப்படிக் கூறுகின்றார் நாமல்



கொழும்பு, ஜன.15

தமக்கு எதிரான குற்றச்சாட்டுக் கள் முற்று முழுவதிலும் பொய் யானவை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எவ்வாறான விளைவுகள் ஏற்பட்டாலும் அதனை எதிர்நோக்கத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

ஏதேனும் பிழை செய்திருந்தால் அதற்கான தண்டனையை அனு பவிக்கத் தயார் என்று கூறி யுள்ள அவர், தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பிழையா னவை என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

குற்றச் சாட்டுக்களை நம்ப வேண் டாம் என நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களிடம் கோரு வதாகக் கூறியுள்ள நாமல் ராஜ பக்ஷ எந்த நேரத்திலும் இலங்கை மக்களின் நலனுக்காக பாடு பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள் ளார்.

முன்னாள் ஜனாதிபதி பற்றியும் தங்களைப் பற்றியும் சுமத்திய குற்றச்சாட்டுகள் உண்மை யில்லை என்று தெரிவித்துள்ள துடன், எந்தவிதமான பிழை களையும் தாம் செய்யவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார். (ற)

# சங்கானையில் தாலி திருட்டு

சங்கானை, ஜன 15

சங்கானை ஆஸ்பத்திரி வீதியில் சந்திரகுமார் லலிதா என்ப வரின் தாலிக்கொடியை மோட் டார் சைக்கிளில் வந்த இருவர் அறுக்க முற்பட்டபோது அது அறுபடவில்லை. இதனால் குறித்த நபர்கள் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி பெண்ணை அச்சுறுத்திக் தாலி யைப் பறித்துக் சென்றுள்ளனர். குறித்த பகுதியானது மக்கள் நடமாட்டம் கூடிய பகுதியாகும். குறித்த பெண் கூக்குரல் இட்டு உதவிக்கு அழைத்தபோது யாரும் அங்கு வரவில்லை.

இந்தச் சம்பவமானது நேற்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது.

# செய்திகள்

## அதிகளவு குப்பைகளை அகற்றுவதற்கு கட்டணம்

### மாநகர சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.15
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வீடுகளில் இருந்து அதிகளவான குப்பைகளை வாடகைப் பணம் செலுத்தி அல்லது சொந்த வாகனங்களைப் பயன்படுத்தியே அகற்றவேண்டும் என யாழ்.மாநகர சபை தெரிவித்துள்ளது.

வீடுகளில் இருந்து சாதாரணமாக அகற்றப்படும் சிறு கழிவுப் பொருள்களை யாழ்.மாநகர சபையின் குப்பை ஏற்றும் வாகனங்கள் காலை, மாலை எனக் குறிக்கப்பட்ட நேரங்களில் அகற்றி வருகின்றன. எனினும் அதிகளவான குப்பைகளை ஒரு வீட்டில் இருந்து அகற்றுவதானால் அதற்காக ஒரு வாகனத்தை தனியாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

குறிப்பாக வீடுகளில் மரங்களை வெட்டும்போது பெறப்படும் கழிவுகள், வீடுகளில் விசேட தினங்களின்போது சேகரிக்கப்படும் குப்பைகள், கொண்டாட்டங்களின் போது சேகரிக்கப்பட்ட குப்பைகள் ஆகிவற்றை அகற்றுவதற்கு மாநகர சபையின் வாகனத்தைப் பயன்படுத்த வேண்டியிருப்பின் அதற்கு வாடகைப் பணம் செலுத்த வேண்டும். அல்லது வீட்டு உரிமையாளர்கள் சொந்த வாகனங்களைப் பயன்படுத்தியே குப்பைகளை அகற்றவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாநகர சபையால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வீடுகளில் இருந்து அகற்றப்பட்ட குப்பைகள் வீதிகளில் குவியல்களாக அங்காங்கே உள்ளன. இதனை மாநகர சபை அகற்றாத காரணத்தால் பொது மக்களும் வாடகைப்பணம் செலுத்த முடியாத நிலையில் – அவை அப்படியே உள்ளன எனவும், இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ள தெனவும் கூறப்படுகின்றது.

(த–14)

## தீர்ப்பைக் கேட்டதும் மயங்கிய திருடன்

### சாவகச்சேரி நீதிமன்றில் சம்பவம்

தென்மராட்சி, ஜன. 15
நீதிமன்றில் நீதிவான் அறிவித்த தீர்ப்பைக் கேட்டதும் வலிப்பு வந்து மயங்கி வீழ்ந்துள்ளான் சைக்கிள் திருடன் ஒருவன். இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் சாவகச்சேரி நீதிமன்றில் நடந்துள்ளது.

கைதடிப் பகுதியில் பூட்டப்பட்டிருந்த சைக்கிளை போலிச் சாவி போட்டு எடுத்துச் செல்ல முயன்ற ஒருவரை– அங்கு நின்ற பொது மக்கள் பிடித்து– சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறித்த நபரை பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது– அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதையடுத்து அவருக்கு ஆறு மாத சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. அதைக் கேட்டதும் திருடனுக்கு வலிப்பு வந்து– மயக்கமும் வந்துவிட்டது. உடனடியாக முதலுதவிச் சிகிச்சைகள் வழங்கப்பட்டு, பின்னர் சிறைக்காவலாளிகளால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளான். (ற–9)

## ஊனமுற்ற குழந்தையை பாப்பரசர் தொட்டு ஆசிர்வாதம்

### வாகனத்தை விட்டு இறங்கி

யாழ்ப்பாணம், ஜன. 15
வீதியில் தன்னை வரவேற்பதற்காக சக்கர நாற்காலியில் இருந்த ஊனமுற்ற குழந்தையைக் கண்ட பாப்பரசர் தனது வாகனத்தை விட்டு இறங்கி அந்தக் குழந்தையை தேடிச் சென்று ஆசிர்வதித்தார்.

திறந்த வாகனத்தின் மூலம் கட்டுநாயக்காவில் இருந்து கொழும்பு அப்போஸ்தலிக்க மண்டபத்தை நோக்கி அழைத்து வரப்பட்ட திருத்தந்தையை வரவேற்பதற்காக வீதியின் இரு பக்கங்களிலும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். அவர்களுக்கு ஆசி வழங்கியபடி வந்த திருத்தந்தை பிரான்சிஸ் திடீரெனத் தன்னை வரவேற்பதற்காக வீதி ஓரத்தில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த குழந்தையைக் கண்டதும் தனது வாகனத்தை நிறுத்தும்படி கூறிவிட்டு– அந்தக் குழந்தையை நோக்கி நடந்து சென்று தொட்டு ஆசிர் வழங்கினார்.

திருத்தந்தை கீழே இறங்கியதும் ஏராளமான மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். மக்களுக்கும் ஆசிர் வழங்கிய திருத்தந்தை மீண்டும் தனது வாகனத்தில் ஏறியதும்– சிலர் தமது குழந்தைகளையும் ஆசிர் செய்யுமாறு திருத்தந்தையை நோக்கித் தூக்கிப் பிடித்தனர். அந்தக் குழந்தைகளையும் ஆசிர்வதித்த திருத்தந்தை பிரான்சிஸ் பின்னர் அங்கிருந்து பயணமானார்.

(த–ரி)

## விபத்தில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஜன .15
நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிராக்டர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதால் அதனைச் செலுத்திச் சென்றவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் பயணித்தவர் படு காயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கே.கே.எஸ்.வீதி – தெல்லிப்பழை ஆனைக்குட்டி மதவடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராசகுமார் நவரஞ்சன் (வயது–27) என்பவரே உயிரிழந்தார். இவர் ஆஸ்திரேலியாவிலிருந்து சில நாள்களுக்கு முன்னரே யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த திருஞானம் பிரகாஷ் (வயது – 25) என்பவர் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் மாற்றப்பட்டுள்ளார்.

(த–4–36–86)

## வழித்தட அனுமதி இல்லாத பஸ் சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி, ஜன. 15
வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை கொழும்புக்கு ஏற்றிச் சென்ற வாகன சாரதிக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஏ–9 வீதியூடாகப் பயணிகளுடன் வந்த பஸ்ஸை பொலிஸார் மறித்து சோதனையிட்ட போது வழித் தட அனுமதிப் பத்திரம் இல்லாது பயணித்தமை கண்டிப்பிடிக்கப்பட்டது. அதை யடுத்து பொலிஸார், வாகனச் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றல் வழக்குத் தாக்கல் செய்தனர்.



வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதையடுத்து அவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற–9)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு

### வட மாகாண விவசாய அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம்.ஜன.15
வட மாகாண விவசாய அமைச்சால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

வட மாகாணத்தில் 5 மாவட்டங்களிலும் மிகவும் பாதிக்கப்பட்ட நலிவடைந்துள்ள குறிக்கப்பட்ட கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு–அந்தக் கிராமங்களுக்கு இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

உலர் உணவுப் பொருள்களுடன் தைப்பொங்கலுக்கான அரிசி, சர்க்கரை என்பவற்றையும் சேர்த்து வழங்கி வருகின்றனர். அதிகமாக நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்கள்– தாழ்வுப் பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் சங்கானை விழி சுட்டிப் பகுதியில் வெள்ளத்தால்



பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (வ–14)

## மாடுகளை துன்புறுத்திய மூவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜன. 15
மாடுகளை துன்புறுத்தும் வகையில் வாகனத்தில் ஏற்றிச் சென்ற மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னார் சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு நேற்று முன்தினம் தீர்ப்பு வழக்கப்பட்டது. எதிரிகள் மூவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற–9)

## கசிப்பு உற்பத்தி பெண்ணுக்கு ரூ.50 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, ஜன. 15
கசிப்பு உற்பத்தி செய்த பெண் ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.


கடந்த மாதம் சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து– சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய போது– கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டப் பெண்ணைக் கைது செய்ததுடன்– உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தும் கோடா மற்றும் உகர ணங்களையும் கைப்பற்றியிருந்தனர். பின்னர் குறித்த பெண் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த பெண்ணுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது பெண் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற–9)

# படங்கள்

## பாப்பரசர் பிரான்ஸிஸ் மடுத் திருத்தலத்துக்கு நேற்று மாலை வந்தபோது










## பாப்பரசர் பிரான்ஸிஸ் கொழும்பு காலி முகத்திடலில்





# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## திருத்தந்தை பிரான்ஸிஸின் மகிமைமிகு இலங்கைப் பயணம்

போரின் வடுக்களை ஆற்றுவதற்கு உண்மையைக் கண்டறிவது அவசியம்; முக்கியமானது. பழைய காயங்களைக் கிளறுவதற்காக அதனை மேற்கொள்ளக் கூடாது. மாறாக, ஐக்கியத்தை ஊக்குவித்தே காயங்களை ஆற்ற வேண்டும்.

கசப்பான உள்நாட்டுப் போரினால் பல வருடங்களாக நீங்கள் கொடூரத்தைச் சந்தித்துள்ளீர்கள்; அனுபவித்து அவலமுற்றுள்ளீர்கள். அதனால் உண்டான நம்பிக்கை இன்மையையும், விரோத மனப்பான்மையையும் மறந்து விடுவது சுலபமன்று.

தீமை செய்வதற்குப் பதிலாக நன்மை செய்வதன் மூலமும், சமாதானம், நல்லிணக்கம் போன்ற விழுமியங்கள் ஊடாகவே நம்பிக்கையையும் நல்லிணக்கத்தையும் முகிழ்க்கச் செய்யலாம்.

சகல சமூகத்தை சேர்ந்த மக்களும், ஒருவரை ஒருவர் உள்வாங்கிக் கொண்டு, மனித கௌரவம், மனித உரிமைகள் ஆகியவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

இலங்கையின் அரசியல் மற்றும் மத சமூகத் தலைவர்கள் தங்களது சொல் மற்றும் செயல்களை, அவை எத்தகு நன்மை பயக்கவல்லவை, அடுத்தவரின் காயங்களை ஆற்றக்கூடியவை என்பதனைப் பகுத்து அறியவேண்டும்.

தத்தமது சொல்லும் செயலும், எத்தகு நன்மை பயக்க வல்லவை, நாட்டின் முன்னேற்றத்துக்கு, நிரந்தரமான முன்னேற்றத்துக்கு பங்களிக்கவல்லவை என்பதனை மனதில் நிறுத்திச் செயலாற்ற வேண்டும்.

மேற்கண்ட கருத்துக்களை, ஆலோசனைகளை விளம்பியவர் வேறு எவருமல்லர். எமது நாட்டுக்கு உத்தியோகபூர்வ திவ்விய வருகை தந்துள்ள, அனைத்துலக கத்தோலிக்க மக்களின் அதியுயர் முதல்வரான, திருத்தந்தை பிரான்ஸிஸ் அடிகளாரே அவராவார்.

இந்த நாட்டில் வாழும் ஒன்பது இலட்சத்துக்கும் அதிகமான கத்தோலிக்க மக்களது திருத்தந்தையார் கொழும்பில் - காலி முகத்திடலில் - நேற்று நடத்திய விசேட திருப்பலிப் பூசையில் பங்கு கொண்டிருந்தார்.

அங்கு உரையாற்றுகையிலேயே மேற்சொன்ன வைரமான வரிகளை அவர் விளம்பினார்.

அனைத்துலக கத்தோலிக்க மக்களின் அதியுயர் முதல்வரான திருத்தந்தை பிரான்ஸிஸ் அடிகளார், கடந்த செவ்வாயன்று இலங்கை மண்ணில் தமது திருப் பாதங்களைப் பதித்தார்.

உலகின் தென்துருவத்தைச் சேர்ந்த அவர், 1272 ஆண்டுகளுக்குப் பின்னர், ஐரோப்பியர் அல்லாத முதலாவது திருத்தந்தை என்ற சிறப்புக் கொண்டவர்.

அவர் நேற்று (14.01.2015 இல்) கொழும்பு, காலி முகத்திடலில் விசேட திருப்பலிப் பூசையை நடத்தினார். அவ்வேளை, இந்த நாட்டில் வாழும் ஒன்பது லட்சத்துக்கும் அதிகமான கத்தோலிக்க மக்கள், அவரை வாஞ்சையுடன் தரிசித்தனர்.

இலங்கையில் சிறப்பான மதப்பணி ஆற்றிய யோசப்வாஸ் அடிகளாரை, புனிதர் நிலைக்கு உயர்த்தும் பணியையும், திருத்தந்தை பிரான்ஸிஸ் அடிகளார் கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நிறைவேற்றினார். அது ஒரு சரித்திர நிகழ்வாக நிலைக்கக் கூடியது.

யோசப் வாஸ் அடிகளார் குறித்து, இப்பத்தியில் குறிப்பிடுவது பொருத்தமானது; சிறப்பானதும் ஆகும்.

மேற்கு இந்தியாவின், மேற்குக் கரையோரத்தில் கோவா மாநிலத்தைச் சேர்ந்த யோசப்வாஸ் தமது இருபத்தைந்தாவது வயதில் யாழ்ப்பாணத்துக்கு வந்து, சில்லாலைக் கிராமத்தில் தங்கியிருந்து சமயப்பணி ஆற்றியவர்.

அதன் பின்னர், இலங்கையில் நாடளாவிய மட்டத்தில், தமது மறை அறிவிப்புப் பயணங்களை - பணிகளை ஆற்றினார் என்பது வரலாறு.

அவர் 1711 ஆம் ஆண்டில் திருந்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

மேலும், மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, அனுராதபுரம் மாவட்டங்களில் இருந்து மடுமாதா ஆலயத்துக்கு தம்மைத் தரிசிக்கச் சென்ற பக்தர்களை, அடியார்களை திருத்தந்தை ஆசீர்வதித்த பிரமாண்டமான நிகழ்வும், விசேட வழிபாடு நடத்தியமையும் திவ்வியமானதும் தனிச்சிறப்புக் கொண்டதும் ஆகும்.

குறுகிய காலவெளியில் இலங்கையில் தங்கியிருந்த திருத்தந்தையின் விஜயம், கத்தோலிக்க மக்களுக்கு ஒரு கொடையாக அமைந்தது.

அடுத்து, மன்னார் மடுமாதா தேவாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில், மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, அனுராதபுரம் மறை மாவட்டங்களில் இருந்து சென்ற இறைமக்களை, பாப்பரசர் ஆசீர்வதித்தமை ஒரு சரித்திர நிகழ்வாகும். அதில் பயன்பெற்றவர்கள் கொடுத்து வைத்தவர்களே.

# நல்லுறவு மலரட்டும்



தமிழர்கள் எழுச்சியால் ராஜபக்ஷ படுதோல்வி, சிறிசேன ஜனாதிபதி ஆனார் என பத்திரிகையில் படித்தபோது ஆனந்தக் கண்ணீர் வடிக்காமல் வேறென்ன செய்ய முடியும்?

ஒரு தமிழ்ச் சமூகம் இதயத்திலே சுமந்து கொண்டிருந்த எரிமலையால் கிடைத்த ஜனநாயக வெற்றி இது.

### தமிழர்களின் எழுச்சியும்

மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைத்த வெற்றிக்குத் தமிழர்களின் எழுச்சியும் ஒரு முக்கிய காரணமாக இருந்திருக்கிறது என்பதை அறியும்போது போற்றுபவர் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும், தொடர்ந்து செல்வோம் சாக்காடே எதிர்நோக்கி வந்தாலும் சரி, சதிகாரர்களின் சூழ்ச்சி எம்மை வதைத்தாலும் சரி, தோற்காது எம் தொடர்போக்கு அது கூடுமே அல்லாது குறையாது' என்ற வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

தமிழ் மக்களை மாக்களைவிடக் கேவலமாய் நடத்திய ஒரு கொடூர ஆட்சிக்கு மக்கள் ஜனநாயகப் பாதையில் கொடுத்த விடை இது.

தமிழர்கள் மிக எழுச்சியுடன் திரண்டு வந்து வாக்களித்தனர். ஆம், மஹிந்த ராஜபக்ஷ நிறுத்திய படைகளால் கூட இம்மக்களை வாக்களிக்க விடாமல் தடுக்க முடியவில்லை.

### தகர்ந்தது ஆணவம்

இலங்கையில் ஆதிக்க சக்தியிடமிருந்த அதிகாரமும் ஆணவமும் தகர்த்தெறியப்பட்டுள்ளது. மக்கள் விரும்பிய ஒரு மாற்றம் இத்தேர்தல் மூலம் மலர்ந்திருக்கிறது.

தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் வாக்குகளே ராஜபக்ஷவின் தோல்வியை உறுதிப்படுத்தியுள்ளதை அறியும்போது மகிழ்ச்சியே.

இலங்கை அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்றும், தமிழர்களுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கப்படும் என்றும் ராஜபக்ஷ முன்பு அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றாமைக்கு சிறுபான்மை தமிழர்கள் அவருக்கு அளித்த சிறப்புப் பரிசுதான் இப்படுதோல்வி.

காலச்சக்கரம் வேகமாக சுழல்கிறது. மக்களை ஏமாற்றி வாழ நினைக்கும் எந்த சக்தியும் அதிக நாள் நிலைத்து நிற்காது என்பதற்கு இதுவே சிறந்த உதாரணம்.

### இலங்கையும் இந்தியாவும் இணைய வேண்டும்

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னராவது இந்தியாவும் இலங்கையும் நல்லிணக்கத்துடன் செயலாற்ற வேண்டும்.

இந்திய மீனவர்கள் இயற்கையின் சீற்றத்தால் எல்லை தாண்டும்போதும், சிலவேளைகளில் இந்திய எல்லைக்குள்ளேயே வந்தும் இவர்களை பிடிக்கின்ற சிங்கள படை இவர்கள் மீது மிகவும் அபாண்டமான பழிகளை சுமத்துவதும், பல மாதங்கள் இவர்களை சிறையிலடைத்து கொடுமைப்படுத்துவதும் காலங்காலமாக நடந்து வரும் அநியாயம்.

இப்பிரச்சினையை தீர்க்க மைத்திரிபால சிறிசேன ஆவன செய்ய வேண்டும். இரு நாட்டு மீனவர்களுக்கிடையே பரஸ்பர ஒற்றுமை ஏற்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் வாழ்வது எம் தொப்புள்கொடி உறவுகளே.

அரசியல் காரணங்களுக்காகப் பிரிக்கப்பட்ட இந்த மக்கள் ஒன்றிணைக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயம். புதியதோர் அரசியல் அத்தியாயம் எழுதியுள்ள மைத்திரிபால சிறிசேனவினால் இது சாத்தியம் என நம்பலாம்.

மீனவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு சமாதானக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும். மீன்பிடி சம்பந்தமான பிரச்சினையெனில், இந்தக் குழு நேரடியாகப் பேசி பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

### மீனவர்களிடையே நல்லிணக்கம்

இரு நாட்டு மீனவர்களுக்கும் நல்லிணக்கம் ஏற்படும் வகையில் அவ்வப்போது கூட்டங்கள் நடத்திக் கலந்துரையாட வேண்டும், இதனால் ஒற்றுமை வலுப்படும்.

சட்டத்துக்குப் புறம்பான செயல்களில் இரு நாட்டு மீனவர்களை ஈடுபடுத்தத் தூண்டும் எவ்வித சக்திக்கும் அடிபணியாமல் துணிந்து செயல்படும் வண்ணம் இம்மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்படவேண்டும்.

அது மட்டுமல்லாது, இரு நாடுகளையும் தூண்டிவிட்டு குளிர்காய நினைக்கும் எவ்வித ஆதிக்க சக்திக்கும் இடம் வழங்காது இருப்பது நலம்.

ஒரு நல்லெண்ண ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம், இயற்கையின் சீற்றத்தால் கடலில் திசைமாறி செல்லும் மீனவர்களைக் கைது செய்யாமல் அவர்கள் வைத்திருக்கும் ஆவணங்களின் உண்மைத்தன்மையின் அடிப்படையில் அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

அதாவது, மீனவர்கள் இயற்கையின் சீற்றத்தால் வழிதவறிச் சென்று கடற்படையினரால் கைது செய்யப்படும்போது சம்பந்தப்பட்ட தூதரகத்துக்கு தகவல் கொடுத்து, உண்மைத் தன்மையை தெரிந்துகொண்டு அதன்மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சில சமயங்களில் மீனவர்கள் வழிதவறிச் சென்றார்கள் என்ற ஒரே காரணத்துக்காக கொலைக் குற்றவாளிகளை அடைக்கும் சிறையில் அடைக்கப்படுவதும், கொடுமையான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுவதும் இதுவரை நடந்து வந்தது. இனி இது தவிர்க்கப்பட வேண்டும்.

கடந்த கால கசப்புகளை மறந்து, இரு நாட்டு மீனவர் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆக்கபூர்வமான வழிமுறைகளைக் கண்டறிவதும் அவற்றை உடனே செயல்படுத்துவதும் பயன் விளைவிக்கும்.

### கச்சதீவில் உரிமை வேண்டும்

கச்சதீவில் பாரம்பரியமாக மீன்பிடித்துவந்த உரிமையை மீண்டும் நிலை நாட்டவேண்டும். சுற்றுலா, வியாபார காரணங்களுக்காக இருநாட்டு மக்களும் பரஸ்பரம் ஒத்துழைக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

எனவே, இலங்கை அதிபரும் இந்தியப் பிரதமரும் சந்தித்து இரு நாட்டு மக்களிடையே ஒற்றுமை உணர்வு ஓங்க ஆவன செய்ய வேண்டும்.

*நன்றி – தினமணி*

# ஈழத் தமிழர் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்திய ஜனவரி மாதம்

மூனாதானா

ஈழத்தமிழர்களது இனப்பிரச்சினை இன்றைய காலம்வரையிலும்தீர்க்கப்படாததொன்றாகவே இருந்து வருகின்றது.

### அறுபத்தேழு வருடங்கள்

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு இன்று வரையில் அறுபத்தேழு வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. இலங்கையின் முதல் பிரதமராக பதவி வகித்த டி.எஸ்.சேனநாயக்கா, தொடங்கி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரை தமிழினத்தின் மீது பகைமை அரசியலை நடத்தித் தமது இருப்பு அரசியலை பெரும் பலத்துடன் தக்க வைத்துக் கொண்டிருந்தனர். இலங்கையிலுள்ள முக்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சரி இந்தக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், அரசியல் வாதிகளும் சரி இதய சுத்தியோடு தமிழர்கள் மீதான நலன்களில் அக்கறை கொள்ளவுமில்லை; செயற்படவுமில்லை.

இவர்கள் பதவி வெறிபிடித்தவர்களாகவும், இன வாதிகளாகவும் நாட்டில் அவதாரமெடுத்தனர். அறுபத்தி ஏழு வருடங்களாக தமிழர்கள் மீது இனவாதம் , இனப்பகை என்பன எங்கிருந்து ஆரம்பித்தது? தொடர்ந்து இதனை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் யார்? என்பதையெல்லாம் வரலாற்று பதிவுகள் சொல்லிக் கொண்டேயிருக்கும்?

### இனவாத அரசியல்

நாட்டின் இனவாத அரசியல் என்பது காலம் சென்ற அரசியல் தலைவர்களான டி.எஸ்.சேனநாயக்கா, எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க, பிலிப்குணவர்தன, சி.பி.டிசில்வா, ஜே.ஆர். ஜெயவர்த்தன, சிறிமாவோ பண்டாரநாயக்க, பிரேமதாஸ வரையில் ஆரம்பித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரையில் நீண்டு கொண்டு சென்றது.

இலங்கை நாடு சுதந்திரமடைந்து இன்று வரையான அறுபத்தி ஏழு ஆண்டு காலத்தின் ஜனவரி மாதத்தில் நடந்தேறிய பலதரப்பட்ட சம்பவங்கள் வரலாற்றுப் பதிவுகளாக இருந்து வருகின்றன. பல ஜனவரி மாதங்களில் ஆட்சியாளர்களால் தமிழின விரோத சம்பவங்கள் மிக மோசமாக நடத்தப்பட்டுள்ளன என்பது மறைக்க முடியாத உண்மையைச் சொல்லிக் காட்டுகின்றது. இந்த அறுபத்தி ஏழு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டுகளில் வந்த முதலாவது மாதமான ஜனவரி மாதத்தில் ஆட்சியாளர்களால் நடத்தப்பட்ட தமிழர்கள் மீதான அடக்கு முறைச் சம்பவங்களையும், வன்முறைகள், கொலைகள் போன்றவற்றையும் நாம் ஒருகணம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

### மகாதேசாதிபதிக்கு எதிர்ப்பு

இலங்கையின் மகாதேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருந்த சோல்பரிப் பிரபு 1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது தமிழினத்தின் எதிரியை வரவேற்க வேண்டாமெனக் கோரி தமிழ் மக்களிடம் தமிழரசுக் கட்சியினர் வேண்டிக் கொண்டனர். யாழ்.நகர மண்டபத்தில் அவரது வருகையினை பகிஷ்கரிக்கக் கோரி கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டபோது – அன்றைய ஆட்சியாளர்களாலும், அவர்களோடு ஒட்டி உறவாடிய அரசியல் சக்திகளினது தலையீட்டினாலும் கூட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. மண்டபத்தின் கதவுகளுக்கு இரட்டைப் பூட்டு போடப்பட்டு பூட்டப்பட்டிருந்தது. தமிழரசுக் கட்சியினர் கட்டணம் செலுத்தியே மண்டபத்தை வாடகைக்குப் பெற்றிருந்தனர். தமிழர்களுக்கு எதிரான சம்பவங்களில் ஆரம்பத்தில் ஏற்பட்ட சம்பவங்களில் ஒன்றாக முதற்பிரதமராக இருந்த டி.எஸ். சேனநாயக்கவின் காலத்தில் இது பதிவாகியது.

1960ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசு ஆட்சி அமைத்தது. 1961ஆம் ஆண்டு ஜனவரி முதலாம்திகதி தொடக்கம் வடக்கு,கிழக்கு மாகாணம் உட்படநாடுமுழுவதும்தனிச்சிங்களச் சட்டம் பூரணமாக நடைமுறைப்படுத்தப்படுமென சிறிமாவோ அரசு அறிவித்தது. அதன் காரணமாக சிறிமாவோ அரசு சிங்கள உத்தியோகத்தர்களை வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி இன விரோதத்தைக் காட்டிக் கொண்டது. ஆனால் தமிழரசுக் கட்சியினரின் கடுமையான எதிர்ப்புப் போராட்டங்களால் இது கைவிடப்பட்டது.

மீண்டும் தமிழர் மீது தமிழின விரோதப் போக்கை மேற்கொள்ள 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் தனிச்சிங்களச் சட்டத்தை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப் போவதாக சிறிமாவோ அரசு அறிவித்தது.

### இனத்துவேசம்

1966ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தமிழ்மொழி உபயோகச் சட்ட விதிகள் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. எதிர்க்கட்சிகள் தமிழ் இனத்தின் மீது துவேசத்தைக் கிளப்பியதோடு அரச துறைத் தொழிற் சங்கங்களின் வேலை நிறுத் தத்தையும் நடத்தின. அன்றைய தினம் எதிர்கட்சிகள் நடத்திய கண்டன ஊர்வலம் கட்டுக்கடங்காமல் போகவே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது இரத்தினசார தேரோ என்ற பௌத்த தேரர் உயிரிழந் தார்.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன் உட்பட நாற்பத்தி இரண்டு பேர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். 1972ஆம் ஆண்டு மே மாதம் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையிலான ஐக்கிய முக்கூட்டு முன்னணி அரசின் நிர்வாகத்திலேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றிருந்தன. இவர்கள் சொல்லொணாத் துன்பங்களை சிறையில் அனுபவித்தனர். அவர்களை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதங்கள்,ஊர்வலங்கள்எனஅஹிம்சை வழியில் போராட்டங்கள் தமிழரசுக் கட்சியினரால் நடத்தப்பட்டன.

1973ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வேலணைக்கு வருகை தந்த தபால் தந்தி தொலைதொடர்பு அமைச்சராக இருந்தவரான அமைச்சர் குமாரசூரியருக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நிதி அமைச்சராக இருந்தவரான டாக்டர் என்.எம்.பெரேரா யாழ்ப்பாணம் வந்தபோது பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சுகாதார அமைச்சராக இருந்தவரான ஆரியதாஸ பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய போதும் அவருக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அப்போதைய ஆட்சியினர் தமிழினத்தைப் பல்வேறு வழிகளில் நசுக்குவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளை எதிர்த்து அஹிம்சைப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

### உலகத் தமிழராய்ச்சி மாநாடு

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்காம் திகதி தொடக்கம் ஜனவரி பத்தாம் திகதி வரை அரசியல் கலப்பற்ற வகையில் யாழ்ப்பாண நகரில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு வெற்றிகரமாகவும் கோலாகலமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிறிமாவோவின் அரசு தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத் தில் நடத்துவதற்கு சம்மதிக்கவேயில்லை. மாறாக பல இடையூறுகளை விளைவித்தது.

ஜனவரி 10ஆம் நாள் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக ஏராளமான மக்கள் ஒன்று கூடி இறுதிநாள் நிகழ்வுகளில் தமிழுணர்வு பொங்க கலந்து கொண்டிருந்த வேளையில், இரவுப் பொழுதில் பொலிஸார் எவ்வித காரணமுமின்றி தாக்குதல்களை நடத்தியதன் விளைவாக மின்சாரம் தாக்கி ஒன்பது தமிழர்கள் சாவடைந்தார்கள். பொலிஸார் மின்சாரக் கம்பிகளைச் சுட்டு வீழ்த்தியதனால் மின்சாரம் பாய்ந்த நிலையில் அறுந்த மின்சாரக் கம்பிகள் நிலத்தில் வீழ்ந்திருந்தன. நாலா புறமும் மக்கள் சிதறி ஓடிய வேளையில் மின்சாரக் கம்பிகளுக்குள் அகப்பட்டு உயிரிழந்தனர். இப்படித்திட்டமிட்டே சிறிமாவோவின் அரசும், அரசினதும் அடிவருடிகளும் சேர்ந்து ஒன்பது தமிழர்களை சாகடித்தனர்.

இந்தச் சாவுகள் தொடர்பான விசாரணை இடம்பெற்றது. விசாரணைக்குழு இந்த மரணங்கள் யாவற்றுக்கும் பொலிஸாரே பொறுப்பு எனத் தீர்ப்பளித்தது. சிறிமாவோவின் அரசானது இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாது தூக்கி எறிந்தது.

> **அறுபத்தி ஏழு வருடங்களாக தமிழர்கள் மீது இனவாதம் , இனப்பகை என்பன எங்கிருந்து ஆரம்பித்தது? தொடர்ந்து இதனை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் யார்? என்பதையெல்லாம் வரலாற்று பதிவுகள் சொல்லிக் கொண்டேயிருக்கும்?**

### திருகோணமலை படுகொலைச் சம்பவம்

முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ முதலாவது தடவையாகப் பதவியேற்ற பின்னர் 2006ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதி அன்று பெரும் சோகத்தை தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்திய திட்டமிட்ட படுகொலைச் சம்பவம் திருகோணமலையில் இரவுப் பொழுதில் இடம்பெற்றது. திருகோணமலை டொக்யாட் வீதியில் அமைந்துள்ள கடற்கரைக்கு முன்பாக ஐந்து உயர்தர வகுப்பு மாணவர்கள் காட்டுமிராண்டித்தனமாக துடிதுடிக்க ஆயுதம் தாங்கிய படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஐந்து மாணவர்களினதும் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன. பாதுகாப்புப் படையினரோ அவர்கள் பயங்கரவாதிகள் என உறவினர்களிடம் கூறி அச்சுறுத்தினர். அவர்கள் பயங்கரவாதிகள் தான் என ஒத்துக் கொண்டால் மட்டுமே சடலங்களை பொறுப்பேற்க முடியும் என பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர். இது 2006 ஜனவரி இரண்டாம் திகதி மிக முக்கியமான சம்பவமாகப் பதிவாகியுள்ளது.

படையினரே ஐந்து மாணவர்களை சுட்டுப்படுகொலை செய்தனர் என்ற விடயத்தை வெளி உலகுக்கு பகிரங்கப்படுத்தியதன் விளைவாக சுடரொளியின் ஊடகவியலாளர் சுகிர்தராஜன் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். 2006 ஜனவரி 25இல் இந்தச் சம்பவம் திருகோணமலையில் இடம்பெற்றது.

### குமார் பொன்னம்பலம் மறைவு

தமிழின விடுதலைக்காக கொழும்புத் தலைநகரிலிருந்து குரல் கொடுத்த சட்ட மேதையான தமிழ்த் தலைவர்களில் ஒருவராகத் தலைநிமிர்ந்து நின்ற குமார் பொன்னம்பலம் 2000 ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி கொழும்புத் தலைநகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். சந்திரிகாவின் அன்றைய அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட அடக்கு முறைகளையும், மனித உரிமை மீறல்களையும் வெளி உலகுக்குக் கொண்டு வந்தவர் குமார் பொன்னம்பலம் ஆவார்.

1987ஆம் ஆண்டு ஜனவரி 28,29,30ஆகிய நாள்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச் சோலையில் நிகழ்ந்தேறிய கொலை வெறியை தமிழர்கள் சுலபமாக மறந்து விட மாட்டார்கள். விஷேட அதிரப் படையினர் கொக்கட்டிச் சோலைப் பிரதேசக் கிராமங்கள் மீது நடத்திய இந்தத் தாக்குதல்களில் இறால் பண்ணைத் தொழிலாளர்கள் உட்பட 133 பேர் படுகொலை செய்யப்பட்டனர். 12பேர் வரையில் காணாமற் போயினர். மட்டக்களப்புக்கு மேற்கே உள்ள ஆறு கிராமங்களைச் சுற்றி வளைத்த விஷேட அதிரடிப்படையினர் தரை மற்றும் வான்வழியாக நடத்திய தாக்குதல்களிலேயே அந்தத் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இவ்வாறு ஜனவரி மாதம் என்பது தமிழர்களது வாழ்வில் துன்பங்களை ஏற்படுத்தும் ஒன்றாகவே அமைந்திருந்தது.


இந்த ஆண்டின் ஜனவரி மாதம் மஹிந்த தோற்கடிக்கப்பட்டதும் மைத்திரி பால சிறிசேன ஜனாதிபதியாகியதும் தமிழர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.15

வட்டுக்கோட்டை தெக்கணாப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று வியாழக் கிழமை காலை விசேட பூசை வழிபாடுகளும் பொங்கல் நிகழ்வும் இடம்பெறுவதுடன் இன்று மாலை தொடக்கம் தினமும் பன்னிரு திருமுறை நிகழ்வும் இடம் பெற உள்ளது.


29 ஆவது ஆண்டு விழா



ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் வதிரி

29 ஆவது ஆண்டு விழா இன்று (15.01.2015) வியாழக்கிழமை தைப்பொங்கல் தினத்தன்று பிரசாந்தி நிலையம் சாயிதீபம் நெல்லியடியில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது

உள்ளத் தூய்மை, சொல்தூய்மை, செயல்தூய்மை, உள்ளவர்களிடம் சுவாமி உறைந்திருப்பார். சாயி அன்பர்கள் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகிய ஐந்து விழுமியங்களையும் செயற்படுத்தவேண்டும் என சுவாமி அருளியுள்ளார்கள்.

சொற்பொழிவு: "சுவாமி அவதாரம்"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாயிராம் வே. கந்தசாமி - தலைவர்.

CEYLON THEATRES

எமது ரசிகர்கள் அனைவருக்கும்

இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள் !

இப்பொழுது திரையில்



சியான் விக்ரம் எமிஜக்ஸன் நடித்த ஐ

A.R. ரஹ்மான் / ஷங்கர்

விஷால் நடிக்கும் சுந்தர். C யின் ஆம்பள

தயாரிப்பு விஷால்

Majestic Cineplex Jaffna கார்கில்ஸ் ஸ்குவெயர் (யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

8.30am, 12.00noon, 3.30pm, 7.00pm, 10.30pm

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com 021-2227712

செல்லா சினிமா யாழ்ப்பாணம்



தைப்பொங்கல் வெளியீடு AC / DTS

40அடி அகலம் LED திரையில்

• இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான தயாரிப்பில் சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில் ஐ

காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30

முற்றிலும் குளிரூட்டப்பட்டது

மணப்பெண்கள் தேவை

1978, Engineer uk PR- பாவம் 05 1977,1984 விரிவுரையாளர்களுக்கும் 1977 கூட்டுத்தாபன ஊழியர் 1986 Engineer சிங்கப்பூர், இலங்கை பாவம் 05 ஆகியோருக்கு தகுந்த மணப்பெண்களும். 1980 ஆசிரியர், 1982 வங்கியாளர் பாவம் 20 ஆகியோருக்கு சைவபோசன மணப்பெண் களும் தேவை.

தொடர்பு: 077 211 5783, 077 463 4451, 075 097 9712 (45.3.7)

VAN விற்பனைக்கு

JD-XXXX டொல்பின் DX, 1999, 5L, A/WEEL A/SEAT, LH - 172, 20, 21.22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பார்வையிடலாம்.

தொடர்பு - 071 841 7229 (55729) (45.3.7)

தனி/குழு வகுப்புக்கள்

Home Visited Classes CHEMISTRY / BIOLOGY (இரு மொழிகளிலும்)

நரேந்திரசிங்கம் 077 773 0840 (4.3.7)

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

6th Jaffna International Trade Fair

உயர் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல்

கல்வி யாழ்ப்பாணம்

JITF 2015

ஜனவரி 23ம், 24ம் மற்றும் 25ம் திகதிகளில்

மு.ப.10.00 மணி தொடக்கம் மாலை 08.00 மணி வரை

யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில் (சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக)





தினசரி இசை நிகழ்ச்சி

DAILY MUSICAL SHOWS & STUNT RIDERS Show

MAIN SPONSOR STERLING AFTER CARE GUARANTEE

www.jitf.lk

Sri Lanka Export Development Board LECS LANKA EXHIBITION BOC Britex

## தொடர்ச்சி

# மைத்திரியின் 100 நாள் வேலைத்திட்டம்

36. நாட்டின் வளர்ச்சிக்கு அர்ப்பணிக்கும் உள்நாட்டு வியாபார சமூகத்தினரை உருவாக்குவதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு சிறிய நிபந்தனையுடனான இலகு கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தல்.

37. ஏற்றுமதியை அதிகரித்தல் மற்றும் தொழில் வாய்ப்பை அதிகரித்தலை நோக்காகக் கொண்டு GSP+ உதவியை மீண்டும் பெற்றுக்கொடுத்தல்.

38. தற்போது நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கியை ஒன்றிணைக்கும் வேலைத் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருதல்.

39. சிறிய கடன் கட்டுப்பாடு செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு சுயாதீன அதிகார சபையை உருவாக்குதல்.

40. சிறிய முயற்சியாளர்களைப் பாதுகாப்பதற்காக அரச பணியகத்தை ஸ்தாபித்தல்

41. முச்சக்கர வண்டித் துறைக்காக முச்சக்கரவண்டி உரிமையாளர்கள்,வங்கிப் பிரதிநிதிகள் உள்ளடங்கிய அரச அலுவலகத்தை உருவாக்குதல்.

42. வரவு – செலவுத் திட்டத்தில் இலவச சுகாதாரத்துக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 1.8வீதம் வரையான தொகையை 3வீதமாக அதிகரித்தல்.

43. அரச வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக வரும் நோயாளிக்கு தேவையான அனைத்து மருந்துகளும் குறைவில்லாமல் வைத்தியசாலைகளிலேயே வழங்குதல்.

44. அரச வைத்திய சாலைகளில் அறுவைச் சிகிச்சைக்காக பட்டியலில் இணைத்துள்ள நோயாளிகளினதும் அறுவை சிகிச்சைகளை பூர்த்தி செய்ய அவசர வேலைத்திட்டம் ஒன்றை முன்வைத்தல்.

45. அரச வைத்தியசாலைகளில் வெளி நோயாளர் பிரிவை இரவு 10.00 மணி வரை திறக்க நடவடிக்கை எடுத்தல்.

46. சிறுநீரக நோய்க்கு மூல காரணி என சந்தேகிக்கப்படும் களைநாசினி வகை, ஏனைய விவசாய இரசாயன பொருள்களுக்கு இடைக்காலத் தடை விதித்தல் மற்றும் சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்கு குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டத்தை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

47. உணவு, அழகுசாதனப் பொருள்கள் மற்றும் சேவை, ஔடதம் போன்ற அனைத்து நுகர்வுப் பொருள்கள் கொள்வனவுக்காக வலுவான நிறுவகத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்தல்.

48. ஆயுள்வேத வைத்திய சேவையை வலுப் படுத்த நடவடிக்கை எடுத்தல்.

49. அனைத்து மேலைத்தேய, கீழைத்தேய மற்றும் தேசிய வைத்திய முறையை சிறந்த முறையில் ஒன்றிணைத்து ஒன்றிணைந்த சேவையினை மக்களுக்கு வழங்கத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

50. ஹெரோயின், கேரள கஞ்சா, உட்பட உள்ளிட்ட அனைத்து போதைவஸ்துக்களையும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் முழுமையாக அகற்ற முன்னுரிமை வழங்குதல் மற்றும் தற்போது போதைப் பொருள்களுக்கு அடிமையாகியுள்ள இளைஞர்களை புனர்வாழ்வளிப்பதற்காக நாடளாவியரீதியில் உடனடி செயற்றிட்டத்தை வெளிநாட்டு உதவியுடன் முன்னெடுத்தல்.

51. போதைவஸ்து வியாபாரிகளைச் சுற்றி வளைப்பதற்காக ஒன்றிணைந்த விஷேட படையணியை உருவாக்குதல்.

52. புகையிலை உற்பத்திப் பொதிகளில் பட ரீதியான சுகாதார எச்சரிக்கையை 80வீதம் வரை அதிகரித்தல்.

53. கசினோ அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்தல்.

54. சுங்கவரி செலுத்தாமல் மேற்கொள்ளப்படும் எதனோல் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தல்.

55. தற்போது இலவச கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள 1.7 வீதம் வரையான ஒதுக்கீட்டை 6 வீதம் வரை இலக்கை நோக்கி நகர்தலை ஆரம்பித்தல்.

56. உயர் கல்வி அமைச்சரினால் கைப்பற்றப்பட்டுள்ளபல்கலைக்கழகஅதிகாரத்துவத்தை மானியங்கள் ஆணைக் குழுவின் ஊடாக மீண்டும் பல்கலைக் கழகங்களுக்கு பெற்றுக்கொடுத்து அரசியல் தீர்மானத்துக்கு உட்பட்டுள்ள பல்கலைக்கழகத்தை அதிலிருந்து மீட்டல்.

57. பல்கலைக்கழகமஹாபொலபுலமைப் பரிசிலைரூபா 5000 வரை அதிகரித்தல்.

58. உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியடைந்த அனைவருக்கும் உயர் டிப்ளோமா அல்லது பட்டப்படிப்பு வரை கல்விகற்கத் தேவையான அவகாசத்தை வழங்குதல்.

59. பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு பிள்ளைகளை இணைத்துக் கொள்ளும் போது சாதாரண,முறையான திட்டத்தை உருவாக்குதல். முதலாம் ஆண்டுக்கு அனுமதிக்கும் போது தற்போது கவனத்தில் கொள்ளப்படாதிருக்கும் பிள்ளைகளுக்கு உதவியளித்தல்.

60. பாடசாலைகளுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும் போது தற்போது உள்ள தாமதத்தை முற்றாக இல்லாமல் செய்து முதலாம் தவணை ஆரம்பமாகும் போது அனைத்துப் பிள்ளைகளுக்கும் பாடசாலை அனுமதியைப் பெற்றுக்கொடுத்தலை சான்றுப்படுத்தல்.

CW K




## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.
1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.
1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்
1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ..............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................
அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் .........இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்
உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank
Sisu Udana

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

30 அகவையில் உதயன்

# செய்திகள்

## ராஜபக்ஷ குடும்பத்திடமிருந்த கடைசி அதிகாரமும் போனது

கொழும்பு, ஜன. 15
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் சமல் ராஜபக்ஷவின் புதல்வர் சசீந்திர ராஜபக்ஷவின் ஆளுகைக்கு உட்பட்ட ஊவா மாகாண சபையின் அதிகாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் வசமாகியது. அதன் புதிய முதலமைச்சராக, ஹரின் பெர்னாண்டோ நேற்றுப் பதவியேற்றார்.
ஊவா மாகாண ஆளுநர் நந்தா மத்திபூ முன்னிலையில் நேற்று மதியம், முதலமைச்சராக அவர் பதவியேற்றுக் கொண்டார்.
கடந்த செப்ரெம்பர் மாதம் நடந்த ஊவா மாகாணசபைத் தேர்தலில் மயிரிழைப் பெரும்பான்மையுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. இதன் முதலமைச்சராக, சசீந்திர ராஜபக்ஷ நியமிக்கப்பட்டிருந்தார். ஜனாதி பதித் தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததையடுத்து, ஊவா மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்த நான்கு உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க முன் வந்தனர்.
அதனால் எதிர்கட்சித் தலைவர் ஹரின் பெர்னான்டோவுக்கு 17 உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்தது. இதனையடுத்து முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு, ஊவா மாகாண ஆளுநருக்கு கடந்த திங்கட்கிழமை கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கமைய நேற்றைய தினம் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார். (ற-5)

## பார்வைக் குறைபாடு உடைய மாணவருக்கு கண்ணாடிகள்

தென்மராட்சி,ஜன.15
சர்வதேச லயன்ஸ்கழக 306 பி1மாவட்ட பார்வைக்கு முதலிடம் பிரிவினரால் யாழ்.மாவட்டத்திலுள்ள பார்வையில் குறைபாடு காணப்படும் 250 மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.
இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் மாவட்ட பார்வைக்கு முதலிடம் பிரிவினர் தகுதியுடைய மாணவர்களைத் தெரிவு செய்யுமாறு அந்தந்த கல்வி வலயங்களுக்கு அறிவித்துள்ளனர்.
யாழ்மாவட்டத்தில் உள்ள ஐந்துகல்வி வலயங்களிலிருந்து தலா 50 மாணவர்கள் வீதம் தெரிவு செய்து விவரங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதுவரை மாணவர்களுக்கு வாசிப்பதற்கான மூக்குக் கண்ணாடிகளே வழங்கப்பட்டதாகவும் இந்தத் தடவை பார்வையில் குறைபாடு (தூரப் பார்வை, கிட்டிய பார்வை) காணப்படும் மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு advt@uthayan.com 0215671111

### மரண அறிவித்தல்

**திருமதி இளையதம்பி மங்கயற்கரசி**



யாழ்ப்பாணம் கந்தர்மடம் உடையார் வளவைச் சேர்ந்த திருமதி இளையதம்பி மங்கயற்கரசி தனது 100 ஆவது வயதில் 14. 01. 2015 புதன் கிழமை சிவபத மடைந் தார்.


அன்னார் காலஞ்சென்ற உடையார் நாகநாதன் சின்னத்தம்பி- செல்லம்மா தம்பதியரின் ஒரே மகளும், மட்டுவில் பதி காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் சோதிடமணி இளையதம்பியின் அன்பு மனை வியும், திருமதி ச. நீலாய தா ட்சி, காலஞ் சென்ற வர்களான திருமதி சி. கம லாம் பிகை, திருமதி நா. விமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2015) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் பி.பகல் 3.00 மணி யளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16, உடையார் ஒழுங்கை,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 3150497

### மரண அறிவித்தல்



**நாககுமார் நவரஞ்சன் (ரஞ்சன்)**

காரைநகரைச் சொந்த இடமாகவும் Pendle hill ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாககுமார் நவரஞ்சன் கடந்த (11.01.2015 ) ஞாயிற்றுக் கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் நாககுமார் மற்றும் நவராணி தம்பதியரின் அன்பு மகனும், ஹெமாபிந்துவின் அன்புக் கணவரும், ஹாசினி, கிருத்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், நவரமணன், நவரஞ்சினி, நவரூபி ஆகியோரின் சகோதரரும், நீலகண்டம் ராதாகிருஸ் ணன் -வீராஞ்சனே யகுமாரி தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரா, கபில், ஸ்ரீஸ்கந்தவேள், சஞ்சயன், சங்கீதை, திலீபன் ஆகியோரின் மைத்துனரும், ஆறுமுகம் -செல்லம்மா தம்பதியரின் பேரனும், நவநீதகிருஷ்ணன், சோதிமலர், நவநீலயோகராசா, திரியம்பகி ஆகியோரின் மருமகனும், சந்திரராணி, ரோகிணி, தவராசா, தவசீலன் ஆகியோரின் பெறாமகனும், விதுஷா, சிந்துசா, பிருந்தா, கீர்த்திகன், ஹரிப்பிரியன், கரணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2015) வெள்ளிக்கிழமை மு.பகல். 9.00 மணிக்கு 214/5, இராமநாதன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. நவநீதகிருஷ்ணன் (மாமா)
நா. நவரமணன் (சகோதரன்)

### மரண அறிவித்தல்

**மாணிக்கம் கருணாகரன்**



காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கருணாகரன் கடந்த (11.01.2015) ஞாயிற்றுக் கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், Jasmin, Babyrany, Sobana, Yalini, Piravina, Dean, ஆகியோரின் பாசமிகு தந்தையும், Joseph denzil, Abraham (London) ஆகியோரின் மாமனும், Dino, Jenilia, Roshan, Jessica, Delani, jenifer, Benoit, ஆகியோரின் பேரனும், கணேசன், நாகேஸ்வரி, தில்லைநாதன், காலஞ்சென்ற தில்லை விநாயகம் மற்றும் செல்வநாயகம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.01.2015) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: முருகையா - ஜீவராணி (சாந்தி)
குடும்பத்தினர்.

**திருமதி செல்வக்கலை கதிரைவாசன் (கனடா)**



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வக்கலை கதிரைவாசன் 13.01.2015 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கந்தையா கதிரைவாசனின் அன்பு மனைவியும், சஞ்ஜே, மாதுசன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான சங்கீதபூஷணம் செல்லத்துரை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கந்தையா -கதிரைமலை தம்பதியரின் மருமகளும், செல்வராணி சகாதேவன், செல்வராஜேஸ்வரி பாலசுந்தரம், செல்வமணி இராஜேஸ்வரன், செல்வக்குமாரி, ஞானேஸ்வரன், செல்வஞானம் சந்திரதேவன், செல்வக்கலா ஜெயபாலா, விக்னேஸ்வரன், செல்வக்குமரன், செல்வரத்தினம், செல்வராஜா, செல்வக்கமலன் ஆகியோரின் சகோதரியும், சகுந்தலாதேவி, சாந்தி, மஞ்சுளா, சைரா, சுபானி, சுசீலர், காலஞ்சென்றவர்களான கேதாரகௌரி சீவரத்தினம், தேவகௌரி ஞானானந்தன், யோகௌரி மற்றும் தருமகௌரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2015) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு (கனடா நேரப்படி) ரொரண்டோ கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு.

தகவல்:
செ.விக்னேஸ்வரன்,
(இளைப்பாறிய கிராம அலுவலர்)

55820) (45.3.7)

தோற்றம்
26 . 04 . 1941



மறைவு
14 . 01 . 2015

**திருமதி தங்கமுத்து சிவபாலசுப்பிரமணியம்**

வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட் டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து சிவபாலசுப்பிரமணியம் (14.01.2015) புதன் கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன் னம்பலம்- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி-சிவபாலசுப்பிரமணியத்தின் (பாலா-தொண்டர்) அன்பு மனைவியும், து. அன்னலக்ஸ்மி (கொழும்பு), தெ. சறோஜினி (கொழும்பு), காலஞ்சென்றவர்களான பொ. நித்தியலஷ்மி , பொ. தனலக்ஷ்மி மற்றும் Dr. பொ. இராம நாதன் (லண் டன்), பொ. பத்மநாதன் (வட்டு கிழக்கு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், தேவசகாயம், பவானி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், கரிகரன் (ஆஸ்திரேலியா), பாலேந்திரன் (லண்டன்), சிராணி (இலங்கை), கு. பிரியதர்சனி (லண்டன்), தேவதர்சினி (ஆஸ்திரேலியா), மனோகரன் (துபாய்) ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2015) வியாழக்கிழமை மு.பகல் 11.00 மணிக்கு அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக சங்கானை ஓடக்கரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை

தகவல்:
T. ஜெயந்தினி (பெறாமகள்),
076 66 87602

# வரப்பிரசாதங்களோடு வரவிருக்கின்றது வரவு-செலவு திட்டம்

## 10 அத்தியாவசிய பொருள்களின் விலை குறைப்பு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உறுதி

கொழும்பு, ஜன.15
பெற்றோல் உட்பட பத்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்கும் வகையிலான இடைக்கால வரவு– செலவுத் திட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று – நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
பதவியேற்றதின் பின்னர் தனது கடமைகளைப் பொறுப்பேற்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
பொருளாதாரத்தின் உண்மையான நிலை என்ன என்பது குறித்து தெளிவூட்ட வேண்டிய தேவை காணப்படுகின்றது. 100 நாள்களுக்கு 10 நுகர்வுப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படும் என்று பொது மக்களுக்கு உறுதி வழங்கப்பட்டது. அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படும் – என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
(ற–5)



## நாமலுக்கு கொலை அச்சுறுத்தலாம்!

கொழும்பு, ஜன.15
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷவுக்குக்கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசியலிலிருந்து விலகிக்கொள்ளுமாறு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



தங்காலை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமாலை நாடாளுமன்றஉறுப்பினர்நாமல்ராஜபக்ஷ முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன இதனை உறுதி செய்துள்ளார்.
நள்ளிரவு 12 மணிமுதல் 12.40 மணி வரையில் தொலைபேசி மூலம் இவ்வாறு மிரட்டல் விடுக்கப்பட்டது என்றும் – சுமார் நாற்பது நிமிடங்கள் அரசியலை விட்டு விலகிச் செல்லுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது என்றும் – அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக நாமல் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ற)

## பிரபல்யம் அடைவதற்காக தீர்மானம் எடுக்கப்படாது

### கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.15
பிரபல்யம் அடைவதற்காகத் தீர்மானங்களை எடுக்கப் போவதில்லை என்று கூறியுள்ளார் கல்வி அமைச்சராகப் புதிதாகப் பதவியேற்றுள்ள அகில விராஜ் காரியவசம்.
கல்வித் துறையில் பல்வேறு பிரச்சினைகளை அடையாளம் கண்டுள்ளேன். அவற்றுக்குத் தீர்வு வழங்கி கல்வித்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
கல்வித்துறைசார் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். அரசியலில் இருந்து விடுபட்டு கல்வித்துறை சார் சேவைகளை ஆற்ற வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
நாட்டின் கல்வித்துறை தொடர்பில் புரட்சிகரமான மாற்றங்கள் கொண்டு வரப்படும். ஆயினும் அவை பிரபல்யம் அடைவதற்கான மாற்றங்களாக இருக்காது"– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
கல்வி அமைச்சின் பொறுப்புக்களை ஏற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.(ற)


## அமைச்சர்களுடைய பாதுகாப்பு குறைப்பு

### பிரதமர் ரணில் உத்தரவு

கொழும்பு, ஜன.15
புதிய அரசில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் பாதுகாப்பு குறைக்கப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவுபிறப்பித்துள்ளார்.
குறிப்பாக முப்படையினரின் பாதுகாப்பு எந்தவொரு அமைச்சருக்கோ – பிரதிஅமைச்சருக்கோ வழங்கப்படக் கூடாது என்றும் பிரதமர் தெரிவித்துள் ளார்.
அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களே அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளதுடன், அதுவும் அமைச்சர்களுக்கு வழமையாக வழங்கப்படும் பாதுகாப்பே வழங்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.
அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு எவ்வாறான பாதுகாப்பு வழங்குவது என்பது குறித்து ஆராயும் நோக்கில் குழுவொன்றை பிரதமர் நியமிக்க உள்ளார் என்றும்– இந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கான பாதுகாப்பு உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட உள்ளது என்றும் – தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் வாகனத் தொடரணிகளுடன் பயணம் செய்வதை தவிர்த்துக்கொள்ளுமாறுபிரதமர் பணிப்புரை விடுத் துள்ளார்.
அமைச்சர்களின் வாகனங்களுக்கு மேலதிகமாக ஒரு டிபென்டர் ரக வாகனமொன்றை பயன்படுத்தினால் போதுமானது என அவர் அறிவுறுத்தியுள்ளதுடன், வீதியில் ஏனைய மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பயணங்கள் மேற்கொள்ளக் கூடாது என்றும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ற)

## யோஷித மறைத்த விமானம் சிக்கியது

### நாரஹன்பிட்டி பொருளாதார மையத்திலிருந்து



கொழும்பு, ஜன.15
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ பயன்படுத்தியதாகக் கூறப்படும் இலகு ரக விமானம் ஒன்று பொலிஸாரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.
கொழும்பு நாரஹன்பிட்டிய பொருளாதார மையத்தின் அரச களஞ்சியம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே குறித்த விமானம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
பொலிஸாருக்குக் கிடைத்த தொலைபேசித் தகவலை அடுத்தே அவர்கள் இந்த விமானத்தைக் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் அந்த இடத்தில் இருந்து மஹிந்த ராஜபக்ஷவின் மற்றொரு மகனான நாமல் ராஜபக்ஷவின் சி.எஸ்.என். நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
அதேவேளை, குறித்த சிறிய ரக விமானம் திரைப்படத் தயாரிப்பாளர் சந்திரன் ரத்தினத்துடையது என்றும் – யோஷித கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அவருக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.
தனது நண்பருடன் இணைந்து தான் – ஆரம்பித்த விமானங்களைச் செலுத்துவதற்கான பயிற்சி நிலையமொன்றில் குறித்த விமானத்தைப் பயன்படுத்தியதாக சந்திரன் ரத்தினம் கூறியுள்ளார். (ற)

## சஜின்வாஸ் வேண்டாம் மக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன.15
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவைஅரசில் இணைத்துக்கொள்ளக்கூடாது என்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.
பலப்பிட்டிய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டுள்ளது.
அதேவேளை, சஜின்வாஸை புதிய அரசில் இணைத்துக் கொண்டால் தீக்குளிக்கப் போவதாக பொதுமகன் ஒருவர் பஸ் நிலையக் கூரை மீது ஏறி போராட்டத்தை மேற்கொண்டார். பின்னர் அவர் பலத்த போராட்டத்தின் மத்தியில் கீழே இறக்கப்பட்டார். (ற)

# உலகச் செய்திகள்

## பிரிவினைவாதிகள் தாக்குதல் உக்ரைனில் 12பேர் சாவு

கீவ், ஜன. 15



உக்ரைனின் கிழக்கு பகுதியில் பஸ் மீது ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் துப்பாக்கித் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இந்தத்தாக்குதலில் 12 பேர் சாவடைந்துள்ளார்கள்.மேலும் 20 பேர் படுகாயம் அடைந்தனர் என்று உக்ரைன் அரசு தரப்பு தெரிவித்துள்ளது.

உக்ரைன் அரசுக்கு எதிராக மீண்டும் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் தாக்குதலைத் தொடர்ந்து வருகின்றனர். இதனால் அங்கு போர் நிறுத்த ஒப்பந்தம் கேள்விக்குறியாக மாறி வருகிறது. கருங்கடல் பகுதியில் உக்ரைனின் கிழக்குபகுதியைசமீபத்தில்ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் வாக்கெடுப்பு நடத்தி ரஷ்யாவுடன் இணைத்து கொண்டனர். பின்னர் படிப்படியாக பல்வேறு பகுதிகளையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனால்ரஷ்யாமீதுஅமெரிக்காஉட்பட பல்வேறு ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்தன. ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பின் முயற்சியால் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளும் உக்ரைன் அரசும் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு முன்வந்தனர்.

இந்தநிலையில், கிழக்கு உக்ரைனுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை கொண்டு செல்லும்வீதி , கடல் மற்றும் வான்வழி போக்குவரத்தை உக்ரைன் அரசு தடை செய்தது. இதனைத் தொடர்ந்து, ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் மீண்டும் தங்களது வன்முறைத் தாக்குதல்களை தொடர்ந்து வருகின்றனர். இதனால் இங்கு மீண்டும் யுத்த அபாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு உடனடித் தீர்வைக் காண்பதற்கு இருதரப்பிலும் பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உக்ரைனில் செயற்படும் நேட்டோ படை தளபதி தெரிவித்துள்ளார்.



## தூக்கம் கல்விக்கு அவசியம்

### ஐரோப்பிய விஞ்ஞானிகள் தெரிவிப்பு

லண்டன், ஜன. 15

வாழ்க்கையின் மிக இளம் பராயத்தில் கல்வி கற்பதற்கு தூக்கம் முக்கியமாக உதவுகிறது என்று ஐரோப்பிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

குழந்தைகள் புதிய தகவல்களை கிரகித்துக்கொண்டவுடன் தூங்கப்போனால் அந்தத்தகவல்களைச் சிறந்த முறையில் புரிந்துகொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 மாதத்துக்குட்பட்ட 216 குழந்தைகளுக்கு புதிய வேலைகளை கை பொம்மைகள் மூலம் செய்ய விஞ்ஞானிகள் கற்றுக்கொடுத்தார்கள்.

இந்த விளையாட்டுநேரம்முடிந்தவுடன் நான்கு மணிநேரத்துக்குள் தூங்கிய குழந்தைகளால் அடுத்த நாள், அவர்கள் கற்றுக்கொண்டவற்றில் அரைவாசியை நினைவில் வைத்துக்கொள்ள முடிந்தது.

ஆனால் தூங்காத குழந்தைகளால் எந்த விடயத்தையம் நினைவில் வைத்துக்கொள்ளமுடியவில்லை.

இந்த ஆராய்ச்சி முடிவுகள் ஏன் குழந்தைகள் அவைகளின் பெரும்பாலான நேரத்தை தூங்கியே கழிக்கின்றன என்பதையும், தூங்கப்போகுமுன்னர் அவைகளுக்கு படித்துக்காட்டுவதன் முக்கியத்துவத்தையும் விளக்க உதவுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித் துள்ளனர்.



இராட்சத காளானொன்று சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தக்காளான் 3 அடி அகலமும்,16.4 கிலோகிராம் நிறையையும் கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்த ஆண்டின் சூரியனின் முதல் கிளரொளி



2015ஆம் ஆண்டின் சூரியனின் முதல்சூரியக்கிளரொளிபடத்தை நாசா நிறுவனம் வெளியிட்டுள்ளது. சூரியனின் மேற்பரப்பில் சக்தி வாய்ந்த கதிர்வீச்சு வெடித்து சிதறிய நிகழ்வினை நாசா நிறுவனம் படம்எடுத்து வெளியிட்டுள்ளது. சூரியக் கிளரொளி வெடித்துச் சிதறுவதால் பூமிக்கு எதுவிதமான பாதிப்பும் இருக்காது என்றும் அந்தக் கதிர்வீச்சு வெடித்துச் சிதறுவதை தடுத்து நிறுத்தவும் முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக மக்களுக்கு மோடி பொங்கல் வாழ்த்து:



பிரதமர் நரேந்திர மோடி இன்று தமிழக மக்களுக்கு பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் வேற்றுமையில் ஒற்றுமையாக இந்த நாள் திகழ்கிறது கடின உழைப்பை மேற்கொண்ட விவசாயிகளுக்கு சிறப்பான அறுவடையும் வளமும் கிடைக்க பொங்கல் திருநாளில் வாழ்த்துகிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்

## டைட்டானிக் கப்பலிலிருந்து உயிர் தப்பியவரது கடிதம் ஏலம்



வொஷிங்டன், ஜன.15

கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் இருந்து அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் சென்ற டைட்டானிக் ஆடம்பர சொகுசுக் கப்பல் அட்லாண்டிக் கடலில் பனிப்பாறையில் மோதி மூழ்கியது. அதில் 1000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் உயிர் தப்பினர். இந்த நிலையில் அவ்விதம் உயிர் பிழைத்த பெண் லூசி டப் கேண்டான் என்பவரின் கடிதம் அமெரிக்காவில் அடுத்த வாரம் ஏலத்தில் விடப்படுகிறது.

இங்கிலாந்தைச் சேர்ந்த பெரும் பணக்காரரான கடந்த 1912ஆம் ஆண்டில் அவர் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார். அவர் உயிர் காக்கும் படகில் ஏறி உயிர் பிழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் தொடரும் அட்டூழியம்

### சிரியாவில் உளவாளிகளை கொன்ற 10 வயதுச் சிறுவன்

சிரியாவில் இரு உளவாளிகளை 10 வயது சிறுவன் சுட்டுக்கொல்லும் வீடியோவை ஐ.எஸ் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர். சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. அவர்கள் இங்கு கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைத்து புதிய இஸ்லாமிய நாடொன்றை உருவாக்கியுள்ளனர். தமது அமைப்பில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை இணைத்து அவர்களுக்கு ஆயுத பயிற்சி அளித்து வருகின்றனர். தங்களால் பிடிக்கப்பட்ட வெளிநாட்டினர் மற்றும் இராணுவ வீரர்களை பணயக் கைதிகளாக வைத்துள்ளனர். பலரை தலை துண்டித்து கொலை செய்து வருகின்றனர்.அதனை வீடியோ எடுத்து வெளியிடுகின்றனர்.



முழங்காலில் மண்டியிட்டு இருக்கும் 2 பேரை சிறுவனொருவன் கொடூரமாக துப்பாக்கியால் சுட்டுக் கொல்கிறான். உயிரிழந்த 2 பேரும் ரஷ்யாவை சேர்ந்த உளவாளிகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னதாக அந்தச்சிறுவனின் பேச்சு இடம்பெற்றிருந்தது. தான் கஜகஸ்தானைச் சேர்ந்தவன் என்றும் மதநம்பிக்கை அற்றவர்களை கொலை செய்ய விரும்புவதாகவும் கூறியிருக்கிறான்.

# காஷ்மீர் விவகாரம் குறித்துப் பேச இந்தியாவுக்கு பாகிஸ்தான் நிபந்தனை

இஸ்லாமாபாத், ஜன. 15
காஷ்மீர் விவகாரம் பேச்சுக்கான அட்டவணையில் சேர்த்துக்கொள்ளப்படாவிட்டால், இந்தியாவுடன் பேச்சுவார்த்தையை பாகிஸ்தான் ஆரம்பிக்காது என்று அந்த நாட்டுத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவும், பாகிஸ்தானும் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்' என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜான் கெரி அறிவுறுத்தியுள்ள நிலையில், சர்தாஜ் அஜீஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்

காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களை பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித் சந்தித்தமைக்காக, இரு நாடுகளின் வெளியுறவுத் துறைச் செயலர்கள் அளவிலான பேச்சுவார்த்தையை இந்தியா கடந்த ஓகஸ்ட் மாதம் நிறுத்தி வைத்தது.

அது, பேச்சுவார்த்தையில் இந்தியாவுக்கு ஆர்வமில்லை என்பதையே காட்டுகிறது. காஷ்மீர் பிரச்சினையைத் தவிர்த்துவிட்டு, இந்தியாவுடன் பாகிஸ்தான் பேச்சுவார்த்தைக்கு செல்லாது. எல்லைப் பகுதியில் காரணமின்றி அத்துமீறி எங்கள் மீது இந்தியா தாக்குதல் மேற்கொள்கிறது என்று தெரிவித்தார்.

# கங்கை நதியில் மிதக்கும் பிணங்கள்

## 104 உடல்கள் மீட்பு



சென்னை, ஜன. 15
உத்தரப் பிரதேச மாநிலத்தின் உன்னாவோ மாவட்டத்தில் பாயும் கங்கை நதியில் இருந்து கடந்த 3 மாதங்களில் 104 அடையாளம் தெரியாத உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

கங்கை நதியில் தற்போது தண்ணீரின் அளவு குறைந்திருப்பதால், நதியில் வீசப்படும் உடல்கள் கரை யொதுங்கி மிகுந்த துர்நாற்றம் வீசுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 3 மாதங்களில் மட்டும் கங்கை நதியில் மிதந்து கொண்டிருந்த 104 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இதுவரை இந்த அளவுக்கு உடல்கள் மீட்கப்பட்டதில்லை என்று உள்ளூர் வாசிகள் தெரிவித்துள்ளனர். இந்துக்களின் வழக்கப்படி சாவடையும் நேரத்தில் சிலர் கங்கை நதியில் மூழ்கி தங்கள் உயிரைப் போக்கிக் கொள்வார்கள். சில பகுதிகளில் சாவடைந்தவர்களின் உடல்களை கங்கை நதியில் வீசுவது வழக்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகப் பொலிஸாருக்கு பொங்கல் பதக்கங்கள்

## முதல்வர் பன்னீர்செல்வம் அறிவிப்பு



புதுடில்லி, ஜன. 15
இந்த ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி 1685 தமிழக பொலிஸார் மற்றும் சீருடை அலுவலர்களுக்கு பொங்கல் பதக்கங்கள் வழங்க தமிழக முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ் நாட்டில் பொலிஸார், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை, சிறைத்துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் தமது பணியில் வெளிப்படுத்தும் நிகரற்ற சேவையை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வழக்கத்தையொட்டி இந்த ஆண்டு, 1500 பணியாளர்களுக்கு தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கங்கள் வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸ் பத்திரிகையாளர்களுக்கு மிரட்டல்

பாரிஸ், ஜன. 15
பிரான்ஸில் உள்ள மற்றுமொரு பத்திரிகைக்கு மின்னஞ்சல் மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் மிகப்பெரிய நையாண்டி வாரப் பத்திரிகையான லீ கெனார்ட் என்செய்னுக்கு மின்னஞ்சல் மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இது உங்கள் முறை என்றும் உங்களின் பத்திரிகையாளர்கள் கோடரியால் துண்டு துண்டாக்கப்படுவார்கள் எனவும் அந்த மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பத்திரிகை அலுவலகத்துக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# மலேசியப் பொலிஸாருக்கு சாவுத் தண்டனை

கோலாலம்பூர், ஜன. 15
மலேசியாவில் பிரபல அரசியல் வாதிகளுடன் தொடர்புபடுத்தப்பட்ட மங்கோலியப் பெண் ஒருவரைக் கொன்ற இரண்டு பொலிஸாருக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனையை மலேசியாவின் உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தியிருக்கிறது.

அல்டாண்டுயா ஷாரிபூ என்ற அந்தப் பெண்ணின் உடலின் எச்சங்கள் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு காட்டுப்பகுதியில் மரங்கள் அழிக்கப்பட்ட இடத்தில் கண்டெடுக்கப்பட்டன.

அவரது உடல் எச்சங்கள் இராணுவத்தினர் பயன்படுத்தும் வெடிபொருள்களால் வெடித்தழிக்கப்பட்டிருந்தன.

இந்த இரண்டு பொலிஸாரும் தற்போதைய பிரதமர் நஜிப் ரஜாக் உட்பட உயர் அமைச்சர்கள் சிலருக்கென ஒதுக்கப்பட்டிருந்த மெய்ப்பாதுகாவலர்கள் குழுவில் அங்கம் வகித்தவர்கள்.

அவர்கள் 2009ஆம் ஆண்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட போதிலும் பின்னர் மேல் முறையீட்டில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில் மலேசிய உச்ச நீதிமன்றம் இரண்டு பொலிஸாருக்குமான சாவுத் தண்டனையை உறுதிப்படுத்தியுள்ளது.






குஜராத்தில் நேற்றுத் தைப்பொங்கலை முன்னிட்டு சர்வதேச பட்டம் விடும் திருவிழா கொண்டாடப்பட்டுள்ளது. அதில் இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் ஒபாமா ஆகியோரது உருவப்படங்களுடன் உருவாக்கப்பட்ட பட்டங்கள் விண்ணில் பறந்தன.

# சீனாவில் பொலிஸார் தாக்குதல் 6தீவிரவாதிகள் சாவு



பீஜிங், ஜன. 15
சீனாவில் பொலிஸாரின் நடவடிக்கையில் 6 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

கிழக்கு துர்கிஸ்தான் இஸ்லாமிய இயக்கப் பயங்கரவாதிகள் செயற்பட்டு வரும் ஜின்ஜியாங் மாகாணத்தில் ஷூலே பகுதியில், சந்தேகத்துக்குரிய நபரொருவர் குறித்து பொதுமக்கள் பொலிஸாரிடம் முறையிட்டனர்.

அவரது உடலில் மர்மப் பொருளை மறைத்து வைத்திருந்ததாகப் பொதுமக்கள் தெரிவித்ததையடுத்து, அந்தப்பகுதியிலிருந்த பொலிஸார் அவரை விசாரித்துள்ளனர். விசாரித்துக் கொண்டிருந்த அதிகாரியை அந்த நபர் தாக்க முற்பட்டதுடன், தனது உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ய முயன்றுள்ளார்.

அதனையடுத்து, அவர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதே இடத்தில் மேலும் 5 பேர் தங்களது உடல்களில் மறைத்து வைத்திருந்த வெடிபொருள்களை வெடிக்கச் செய்ய முயன்றபோது, அவர்களை நோக்கியும் பொலிஸார் சுட்டதில் அந்த ஐவரும் உயிரிழந்துள்ளனர்.

அந்தச் சம்பவத்தில் பொதுமக்களுக்கோ பொலிஸாருக்கோ காயம் எதுவும் ஏற்படவில்லை.

ஜின்ஜியாங் மாகாணத்தின் பிரிவினையை வலியுறுத்தி, கிழக்கு துர்கிஸ்தான் இஸ்லாமிய இயக்க பயங்கரவாதிகள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். சீன அரசால் தடை விதிக்கப்பட்டுள்ள அந்தக் குழுவுக்கு அல்குவைதாவுடன் தொடர்புள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தை-02 வெள்ளிக்கிழமை
## 16.01.2015

திதி: ஏகாதசி பி.இ.01.20 மணி வரை
நட்சத்திரம்: அனுசம் பி.இ.05.52 மணி வரை
சுபநேரம்: 06.34-08.04 மணி வரை
இராகுகாலம்: 11.04-12.34 மணி வரை
**ஏகாதசி விரதம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | 8 | | | 6 | |
| | 9 | | 5 | 1 | | 2 | | |
| | 8 | 3 | 4 | 9 | | | | 5 |
| | | 1 | | | 4 | | | 7 |
| | 3 | 2 | 1 | | 7 | 5 | 9 | |
| 4 | | | 2 | | | 3 | | |
| 6 | | | | 2 | 5 | 7 | 3 | |
| | | 8 | | 7 | 9 | | 5 | |
| | 5 | | | 4 | 1 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 8 | 5 | 4 | 6 | 1 | 3 | 2 |
| 2 | 4 | 6 | 7 | 3 | 1 | 8 | 9 | 5 |
| 1 | 3 | 5 | 2 | 9 | 8 | 4 | 6 | 7 |
| 5 | 8 | 7 | 3 | 6 | 4 | 9 | 2 | 1 |
| 9 | 2 | 4 | 1 | 7 | 5 | 6 | 8 | 3 |
| 3 | 6 | 1 | 9 | 8 | 2 | 5 | 7 | 4 |
| 4 | 1 | 9 | 8 | 2 | 3 | 7 | 5 | 6 |
| 6 | 7 | 3 | 4 | 5 | 9 | 2 | 1 | 8 |
| 8 | 5 | 2 | 6 | 1 | 7 | 3 | 4 | 9 |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின் கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இந்த மாயையில் நீ எல்லையற்ற மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய். தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைத்தனம்.

உலகில் உள்ள தீமைகளைப் பற்றியே நாம் வருந்துகிறோம். நம் உள்ளத்தில் எழும் தீயஎண்ணங்களைப் பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. நமது உள்ளத்தை ஒழுங்கு படுத்தினால் இந்த உலகமே ஒழுங்காகிவிடும்.

சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 500 | 600 | 650 | 800 | 600 | 400 |
| நண்டு | 350 | 300 | 350 | 350 | 300 | 300 |
| கணவாய் | 380 | 400 | 300 | 500 | 300 | - |
| பாரை | 420 | 400 | 450 | 500 | 400 | 330 |
| சுறா | 450 | 500 | 400 | 600 | 600 | - |
| சீலா | 400 | 400 | 350 | 400 | 400 | - |
| வினை | 250 | 300 | 300 | 500 | 500 | 300 |
| முரல் | 200 | 250 | 200 | 300 | 300 | - |
| கும்பீளா | 300 | 250 | 280 | 400 | 400 | 250 |
| கிழாக்கன் | 350 | 500 | 400 | 400 | - | - |
| ஒரா | 100 | 300 | 350 | 250 | - | 250 |
| திரளி | 130 | 200 | 250 | 100 | 150 | - |
| நகரை | 300 | 250 | 300 | 300 | 250 | 200 |
| ஆடை | 200 | 150 | 150 | 100 | 100 | 80 |
| ஒட்டி | 100 | 200 | 250 | 200 | 150 | 150 |
| திருக்கை | 100 | 350 | 300 | 180 | 100 | 120 |
| பாலை | 200 | 250 | 250 | 400 | 300 | - |
| வாழை | 180 | 200 | 180 | 300 | - | 200 |
| கொய் | 180 | 150 | 150 | 80 | 100 | - |
| மதனம் | 200 | 250 | 280 | 250 | 200 | 120 |

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கனகாகம் | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 140 | 100 | 120 | 160 | 60 | 100 |
| கத்தரி | 280 | 260 | 180 | 200 | 240 | 240 | 200 |
| கரட் | 140 | 200 | 180 | 220 | 380 | 240 | 350 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 60 | 50 | 60 | 30 |
| பயிற்றை | 250 | 240 | 250 | 240 | 200 | 240 | 250 |
| பாகல் | 350 | 300 | 280 | 340 | - | 240 | 300 |
| கருணைக்கிழங்கு | 50 | 50 | 50 | 60 | 90 | 80 | 45 |
| பெ.வெங்காயம் | 120 | 110 | 120 | 100 | 140 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 120 | 100 | 80 | 160 | 120 | 60 |
| பூசணி | 40 | 50 | 40 | 35 | 60 | 60 | 30 |
| தக்காளி | 160 | 150 | 200 | 200 | 200 | 180 | 220 |
| வாழைக்காய் | 90 | 80 | 80 | 100 | 120 | 100 | 80 |
| கீரை | 20 | 30 | 30 | 20 | 40 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 50 | 30 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 600 | 600 | 600 | 600 | 600 | 600 | 900 |
| புடோல் | 150 | 140 | 140 | 140 | 120 | 120 | 120 |
| கோவா | 140 | 140 | 130 | 140 | 200 | 160 | 140 |
| வெண்டி | 180 | 140 | 170 | 160 | 160 | 120 | 180 |
| போஞ்சி | 320 | 280 | 330 | 340 | 240 | 280 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 280 | 280 | 240 | 350 | 350 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 30 | 40 | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 100 | 80 | 70 |
| தேசிக்காய் | 60 | 80 | 60 | 80 | 40 | 80 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 10 | 20 | 20 |
| கறிமிளகாய் | 400 | 300 | 300 | 350 | 260 | 350 | 450 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 120 | 120 | 180 | 180 |
| பனங்கிழங்கு | 04 | 04 | 04 | 04 | 05 | 05 | 03 |

## இளைஞர் வட்டம்

*சிறிய கைக்குட்டையைச்*
*சட்டைப்பையில் வைப்பது*
*தூய்மையின் நாகரிகம்*
*கூலைசாறும் கண்ணைக் கழுவாது*
*அஞ்சனம் தீட்டி அலைவது*
*அழகின் நாகரிகம் கமக்கட்டுக் கழுவாது*
*சென்டடித்துத் திரிவது வாசனை நாகரிகம்*
*கழுவுதல் மறந்து*
*மேலும் கீழும் துடைப்பது*
*சுத்தத்தின் நாகரிகம் குறுக்குக்கட்டுடன்*
*குளிக்கப்போனவள் மறந்துபோய்*
*அப்படியே பாட்டிக்குப்போவது*
*பாட்டி நாகரிகம்.*
*மேலாடை மறந்து பெண்கள்*
*அப்படியே வேலைக்குப்போவது*
*ஆட்டக்கார ஆடை நாகரிகம் உடைதைக்கப்*
*பஞ்சிஸ் தலைகணிய நுறையை*
*உடுத்துப் போவது*
*பள்ளியறை நாகரிகம்*
*ஒட்டுத்துணியுடன் ஓரங்காட்டி*
*இடக்கு மிடக்காய் நடப்பது*
*பணமிடுக்கு நாகரிகம் கடும் குளிரிலும்*
*கழுத்துச் சங்கிலி காட்டுவது*
*பொருளாதார நாகரிகம்*
*பள்ளியறைக் காட்சிகளைப்*
*பட்டப்பகலில் காட்டுவதும்*
*அந்தரங்க லீலைகளை*
*அரங்கத்தில் ஏற்றுவதும்*
*காமனின் நாகரிகம்*
*சிலிக்கோன் பிதுங்கிப்பிரள*
*பால்குடம் பார்த்து பாலகன் அழுவது*
*மார்பியல் நாகரிகம்*
*அறிவி(ய)ல் வளர்ந்தது*
*அறம் வழியே தெரிந்தது...*

# உன்னதமான உறவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

இளைய தலைமுறையினர் தன் சுயத்தைப் பற்றிய உணர்வை அடைவதற்கு இதுபோன்ற விடயங் களைச் சார்ந்திருக்கிறார்கள். இந்த இலக்கணம் புதிதாக இருக்கும் காரணத்தால் பெற்றோர்களும் செய்வதறியாமல் தவிக்கிறார்கள். இந்தக் காரணங்களால் இந்தத் தலைமுறையினரின் உறவுகள் குழப்பத்தில் சிக்குண்டிருக்கின்றன. இதில் யாரையும் குறை சொல்வதில் அர்த்தமில்லை. பெற்றோரும் பிள்ளைகளும் உறவு என்பது பற்றி அடிப்படைக் கேள்விகளைக் கேட்டு விடை கண்டுபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள்.

வாழ்க்கையானது மரபு ஓட்டத்தின் எல்லைகளுக்குள் அடங்கிவிடுவதில்லை என்பதை நினைவில் கொள் ளுங்கள். இது ஒரு விதத்தில் சவால்தான். தீர யோசித்த பின்பே முடிவெடுக்க வேண்டும். ஆனால் எந்த முடிவை எடுத்தாலும் அதற்கான முழுப் பொறுப்பை நீங்கள் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். உறவு என்பது மிகவும் சிக்கலான விடயம். காரணம் மனதில் உள்ள சிக்கல்கள்தான். சிறு வயதில் இருந்தே சுற்றியுள்ள வாழ்க்கை நடப்புகளைப் பார்த்து மனதில் பல கனவுகள் உருவாகிவிடுகின்றன. வாழ்க்கையையும் உறவுகளையும் அந்தக் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ளும் களமாகவே பார்க்கிறோம். இது நியாயமானது, இதுதான் வாழ்க்கை என்றுகூட நம்புகிறோம். ஆனால் இந்த வாழ்க்கைமுறை நம் சந்தோஷத்தைக் கெடுக்கிறது. உறவு என்பதன் மகத்துவத்தைச் சிதைக்கிறது. வாழ்க்கையை அனுபவிக்காமல் பயன்படுத்திக்கொள்ள நினைக்கும் மனோபாவம் அதன் உன்னதத்தைக் குலைக்கிறது. உறவின் ஆரம்பக் கட்டங்களில் நம் கனவுகளை அந்த மற்றவர் நிறைவேற்றுவார் என்ற எதிர்பார்ப்பு ஏற்படுகிறது. ஆனால் கொஞ்ச நாள்களுக்குப் பிறகு அதில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் விலகிப் போய்விடுவதும் நடக்கிறது. அந்தப் பெண்ணிடம் நேரடியாகக் கேளுங்கள். பதில் சொல்லவில்லை என்றால் உங்கள் வாழ்க்கையை மேற்கொண்டு நடத்துங்கள். அந்த ஒரு பெண்ணை நம்பி நீங்கள் பிறக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

# சோதிடம்




இவ்வெண் கொண்டவர்கள் புதனுடன்செவ்வாய்இணைந்து வழங்கும் ஆதிக்கப்பலன். கொண்டவர்கள் உயரமும், அளவான பருமனும் கொண்டு வாட்டசாட்டமாக, சிவப்பாகக் கம்பீரமாகக் காட்சியளிப்பர். மனத்துணிவும், புத்தித் தந்திரமும் உள்ளவர்கள். ஆபத்துக்குத் துணிந்த சாகசங்களைச் செய்வர். சக்திக்கு மீறிய வேலைகளில் தலையிட்டுச் சங்கடப்படுவர். சாமர்த்தியமாக ஏதாவது கூறிச் சமாளித்து விடுவர்.

ஒப்பந்தம் செய்து கொண்டும் பிறர் வேலைகளை முடிப்பர். பொது சேவைகளிலும் ஈடுபடுவர். மக்கள் செல்வாக்கு இவர்களுக்கு இருக்கும். செய்வர். நியாயம், பொது நன்மைக்காகவும் போராடுவர்.

பகையும், வம்பும், பிரச்சினையும் அடிக்கடி இவர்களுக்கு உண்டாகும். மன உறுதியும், திறமையும் பிறரைப் புரிந்து நடக்கும் தன்மையும் இவர்களை பிரபல்யம் பெறச் செய்யும். அதிகம்

## கூட்டெண் பலன்கள் 5-9

அலட்டிக் கொள்ளாமல் தூக்கம், அரட்டை, விளையாட்டும் படிப்புமாக முற்பகுதி வாழ்க்கை செல்லும். காதல் உண்டாகும். இவர்களுக்கு அதிக நண்பர்கள் இருப்பார்கள். கண்டதும் காதலும், காதலில் தந்திரமும் வம்பும் உண்டாகும். குடும்பம் நன்றாக மகிழ்வுடன் நடக்கும். வேலை செய்துபொருள் ஈட்ட வேண்டும் என்ற ஆர்வ மும் இவர்களுக்கு அதிகம். கவர்ச்சியும் சுறுசுறுப்பும் உள்ளவர்கள் என்பதால் வேலை எளிதில் கிடைக்கும். கலை ஈடுபாடும் இருக்கும். பாட்டு, நடனம், எழுத்து, நடிப்பு என இருப்பார்.

இரத்த அழுத்தம், இரத்தக் கட்டி, மஞ்சட் காமாலை, வயிற்று வலி, மூல நோய் ஆகிய நோய்கள் வரலாம். கை, கால், முதுகு, கழுத்து வலி, வாயுத் தொல்லை, இதயக் கோளாறு முதலியவை உண்டாகலாம்.

சுக்கிரனில் சூரியன் சேர்ந்து உண்டாகும்ஆதிக்கப்பலன்உடையவர்கள் இவர்கள். கண்கள் ஒளியுடன் விளங்கும். ஒளி பொருந்தி கவர்ச்சியாக அழகுடன் தோற்றம் இருக்கும். ஒளி பொருந்தி கவர்ச்சியாக, அழகுடன் தோற்றம் இருக்கும்.

அதிகார தோரணையில் பேச்சிருக்கும். அடக்கியாளும்போக்கில் நடத்தை இருக்கும். தெய்வபக்தி அதிகம் கொண்டவர்கள். உணவில், உடுத்துவதில் பிரியம் அதிகம் உள்ளவர்கள். வெகுளித்தனமாகப் பழகுவார்கள். குரல் வளம் நன்கு இருக்கும். மற்றவரிடம் இனிக்க இனிக்கப் பேசும் திறமை உள்ளவர்.

பிறரைவிடத் தாம் உயர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். தமக்கு அடங்கியே பிறர் இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள். இரக்கமும், தானம் செய்யும் குணமும் இருக்கும். பழிவாங்கும் உணர்வும், ஆத்திரமும் இவர்களுக்கு உண்டு.

காதலும் பெண்கள் மீது பிரியமும் உள்ள நல்ல ரசிகரான இவர்கள் காதலில் தீவிரம் காட்டி எதையும் பொருட்படுத்தாமல் காதலித்தவருடன் சேர்ந்து விடுவர். இவர்களுக்கு மன மொத்த துணை அமைந்திடும். பிள்ளைகள், மனைவி, உற்றார், உறவினர், நண்பர்களுடன் பெரிய வாழ்க்கை அமையும். இறுதிக்காலம் வரை ஏதா

## கூட்டெண் பலன்கள் 6-1

வது ஒரு தொழிலும் – வருமானமும் அமைந்திருக்கும். உடல் வருத்தி உழைக்க மாட்டார்கள். கவிதை, கதை, நாடகம், கட்டுரை எழுதிக் காசாக்கவும் விரும்புவார்கள். கலை, அரசியல், நளின அழகுப் பொருள் வியாபாரம், சொத்து வியாபாரம் போன்றவை எல்லாம் இவர்களுக்குப் பொருத்தமான தொழில்கள் ஆகும்.


நீரிழிவு, சிறுநீரகப் பாதிப்பு, மூடக்கு வாதம் போன்ற நோய்கள் உண்டாகலாம். யோகாசனமும், காய்கறி அதிகம் உண்ணலும் நோய்களிலிருந்து பாதுகாப்புத் தரும்.

CM K

# பெண்கள் பலவீனமானவர்கள் இல்லை




பொதுவாக பெண்கள் பலமானவர்கள்தான். உடலை விட மனதால் பலமானவர்கள் என்றால் அது பெண்கள்தான். அப்படியான பெண்களை, இந்தச் சமுதாயம் பல்வேறு விடயங்களால் பலவீனமாக்கி வைத்திருந்தது. பொதுவாக பெண்கள் தலை குனிந்து நிலத்தைப் பார்த்து நடக்க வேண்டும் என்று அந்தக் காலத்தில் இருந்தே வளரும் பெண்களுக்கு கற்பிக்கப்பட்டது. இது சமுதாயம் பெண்கள் மீது ஏற்படுத்திய பலவீனமாகும். ஆனால், அந்தப் பார்வை யால் பல விடயங்களை நாம் வெளிப்படுத்திவிடலாம். ஒருவர் எம்மை தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கிறார் என்பதை எமது கோபமான பார்வையாலும், வெறுப்பான பார்வையாலும் தெரிவித்து விடலாம். ஒருவர் எம்மைத் தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது அதற்கு எதிரான கோபப் பார்வையை வெளிப்படுத்தலாம். இதன் மூலம் மூன்றாம் நபருக்குத் தெரியாமலேயே நாம் எமது எதிர்ப்பை உரியவருக்கு தெரிவித்து விடுவோம். அதன் மூலம் ஒரு பெண் தனது பார்வை என்ற பலவீனத்தை பலமாக்கிக் கொள்ளலாம். ஒரு பெண் நிமிர்ந்து பார்க்கும்போதுதான், அவளைச் சுற்றியுள்ள சூழ்நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை அறிந்து அதற்கேற்ப தன்னைத் தயார்படுத்திக்கொள்ள முடியும். அதேப்போல, முந்தைய காலத்தில் பெண்களுக்கு சொத்துக்கள் என்று எதுவும் இருந்ததில்லை. எனவே அவர்களது பாதுகாப்புக் கருதி அவர்களுக்கு என சொத்தாக தங்க நகைகளை அணிவித்தனர். ஆனால் தற்போது அந்தப் பாதுகாப்பற்ற நிலை பெண்களுக்கு இல்லை. எனவே எளிமையாக இருங்கள். பெண்கள் பலரும் தங்களை அழகாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புவது இயற்கை. ஆனால், அதற்காக தம்மை எப்போதும் ஒரு பார்வைக்குரிய பொருளாக மாற்றிக் கொள்ளாதீர்கள். இதனால் மற்றவர்களிடம் இருந்து நீங்கள் அந்நியப்பட நேரிடும். எனவே எப்போதும் இயல்பாகவும், எளிமையாகவும் இருக்க வேண்டும். பல நேரங்களில் அழகும், நகைகளும் தான் ஆபத்தாகி விடுகின்றன. தொலைத்தொடர்பு கருவியாக இருக்க வேண் டாம்.. ஒரு பெண்ணிடம் ஒரு விடயத்தைக் கூறிவிட்டால் போதும் அது ஊருக்கே தெரிந்து விடும் என்று சொல்வார்கள். அதுபோன்ற சூழ்நிலை தற்போது இல்லையென்றாலும், பெண் கள் பொதுவாக தேவையற்ற விடயங்களைப் பேசுவதைத் தவிர்ப்பது நலம். அது அவர்களுக்கும், அவர்களது சுற்றத்தாருக்கும் நல்ல பலனை அளிக்கும். சூழ்நிலைகளை சமயோசிதமாக சமாளிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். ஓரிடத்துக்கு செல்லும் போது, அங்கிருந்து புறப்படத் தாமதமாகும் என்று தெரிந்தால், அதற்கு உரிய வழிகளைத் தயாராக செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அங்கு போகாமல் தவிர்ப்பதை விட, உரிய நேரத்துக்கு சென்றுவிட்டு விரைவாக அங்கிருந்து திரும்பி வந்து விடுவது நல்லது. முன் யோசனையுடன் எதையும் செய்தால், பல மோசமான சம்பவங்களைத் தவிர்க்க முடியும். மோசமான நண்பர்களை விலக்கி விடுங்கள். அவர்களுடன் நெருக்கமான பழக்கத்தை குறைத்துக் கொள் வது எப்போதுமே பெண்களுக்கு நல்லது. பலரும், தீய நட்பால்தான் தவறான வழிகளுக்குச் செல்வார்கள். எனவே, தீய வழியில் சென்று கொண்டிருக்கும் நண்பர்களுடன் ஏற்படும் பழக்கம், அவர்களை திருத்த பயன்படலாம். ஆனால் அதற்காக நாம் அவர்கள் வழிக்கு மாற எந்த வகையிலும் வழி ஏற்படுத்தி விடக் கூடாது. எல்லோரிடமும் எல்லா வற்றையும் கூறாதீர்கள். பலருக்கும் இருக்கும் மிக முக்கிய பல வீனமே இரகசியத்தை பாது காக்க முடியாதது தான். பொதுவாக இரகசியம் என்பது, ஒரு விடயம் மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது. தெரிந்தால் தவறாகிவிடும் என்பதால் தான் அதனை ரகசியம் என்கிறோம். எனவே, ஒருவர் ஒரு விடயத்தை இரகசியமாக வைக்க விரும்பி னால், அதனைத் தாமாக ஒருவரிடமும் தெரியப் படுத்தக் கூடாது. இல்லை, எனக்கு நம்பிக்கை யான தோழி ஒருவரிடம் மட்டும் இதனைக் கூறுவேன் என்று சொன்னால், அவள் அவளுக்கு நம்பிக்கை யான ஒருவரிடம் இந்த விடயத்தைக் கூறுவார்.



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சரவணபவன் கஜமாறன்

(அச்சுவேலி பொலிஸ் நிலைய உத்தியோகஸ்த்தர்)

மலர்வு
18.02.1988

உதிர்வு
15.01.2014

கூடித்திரிந்தோம் குதூகலமாய் வாழ்ந்திருந்தோம், ஆடித்திரிந்தோம் அலைகடலாய் சேர்ந்திருந்தோம்.
வாழப் பிறந்தோம் என்று இதயங்கள் கலந்திருந்தோம். வழிநடுவே எம்மை விட்டு வருடம் ஒன்று ஆனதடா..
சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமனே! சிலுவையில் அறைந்தாலும் சிதறாது எங்கள் பாசம்..
கலங்காத உன் சிரிப்பு கலைய மறுக்குதடா! கனிவான உன்மொழிகள் கனவிலும் பேசுதடா!!
ஆண்டுகள் நூறு சென்றாலும் ஆறாது உன் நினைவுகள்....

மல்லாகம் நண்பர்கள்..

(55749)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சரவணபவன் கஜமாறன்

(அச்சுவேலி பொலிஸ் நிலைய உத்தியோகஸ்த்தர்)

மலர்வு
18.02.1988

உதிர்வு
15.01.2014

எம் அன்புப் புதல்வனே! ஆருயிர்ச் சகோதரனே!
அன்புக்கும், நேசத்திற்கும் நெஞ்சம் நிறைந்தவனாக வாழ்ந்து எல்லோருக்கும் ஆதரவாய் இருந்தாயே!
இன்று எங்களைப் பிரிந்து ஓராண்டு ஆகிவிட்டது. ஆனால் என்றும் எம் இதயங்களிலும், இல்லத்திலும்
ஒளி விளக்காய்த் திகழகின்றாய்! உன் ஆத்மா நின்மதியாக துயில் கொள்ளட்டும் !!!
என்றும் உன் நினைவுகளுடன்.....

வரியப்புலம்
சுன்னாகம்.

(55744)

குடும்பத்தினர்....

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர் சி.சிவகாந்தன்
அவர்களின் மாமனார்
**பொன்னு செல்லத்துரை**
அவர்கள் 10.01.2015 காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

ஆசிரியர் வட்டம்,
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**ஜெயக்குமாரன்**
**தனுஷன்**

தோற்றம் 04.05.1986 — மறைவு 14.01.2005

சாவெனும் வடிவம் கொண்டு
சடுதியில் காலன் வந்து
தாவென உந்தன் உயிரை
தட்டியே பறித்துச் சென்றான்
போவென அவனைச் சொல்ல
பூமியில் யாரும் இல்லை
ஏவென அலறி நின்றோம்
மகனே உன் பிரிவால் நாங்கள்

குடும்பத்தினர்.
077 711 0427
பழனி ஆண்டவர் கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

## தசாக கிருஹயக்கு அழைப்பு



சிவமயம்

நிகழும் ஜய வருடம் மார்கழிமாதம் 23 ஆம் நாள்
(07.01.2015) புதன்கிழமை அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தலைவி
**அமரர் பார்வதிஅம்மா சுப்பிரமணிய ஐயர்**
அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தை மாதம் 2ஆம் நாள் 16.01.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி தசாகம்.
தை மாதம் 3ஆம் நாள் 17.01.2015 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி ஏகோதிஷ்டம், மாசிகம்
தை மாதம் 4ஆம் நாள் 18.01.2015 ஞாயிற்றுக்கிழமை முற்கல் 10.00 மணி சபிண்டீகரணம்
தை மாதம் 5ஆம் நாள் 19.01.2015 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி கிருஹயக்ஞம்
நண்பகல் 12.00 மணி சமாராதனை

(திவ்விய ஜீவன மண்டபம், சட்டநாதர் கோயில் அருகில்)

மேற்படி கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(தனிப்பட்ட அழைப்பாகக் கருதி கலந்துகொள்ளவும்)

**என்றும் நினைவில்**

சாவித்திரி - கிருஷ்ணசாமி ஐயர்- குடும்பம் (இந்தியா)
ஜானகி - விஸ்வநாதசர்மா - குடும்பம்
அமரர் யோகீஸ்வரசர்மா - சுப்பிரமணியஐயர் - குடும்பம்
தேவகி (ராதை) - கிருஷ்ணசாமிசர்மா - குடும்பம் (இந்தியா)
ஞானாம்பிகை (ஜெயமணி) - யோகராஜா - குடும்பம்
கலைச்செல்வி (ராஜி) - பாலச்சந்திரசர்மா - குடும்பம்

**271/7, கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(54545)(45.6.3)

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் பேரானந்தம்**
**உமாசுதன்**
(போட்டோ சுதன்)



மண்ணில் 11.12.1974
விண்ணில் 15.01.2004

புன்னகை பூத்த வதனம் பூப்போல விரிந்த உள்ளம்
கண்டிருந்த கனவுகளைக் கலைத்து விட்டு
கணப்பொழுதில் கடலோடு கலந்ததேனோ?
கனவுகள் நிறைந்த பூவே - நீ வாடமுன் உதிர்ந்ததேனோ?
நிம்மதியாய் நீ நிலை பெற்றுவிட்டாய்
நம் விழிகளில் நீ மட்டும் நிலையானதே சுதன்!
உலகம் உள்ளவரை நீங்காது உன் நினைவு

காராளர் வளவு,
அல்வாய் கிழக்கு,அல்வாய்.

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(54169)(45.7.3)

## 100 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



**வ.சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்)
பிறப்பு: 15.01.1915
அன்புடன் என்றும் நினைவுகூரும்

மகள்: தேவராணி,
19,கடவைப்புலம்,
சுன்னாகம்.

அன்பு மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சற்குணநாதன்**
**குலதாசன்**
(முன்னாள் உப அஞ்சல் அதிபர்
- விடத்தற்பளை)

பிறப்பு 27.03.1977 — இறப்பு 19.01.2009

ஆண்டுகள் ஆறு ஆறாக பாய்ந்தது - ஆனாலும் எம்
இதயங்களில் இதமாக வாழும் - உன்பிரிவை
ஈடுசெய்ய இணையாக எதுவும் இல்லை - எங்களிடம்
எத்தனை ஆண்டுகள் எம்மைக் கடந்தாலும் - நாம்
ஏக்கத்துடனே வாழ்கின்றோம் - என்றும்
உன் பிரிவைத் தாங்காது உருகித்துடிக்கும் - எங்களது
இதயம் ஊமை ஆகின்றது
நீ ஆண்டவனாய் இருந்து - எங்களை ஆசிர்வதி

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
விடத்தற்பளை, மிருசுவில்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



M.ஜோன்மேரி
மலர்வு 03.01.1951 — உதிர்வு 15.01.2009



J.லூட்ஸ் சுபாசினி
மலர்வு 14.12.1981 — உதிர்வு 22.10.2008



J.யூட்சுஜிவன்
மலர்வு 10.04.1991 — உதிர்வு 15.01.2009



J.யுட்சுபாசன்
மலர்வு 03.05.1996 — உதிர்வு 24.01.2009

எட்டாத தூரம் சென்று ஆண்டுகள் ஆறு ஆனதோ நீங்கள் எண்ணிய எண்ணமெல்லாம் மண்ணாகிப் போனதோ! அன்பான குலவிளக்காய், இப் பூமிதனில் அனைவரையும் அரவணைத்து வாழ்ந்தீர்கள் நீங்கள் வாழ்ந்த காலத்தை நாங்கள் நித்தம் அசைபோட்டு மகிழ்வதா? அழுவதா? எங்கள் மனம் நெகிழ்ந்து தவிக்கின்றோம் இத்தரணியில் உங்கள் ஆத்மா என்றும் சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

(54174)(45.7.3)

குடும்பத்தினர்.

## விதிமுறைகளை மீறி தேர்தல் சுவரொட்டி 5 பேருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜன. 15

தேர்தல் காலத்தில் விதிமுறைகளை மீறி தேர்தல் பிரசுரங்களை ஒட்டிய ஐந்து பேருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டு, அதை கைதடி அரச சிறுவர் இல்லத்துக்கு செலுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

தேர்தல்கள் திணைக்களத்தால் விடுக்கப்பட்ட அறிவிப்புக்கு மாறாக இரவு வேளையில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தவேளையில்ரோந்து சென்ற சாவகச்சேரி பொலிஸாரிடம் குறித்த 5 பேரும் அகப்பட்டனர்.

இந்த ஐந்து பேருக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் ஐந்து பேரையும் தலா ஆயிரம் ரூபா வீதம் அரச சிறுவர் இல்லத்துக்கு செலுத்துமாறு உத்தரவிட்டார். (ந-9)

## விலங்குகளால் கடியுண்டோர் 1129 பேர்

தென்மராட்சி,ஜன.15

சாவகச்சேரி ஆதார மருத்து வமனையில் விலங்குகளால் கடியுண்ட ஆயிரத்து 129 பேர் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றியுள்ளதாக மருத்துவமனை செய்திக் குறிப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்கள், வளர்ப்பு பூனைகள் மற்றும் குரங்கு போன்ற வற்றால்கடியுண்ட நிலையில் தடுப்பூசிமருந்துஏற்றியதாக தெரிவிக்கப் பட்டது. (வ-9)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## பாஸ்கரன் நேதுகன்



தோற்றம்: 02.12.1995
மறைவு: 07.01.2015

வண்ணார்பண்ணை கேசாவில் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்கரன் பவளவதனி தம்பதியரின் புதல்வன் கனடா ரொரன்டோவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நேதுகன் 07.01.2015 அகாலமரணம் அடைந்துள்ளார்.

அன்னார் கனடாவைச் சேர்ந்த சிவகுமார் ஜெயவதனியின் அன்புப் பெறாமகனும், தர்மசீலன் அர்ச்சுனாவின் அன்பு மருமகனும், பாலச்சந்திரன் மதிவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகனும், கனடாவில் வசிக்கும் இந்திரகுமார், கிருஸ்ணகுமார் ஆகியோரின் பெறாமகனும், வண்ணார் பண்ணையில் வசிக்கும் ராசன் (டோகா), கங்கா ஆகியோரின் பெறாமகனும், சந்திரன் காஞ்சனா சிவா குழந்தை ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் இன்று (15.01.2015) வியாழக்கிழமை 10 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இராமலிங்கம் மனோகரிதேவி
(கோண்டாவில்),
திருநாவுக்கரசு பொன்னம்மா
(பத்திரகாளி கோயிலடி).

077 315 8597,
077 023 3959 (55816) (45.3.7)

## கந்தையா குணசேகரன்(குணம்)



நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும் இல. 198, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணசேகரன் நேற்று முன்தினம் (13.01. 2015) செவ்வாய்க் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான கந்தையா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற லீலிமலரின் (மலர்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான சவரிமுத்து, மேரிறோசலின் ஆகியோரின் பாசமிகு மருமகனும், காலஞ் சென்ற ஜெயராசா, ஜெய ரட்ணம் மற்றும் மேரி ஜெசிந்தா (மல்லிகா) ஆகியோரின் அன்புத் தந் தையும், குகனேஸ்வரியின் (மகேஸ்) அன்புச் சகோதரனும், சௌந்தரி, றீட்டா, அரியமலர், அருட்தந்தை ஜெயசேகரம் ஆகியோரின் உடன் பிற வாச் சகோதரரும், காலஞ்சென்ற அன்ரன் பீற்றர் மற்றும் தேவதாஸ், சூசைநாதன் (ராசன்- ஜேர்மனி), காலஞ்சென்ற ஜேசுதாசன் (குணம்), சூசைமலர் (தவம்), மரியதாஸ் (துரை), மகேஸ் (நெடுந்தீவு) ஆகி யோரின் மைத்துனரும், நிர்மலன், வசந்தன், அஜந்தன் ஆகியோரின் மாமனும், டிலானி, ரூபி, சிந்து, நிசானா, துசா, டிலக்ஷி ஆகியோரின் பேரனும், கவிநயாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (15.01.2015) வியாழன் புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்து மம்மில் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

178, சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பாக்கியவதி பாலசுந்தரம்



மானிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியவதி பாலசுந்தரம் நேற்று (14.01.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசுந்தரத் தின் அன்பு மனைவியும், பால கிருஷ் ணராஜாவின் பாசமிகு தாயும், அருள்நேசராணியின் (ஆசிரியை - யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை) அன்பு மாமியும், இராஜசிங்கத்தின் (கனடா அன்புச் சகோதரியும், சத்திய பாமாவின் (கனடா) அன்பு மைத்துனியும், நரேஷ் (கனடா), ஜெயரூபி (ஆஸ்திரேலியா), சுரேஷ் (கனடா), றமேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2015) வெள்ளிக்கிழமை மு.பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகன்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மெமோரியல் லேன்,
மானிப்பாய்.
பா. பாலகிருஷ்ணராஜா (மகன்),
தொ.பே. 077 92 32 680

# செய்திகள்

## மைத்திரியின் வருகையை கூறியவருக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, ஜன.15

ஜனாதிபதித் தேர்தலில், பொது வேட்பாளர் ஒருவர் அரசுக்குள் இருந்தே களமிறங்குவார் என்று எதிர்வு கூறியிருந்த சோதிடர் சுஜித் நிஸாந்த, தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கட்சிகள், நிறங்கள் என்ற அரசியல் சம்பந்தங்கள் எவையுமின்றி மக்களுக்காக தாம் சோதிடச் சேவையை மேற்கொண்டு வருகின்றேன். இன்று வரையிலும் தமது எதிர்வு கூறல்கள் உண்மையாகியுள்ளன. அவ்விதம் எதிர் கூறல்கள் காரணமாக தமக்கு இன்றுஉயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் வாகனமொன்றில் வந்த இனந்தெரியாதநுப் பொன்று கண்டி நகரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது எனது மேற்சட்டையைப் பற்றிப் பிடித்த வாறு உன்னையும் கொலை செய்வோம். இனிமேலும் உன் தொழிலைத் தொடர இடமளிக்கப் போவதில்லை" என அச்சுறுத்தி விட்டுச் சென்றனர். அது குறித்து கண்டிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைபதிவு செய்துள்ளேன் என்றுஅவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கூறியுள்ளார்.

ஒரு சில சோதிட நிபுணர்கள் பணம் மற்றும் பதைரப்பட்ட வரப்பிரசாதங்களைப் பெறுக் கொள்வதற்காகச் செயற்பட்டு தமது நிலையைத் தாழ்த்திக் கொள்கின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ற-22)

## நாம் எடுக்கும் தீர்மானத்துக்கு தோள் கொடுத்த மக்கள்

### நன்றி தெரிவித்தார் வர்த்தக அமைச்சர்

கொழும்பு, ஜன.15

சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பு, விமோசனம் தொடர்பில் நாங்கள் எடுக்கும் தீர்மானத்துக்காக எங்களோடு தோள் கொடுத்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாக கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித் துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனுக்கான வரவேற்பு நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது. அங்கு கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

2005 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு எமது கட்சி பெரும் பங்களிப்பைச் செய்தது. அந்த அரசில் பலமிக்க 17 நிறுவனங்களை உள்ளடக்கிய அமைச்சு ஒன்றை ஜனாதிபதி வழங்கியிருந்தார். அதன்மூலம் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் நாடுகளுக்கு இடையிலான வர்த்தக உறவுகளை அதிகரிக்கத் தேவையான- அனைத்து உதவிகளையும் செய்தேன். இந்த காலத்தில் வடக்கு மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுத்து வந்துள்ளேன். குறிப்பாக சில ஆயிரம் முஸ்லிம்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இன்னும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்படாமலும் இருக்கின்றன.

இஸ்லாமுக்கு எதிராகப் பரப்புரை செய்கின்றனர் சிலர். அதற்காக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். இந்தச் சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும். எனில் எமக்கான ஒரு ஊடகத் தேவையுள்ளது. இந்த நாட்டில் மீண்டும் ஒரு இனக்கலவரம் ஏற்படுவதற்கு ஒருபோதும் நாம் இடம் கொடுக்க முடியாது. தமிழர்கள், இஸ்லாமியர்கள், சிங்களவர்கள் அவர்களது மத சான சார விழுமியங்களை உரிய முறையில் பேணி நடப்பதற்கான அனைத்து அடித்தளத்தையும் ஜனாதிபதி மைத்திரி பால தலைமையிலான அரசு இட்டுள்ளது என்று தெரிவித்தார்.

(வ-10)

## இந்தியப் படகுகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.15

பழுதடைந்த நிலையில் கச்சதீவுப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 2 இந்தியப் படகுகளையும் விடுவிக்க ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் இருந்து கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி 2 படகுகளுடன் 8 மீனவர்கள் படகு பழுதடைந்த நிலையில் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தனர்.

இலங்கைக் கடற்படையினர் இந்த மீனவர்களை மீட்டு, நெடுந்தீவுக் கடற்கரைக்கு கொண்டு வந்தனர்.

எனினும் படகு பழுதடைந்த நிலையில் இருந்தமையால் கச்சதீவுப் பகுதியிலேயே படகு நிறுத்தப்பட்டிருந்து. மீனவர்கள் 8 பேரும் மறுநாள் விடுவிக்கப் பட்டபோதும் படகுகள் விடுவிக்கப்படவில்லை.

இது தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிமன்ற நீதிவான்.எஸ்.லெனின்குமார் படகுகளை மீனவர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இந்திய மீனவர்களே தங்களது படகுகளை கச்சதீவுப் பகுதிக்கு வந்து எடுத்துச் செல்வர்.(த-14)

## விதைத்ததில் விளைந்தது நூல் வெளியீடு

அச்சுவேலி, ஜன.15

மா.ஞானலிங்கம் எழுதிய விதைத்ததில் விளைந்தது நூல் வெளியீடும், அறிமுக நிகழ்வும் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரி குமாரசாமி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் கலந்து கொள்வார்.

ஆசியுரைகளை சிவஸ்ரீ கு.தியாகராசக் குருக்கள், அருட்பணி அன்ரனி பாலா அடிகளார் ஆகியோர் வழங்குவார்கள். தமிழ்த் தாய் வணக்கத்தை செல்வன் சி.நிதர்ஷனும், வரவேற்புரையை அதிபர் நா.மகேந்திரராசாவும் வழங்குவார்கள்.

தலைமையுரையைத் தொடர்ந்து தொடக்கவுரையை வலி கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் வழங்க, வெளியீட்டுரையை உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் வழங்குவார். நூலின் முதற் பிரதியை மருத்துவர் லயன் வைதியா கராசா பெற்றுக்கொள்வார்.

நூலின் மதிப்பீட்டுரையை பேராசிரியர் தி.வேல்நம்பியும், அறிமுகவுரையை மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரனும் வழங்குவார்கள்.

வாழ்த்துரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம், வைத்தியர் திருமதி சியாமா துரைரத்தினம், கோட்டக் கல்வி அதிகாரி ஏ.எஸ். சற்குணராசா, அதிபர் ஆர்.இராஜமனோகரன் ஆகியோர் வழங்குவார்கள். ஏற்புரையை நூலாசிரியர் மா.ஞானலிங்கமும், நன்றியுரையை ஞான. ஆதவனும்வழங்குவார்கள். (க)

# மஹிந்த ராஜபக்ஷ அன் கோவின் முகத்திரை முழுவதுமாக கிழியும்

## ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15
மஹிந்த ராஜபக்ஷ அன்கோவின் முகத்திரை முழுவதுமாக விரைவில் கிழிக்கப்படும். இதற்குரிய ஏற்பாடுகள் வேகமாக இடம்பெற்று வருகின்றது. – இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.
அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிரான எங்கள் போராட்டம், இந்த தேர்தலுக்கு முன்னர் டிசெம்பர் மாதம் நாம் அமைத்த பொது எதிரணி அரசியல் கூட்டணியுடன் ஆரம்பமாகியதல்ல. எமது போராட்டத்துக்கு பத்து வருடக்கால வரலாறு இருக்கின்றது.
நண்பன் நடராஜா ரவிராஜுடன் இணைந்து, மஹிந்த ஆட்சியின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக 2006 ஆம் ஆண்டு எமது போராட்டத்தை ஆரம்பித்தோம். அதே ஆண்டு நவம்பர் மாதம் ரவிராஜ் கொல்லப்பட்டதுடன் போராட்டம் எழுச்சி பெற்றது. அதேபோல் 2009 ஆம் ஆண்டு ஜனவரியில் கொல்லப்பட்ட நண்பன் லசந்த விக்கிரமதுங் கவின் படுகொலையுடன் எமது போராட்டம் புதிய பரிமாணங்களை அடைந்தது. இதுவே இன்று வளர்ச்சியடைந்து மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை இன்று வீழ்த்தியுள்ளது.
மஹிந்த ஆட்சியை ஒழித்து இன்று நாம் பெற்றுள்ள இந்த வெற்றி ஒரு முதல் கட்ட வெற்றியாகும். இந்த அரசு தொடர்ந்து நிலைக்க வேண்டும். இது நம் அடுத்த கட்ட இலக்கு. இந்த இலக்கை நாம் அடையாவிட்டால், மஹிந்த ராஜபக்ஷ அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமராக வந்து அமர்ந்து ஆட்சி செய்ய தொடங்கி விடுவார்.
மஹிந்த பெரும்பான்மை இனத்தவர்களின் பெரும்பான்மையான வாக்குகளையும், சிறுபான்மை இனத்தவர்களின் சிறுபான்மையான வாக்குகளையும் பெற்று தோல்வி கண்டுள்ளார். இது தான் உண்மை. எமது அரசு நிலைக்க வேண்டுமென்றால் பெரும்பான்மை இனத்தவர்களின் பெரும்பான்மை வாக்குகளை நாம் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் பெற வேண்டும். இதனை இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மற்றும் மைத்திரிக்கு வாக்களித்த சிங்கள மக்கள் மனதில் கொள்ள வேண்டும்.
மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வரலாம். அது அவர் உரிமை. ஆனால், இப்போது நாளுக்கு நாள் புதிது புதிதாக வெளிவரும் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் நடத்திய ஊழல்கள் மற்றும் கூட்டுக் கொள்ளைகளுக்கு இவர்கள் சட்டத்தின் முன்னால் பதில் சொல்லியே ஆகவேண்டும்.
தம் இனத்தையும், மதத்தையும் பாதுகாக்கின்றோம் என்ற முகமூடியை போர்த்துக் கொண்டு இவர்கள் நடத்திய மெகா கொள்ளைகளை பார்த்து இவர்களுக்கு வாக்களித்த சிங்கள மக்கள் திகைத்து நிற்கிறார்கள். இன்னும் சில நாட்களில் இவர்களது முகத்திரை முழுதும் கிழியும். அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன – என்றார். (ற–5)

## விசேட பொங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 15
தைத்திருநாளை முன்னிட்டு நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் இன்று வியாழக் கிழமை நண்பகலில் விசேட பொங்கல் நிகழ்வு இடம்பெறும். காலையில் விசேட பூஜை அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து பொங்கல் நடைபெறும். (த–17)

## பாப்பரசரின் வருகையால் கைதிகள் பலர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜன. 15
நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த பலர் பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸின் வருகையையொட்டி நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.
போதைப்பொருள் கடத்தல், கொலைக் குற்றம் புரிந்தவர்கள் தவிர்ந்த ஏனையவர்களின் சிறைத் தண்டனையும் 7 நாள்களால் குறைக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.
யாழ்.சிறைச்சாலையில் பெண் ஒருவர் உட்பட 4 பேரும், வவுனியா சிறைச்சாலையில் 8 பேருமாக 12 பேர் வடக்கில் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். சிறு குற்றம் புரிந்து அதற்கான தண்டனையாக விதிக்கப்பட்ட அபராதங்களை நீதிமன்றங்களுக்குச் செலுத்த முடியாமல் சிறைத் தண்டனை அனுபவித்தவர்களே நேற்று விடுதலை செய்யப்பட்டனர். புனிதப் பயணம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வருகை தந்த பாப்பரசர் நேற்று மன்னாருக்கு வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த–4)

# பொங்கல் பொருள் வாங்க நேற்று குவிந்தனர் மக்கள்



யாழ்ப்பாணம், ஜன. 15
தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவதற்காக மக்கள் நேற்று ஆரவாரத்துடன் பொங்கல் பானை, அகப்பை உள்ளிட்ட பொங்கல் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்தனர்.
நேற்றுக் காலையிலிருந்து அனைத்துச் சந்தைகளிலும் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது.
யாழ்.நகரப் பகுதி, மருதனார்மடம் உட்பட அனைத்துச் சந்தைகளிலும் மக்கள் குவிந்திருந்தனர்.
வருடத்தின் முதல் பண்டிகையாக இது வருவதனாலும், புது வருடமாகவும் கருதுவதனாலும் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை பலரிடமும் காணப்படுகிறது. இந்த நிலையில் தைப் பொங்கலை அனைவரும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான முன்னேற்பாடுகளில் நேற்று ஈடுபட்டிருந்தனர். (த–4)

# என் கணவருக்கு என்ன நடந்தது?

## பாப்பரசருக்கு அனந்தி மனு

இறுதிப் போரில் வட்டுவாகலில் இராணுவத்திடம் அருட்தந்தை பிரான்ஸிஸுடன் சரணடைந்த எனது கணவர் உட்பட காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரிவிக்க முன்னாள் ஜனாதிபதியிடமும், புதிய ஜனாதிபதி மைத்திரியிடமும் வலியுறுத்து மாறு மனு ஒன்றைப் பாப்பரசரிடம் கையளித்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன்.
நேற்று மடுவுக்குப் பயணம் மேற்கொண்ட பாப் பரசரிடம் இந்த மனு கையளிக்கப்பட்டது.
இறுதிப்போரின்போது காணாமற்போனோர் தொடர்பில் இலங்கை அரசு உறுதியான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகளில் பலர் என்ன ஆனார்கள் என்பது தெரியாது.
அவர்களின் நிலை குறித்து அரசு தெளிவுபடுத்தவேண்டும். இதற்காகப் பல தடவைகள் நடவடிக்கை மேற்கொண்டபோதும் பதில் எதுவும் கிடைக்கவில்லை. எனவே இவர்களுக்கு என்ன நடந்தது என்று தெளிவுபடுத்த பாப்பரசர் இலங்கைஅரசுக்குஅழுத்தம்கொடுக்கவேண்டும் என்றுஅந்தமனுவில்குறிப்பிடப்பட்டுள்ளது. (த–21)

**பணியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பிரபல நகை விற்பனை நிலையத்துக்கு விற்பனையாளர்கள் உடன் தேவை.
அனுபவம் உள்ளவர்கள்,
பழக விரும்புபவர்கள்.
(ஆண்கள் மட்டும்) உடன் நேரில் வரவும்.
லலிதா ஜூவெல்லறி
இல, 75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சுற்றுலா சென்ற யுவதி பஸ்ஸில் மயங்கிச் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 15
கல்வியியற் கல்லூரிச் சமூகத்துடன் பஸ்ஸில் சுற்றுலா சென்று திரும்பி வரும்போது பஸ்ஸில் மயங்கிய யுவதி சிகிச்சை பயனளிக்காது வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. மாரடைப்பால் அவர் உயிரிழந்ததாகப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது என்று உறவினர்கள் தெரிவித்தனர்.
அரியாலை மேற்கைச் சேர்ந்த ஆநிருசா (வயது–21) என்பவரே உயிரிழந்தார். அவரது தாயார் யாழ்.கல்வியியற் கல்லூரியில் பணிபுரிகிறார். கல்லூரிச் சமூகம் மன்னாருக்குச் சுற்றுலா சென்றபோது தாயாருடன் மகளும் சென்றுள்ளார். நேற்றுமுன்தினம் திரும்பி வந்து கொண்டிருந்தபோது முழங்காவில் பகுதியில் பஸ்ஸில் யுவதி திடீரென மயங்கிச் சரிந்துவிட்டார். அவரை உடனடியாகப் பூநகரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றபோது அவர் உயிரிழந்துவிட்டார் என்று தமக்கு அறிவிக்கப்பட்டது என்று உறவினர்கள் தெரிவித்தனர்.
விசாரணையின்போது அவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. யுவதியின் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த–4)

அருள் மிகு ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த
**தைப் பொங்கற் பெருவிழா - 2015**

நாக கன்னியம்பாள் மெய்யடியார்களே!
நிகழும் மங்களகரமான ஜய வருடம் மார்கழித் திங்கள் 24 ஆம் நாள் (15.01.2015) விசாக நட்சத்திரமும், சிததமும் கூடிய காலை 8.00 மணியளவில் அபிஷேக அலங்காரத்தோடு சோடசதீப தூபங்களோடு நாக கன்னியம்மன் நாகத்தில் திரு வீதியுலா எழுந்தருளி தீமிப்பு வைபவம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் கலந்து எம்பெருமாட்டியைத் தரிசித்து பேரானந்தப் பொருவாழ்வு பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றேம்.
★ கொடியேற்றம் - 08.01.2015 மார்கழிக் கடைசி வியாழன் ஆயிலிய நட்சத்திர நாளில்
★ தைப்பொங்கல் - 15.01.2015 தை முதல் வியாழக் கிழமை பெருவிழாவும் 12.00 மணியளவில்
தீ மிதிப்பு வைபவம்
★ தீர்த்தம் கொடியிறக்கம் 22.01.02015 வியாழக்கிழமை வைரவர் மடையுடன் நடைபெறும்.
கிரிகைகள் சிறப்புற நடத்துபவர். ஆலய பிரதம சித்தஞானகுரு இந்திரன்ஐயர்
உதவிக்குரு. செ. ஸ்ரீசுபாஸ்கர் (சுந்தர்)
தை பொங்கல் அன்று நடைபெறும் நிகழ்ச்சிகள்
பஜனைப் பாடல்கள் வழங்குபவர்கள்- ஆலயத் தொண்டர்கள்
சைவச் சொற்பொழிவு
அருளாசியுரை:- ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதினம்)
விடயம்:- ஈழத்தில் நாக வழிபாடு
நிகழ்த்துபவர் சைவப்புலவர், சைவசித்தாந்தப் பண்டிதர். செ. கந்தசத்திய தாசன் M.A. J.P. (வலிகாம ஆசிரிய ஆலோசகர்)
விடயம்:- இணையடி நிழல்
நிகழ்த்துபவர் சைவப்புலவர், சைவசித்தாந்தப் பண்டிதர், க. நித்தியதசீதரன் M.A.
விடயம்- வாழ்க்கையில் சமயம்
நிகழ்த்துபவர் இளஞ்சைவப் புலவர் கைலைநாதன் (ஆசிரியர்)
மங்கள வாத்தியம்: நாதேஸ்வரசக்கரவர்த்தி S. பாலமுருகன் குழுவினர் (ஈழ நல்லூர்)
கன்னன் குழுவினர் சித்தங்கேணி.
ஒளி அமைப்பு இராஜன் சவுண்ட்ஸ் சித்தங்கேணி
நன்றியுரை: - க. இரட்ணேஸ்வரன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்.
குறிப்பு: மெய்யடியார்கள் பண்பாட்டுக் கோலங்களுடன் வருகை தருவதுடன் அம்பாளின் விழா சிறப்புறதேங்காய் எண்ணெய், பூ, பூமாலை, வீபூதி, கற்பூரம், அர்ச்சனைப் பத்திரம் அனைத்தையும் கொடுத்து அம்பாளின் அனுக்கிரகங்களை பெற்றுய்யும் வண்ணம் வேண்டு கின்றோம்.
விளம்பர அனுசரணை SUBRA கல்வி நிலையம், சித்தங்கேணி, வட்டுக்கோட்டை சுழிபுரம்.
அம்பாளின் தொண்டில் ஆலய சித்த ஞான குரு இந்திரன் ஐயா, ஆலய தொண்டர்கள்.

உதயன்

# ஜனரஞ்சகம்

## முக நூலில் சுட்டது






## பணம்... காசு.... துட்டு.... மணி....

நவீனமயமாகிக் கொண்டுவரும் உலகில் அனைவரும் அலைந்து தேடுவது பணத்தைத்தான். பணம் வாழ்வதற்கு மட்டுமல்ல, அதற்கும் மேலாக உதவி செய்கின்றது. இறந்தவுடன் நெற்றியில் வைக்க ஒரு ரூபாய் கூட உதவும் என்று கூறுவதுண்டு.

அவ்வாறிருக்கையில் கோமா நிலையிலிருந்த ஒருவரை, பணத்தை காட்டி உயிர் பிழைக்க வைத்த சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது. ஜியோலீ (வயது–30) என்ற வர்த்தகரே இவ்வாறு உயிர் பிழைத்துள்ளார்.

அவரது வர்த்தகத்தை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும் என்பதற்காக, ஒருவாரம் தூக்கமின்றி இணையத்தளத்திலேயே காலத்தைக் கழித்துள்ளார். திடீரென மயங்கி விழுந்த அவர் கோமாநிலலையை அடைந்துள்ளார். ஒரு வருடகாலமாக, மருத்துவர்கள் எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் அவரது உடல்நிலையில் முன்னேற்றமில்லை.

இதனால், அவருக்கு மிகவும் பிடித்தமானபொருள் அல்லது நேசிக்கும் பொருள் எதுவென, நோயாளியின் உறவினர்களிடம் மருத்துவர்கள் கேட்டுள்ளனர். அனைவரும் ஒரேவார்த்தையில் பணம் என்று கூறியுள்ளனர். எனவே, பணத்தைக் கொண்டு ஜியோவுக்கு சிகிச்சை வழங்க மருத்துவர்கள் முடிவுசெய்தனர்.

அதன்படி, 100 யென் (சீன நாணயம்) ஜியோவின் மூக்குக்கு அருகில் கொண்டு சென்று அதன் வாசத்தை நுகரச் செய்துள்ளனர். மேலும், அந்தக் காசை கசக்கி அதன் சத்தத்தையும் ஜியோவைக் கேட்கச் செய்துள்ளனர்.

ஜியோவின் உடலில் அசைவு தெரிந்துள்ளது. கைகள் மேலெழும்பி ரூபாய் நோட்டைப் பறிக்க முயற்சித்துள்ளது. கண் இமைகளிலும் லேசான அசைவு ஏற்பட்டுள்ளது. 30 ஆண்டு கால மருத்துவ சேவையில் இப்படி ஒரு அதிசயத்தை இப்போது தான் முதன் முறையாக பார்க்கிறேன் என்றும் அவருக்கு மேலும் சிகிச்சைகள் அளிக்க வேண்டும் என்றும் ஜியோவுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## திடீர் நெருக்கம்



நடிகர் சித்தார்த் மற்றும் தீபாசன்னிதி இருவருக்குமிடையில் திடீர் நெருக்கம் ஏற்பட்டுள்ளது. இருவரும் 'எனக்குள் ஒருவன்' என்ற திரைப்படத்தில் ஜோடியாக நடிக்கின்றனர். இதன் படப்பிடிப்பு முடிந்துள்ளது.

சித்தார்த்தும் தீபாசன்னிதியும் இந்தப் படத்தில் நடித்துக் கொண்டு இருந்த போது நண்பர்களானார்கள். பின்னர் அவர்களுக்குள் நெருக்கம் ஏற்பட்டதாக கூறப்பட்டது. இருவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து பேசினர்.

சித்தார்த், சமந்தா காதல் முறிவதற்கும் தீபாசன்னிதி காரணம் என்கின்றனர். சித்தார்த்தும் சமந்தாவும் நீண்ட நாட்களாக காதலித்தனர். பட விழாக்களுக்கும் ஜோடியாக வந்தார்கள். இரு வாரங்களுக்கு முன்பு சமந்தா திடீரென காதலை முறித்துக் கொண்டார். அவருக்கு சித்தார்த் – தீபாசன்னிதி நெருக்கம் தெரிய வந்ததால் விலகி விட்டதாக கூறப்படுகிறது.

## கொஞ்சம் சிரியுங்க பாஸ்...

நாத்திகன்: சாமி எனக்கு ஒரு சந்தேகம்
ஆத்திகன் : என்ன சந்தேகம்?
நாத்திகன்: மகாபாரதத்தில் துரியோதனன் பாஞ்சாலி சேலையை துயில் உரியும்போது பகவான்கிருஷ்ணன் என்னசெய்தார் சாமி??
ஆத்திகன் : அபிஸ்து, ஊரு உலகத்துக்கே தெரியும். பகவான் கிருஷ்ணன் சேலை 'சப்ளை' செய்து பாஞ்சாலியோட மானத்தைக் காப்பாத்தினார்.
நாத்திகன்: ஏன் சாமி காமடி பண்ணுறீங்க ?
ஆத்திகன் : அபச்சாரம் அபச்சாரம் ஏன்டா பாவி அப்படி கேக்குற?
நாத்திகன்: அப்படியில்லை சாமி. உங்கள் எதிரில், ஒருத்தன் ஒரு பொண்ணுடைய சேலைய உருவினா, சேலையை உருவினவனை இரண்டு அப்பு அப்புவீங்களா அதை விட்டுட்டு சேலையை 'சப்ளை' செய்வீங்களா?
ஆத்திகன் : ???

## பேஸ் புக் தத்துவம்

சினிமா கதாநாயகர்களுக்கு பாலாபிஷேகம் செய்வதை விட்டுவிட்டு...
ஒரு நாய்க்கு பிஸ்கட் வாங்கி போடுங்கள். உங்களை பார்க்கும் போதெல்லாம் வாலாட்டும்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: விலகி நின்ற உறவுகளும் உரிய நேரத்தில் கை கொடுப்பார்கள். புதிய வீட்டிற்கு செல்வது பற்றி முடிவெடுப்பீர்கள். குடும்பத்தில் இருந்த மனக்கசப்புகள் நீங்கி உற்சாகம் பிறக்கும்.

**இடபம்**: தந்தைக்கு உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். தங்களுக்கு வரவேண்டிய பண மிகுதிகள் வந்து சேரும். நீண்ட நாள்களாக இருந்த கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

**மிதுனம்**: சுபகாரிய விடயமாக வெளியூர் செல்ல நேரிடலாம். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் முடிவுக்கு வரும். வீடு மாற்றிக்கொள்ள விரும்புபவர்கள்மாற்றிக்கொள்ளத்தக்கதருணம்வந்து சேரும்.

**கடகம்**: புதிய வாகனம் யோகம் வந்துசேரும். உங்களுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்த்தல் வேண்டும். முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

**சிங்கம்**: புதிய காரியங்களைச் செய்ய தொடங்குவதற்கு முன் நல்ல நேரம் காலம் பார்த்து செய்வது நல்லது. வேலையில் இருந்த பளு ஓரளவு குறையும். அதில் இருந்து வந்த தாமத நிலையும் மாறும்.

**கன்னி**: வெளிநாட்டு வேலை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும். வியாபாரிகளுக்கு நெடுநாள்களாக இருந்து வந்த கடன்கள் தீரும். கூட்டு வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும்.

**துலாம்**: புதிய இட ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவான விஷயங்களில் தலையிடுவோருக்கு உங்கள் கருத்துக்களை மற்றவர்கள் ஆமோதிப்பார்கள்.

**விருச்சிகம்**: பெண்களால் இருந்த தொல்லைகள் மறைந்து நிம்மதி பிறக்கும். அயலாரின் ஆதரவு கிடைக்கும். குறுகிய பயணங்கள் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு சாதகமான முன்னேற்றம் ஏற்படப்போவது உறுதி.

**தனுசு**: நல்ல அறிமுகம் கிடைக்கப் பெற்று முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்கு கேளிக்கையில் நாட்டம் அதிகரிக்கும். பெற்றோர்கள் பிள்ளைகளின் மீது தனிக்கவனம் செலுத்துவது நல்லது.

**மகரம்**: வெற்றிகளைக் குவித்து வாழ்வில் வசந்தம் வீசப் போகும் நாளிது. குடும்பத்தை சாராத ஒருவரால் தொழிலில் சிரமம் ஏற்பட்டு பின் மறையும். பதற்றத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கடைப்பிடியுங்கள்.

**கும்பம்**: சில விரயங்கள் ஏற்பட்டாலும் அவை யாவுமே சுபச்செலவுகள் தான் என்பதை உணருங்கள். எனினும் பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கை, திறமை திறன் அதிகரிக்கும்.

**மீனம்**: நுண்கலை, கட்டிடக்கலை சார்ந்த தொழில் செய்பவர்களுக்கு நன்மை கிடைக்கும். உடலைப் பற்றி தவறான எண்ணங்கள் தோன்றி மறையும். குடும்பத்தில் நல்ல சந்தோஷ தருணங்கள் ஏற்படும்.

## துனேஸ் கன்கந்த பிரதி அமைச்சர்

கொழும்பு, ஜன. 15

நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பிரதியமைச்சராக ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துனேஸ் கன்கந்த நியமிக்கப்பட்டுள்ளார். அரச தகவல் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

அவர் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன முன்னிலையில் கடந்த 12 ஆம் திகதி சத்திய பிரமாணம் செய்து கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## வடக்கு ஆளுநரை நீக்கக் கூடாதாம்

### அரசிடம் கோருகின்றார் மொஹமட் முஸமில்

கொழும்பு, ஜன.15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கிணங்கவே வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி நியமிக்கப்பட்டமையால், அரசு அவரை பதவியிலிருந்து நீக்கக்கூடாது என்று தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப்பேச்சாளர் மொஹமட் முஸமில், நேற்று வலியுறுத்தியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசு அதனது 100 நாள் திட்டத்திலிருந்து விலகி வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியை நீக்க முற்படுகின்றது. அத்துடன் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவை கைது செய்வதற்கான சூழ்ச்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது"– என் றும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (ற)

## விகாரைகளுக்கு சென்றார் மைத்திரி

கொழும்பு, ஜன.15

நேற்று பல விகாரைகளுக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன, பௌத்த குருமாரை சந்தித்து ஆசிர்வாதம் பெற்று கொண்டுள்ளார்.

முதலில், நுகேகொட பாகொட ஸ்ரீ வித்யா விஜயாராமவிற்கு சென்ற ஜனாதிபதி அமரபுர நிக்காயவின் மகாநாயக்கர் தவுல்தென ஞானீஸ்ஸர தேரரிடம் ஆசி பெற்று கொண்டதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து பன்னிபிட்டிய ருக்மலே ஸ்ரீ தர்ம விஜயாலோக மஹா விகாரைக்கு சென்ற ஜனாதிபதி மகா நிக்காயவின் கோட்டே பிரிவு மகா நாயக்கர் இத்தேபான டம்மாலங்கார மகாநாயக்கரை சந்தித்துள்ளார்.

இதுத்விர, பெல்லன்வில ரஜ மஹா விகாரைக்கு சென்ற ஜனாதிபதி மத வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்போது, பெல்லன்வில விமலரத்ன தேரரை சந்தித்து ஆசிர்வாதம் பெற்று கொண்டதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.(ற)

## கங்கை ஆற்றில் மிதந்த நூற்றுக்கும் மேற்பட்ட உடல்கள்

கான்பூர், ஜன.15

உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூர் மற்றும் உன்னாவோ இடையிலான கங்கை ஆற்றில் திடீரென நூற்றுக்கும் மேற்பட்ட உடல்கள் மிதந்து வந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. திடீரென எப்படி இத்தனை உடல்கள் வந்தன என்று விசாரணை செய்யுமாறு அந்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

பாரியார் என்ற இடத்தில் இந்த உடல்கள் கங்கை ஆற்றில் மிதந்து வந்தன. இந்த உடல்கள் அனைத்தும் கங்கை ஆற்றில் விடப்பட்டவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இருப்பினும் ஒரே சமயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட உடல்கள் மிதந்து வந்ததால் அப்பகுதியில் பரபரப்பும், வியப்பும் ஏற்பட்டது. ஒரே நேரத்தில் இத்தனை உடல்களையா? ஆற்றில் போட்டனர் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

இதுகுறித்து தற்போது கான்பூர் மற்றும் உன்னாவோ நகர நிர்வாகங்கள் விசாரணை நடத்தி வருகின்றன. இந்த உடல்களை மீட்டு இறுதிச் சடங்குகள் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தண்ணீர் குறைந்துள்ளதே உடல்கள் மிதந்து வந்ததற்குக் காரணமாக இருக்கலாம். இறந்தவர்களின் உடல்களை இங்கு இடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பலர் இதில் குதித்துத் தற்கொலையும் செய்து கொள்கின்றனர். வயதானவர்களை கங்கையில் கொண்டு வந்து பலர் விட்டு விட்டுச் செல்கின்றனர். பலர் இறந்தவர்களின் சடலங்களை கங்கை ஆற்றில் அப்படியே போட்டு விட்டுச் செல்கின்றனர். இதனாலும், பல் வேறு மாசுகளாலும் கங்கை நதி கெட்டுப் போய் விட்டது. தூய்மையற்று அசுத்த நதியாக மாறி விட்டது. கங்கையை சுத்தப்படுத்த வேண்டும் என்று பல காலமாக கோரிக்கை விடப் பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் மோடி அரசு கங்கை நதியை சுத்திகரிக்க ரூ. 2037 கோடி மதிப்பீட் டில் திட்டம் வகுத்து அறிவித்தது.(ற)

## தொடர்ச்சிகள்

### விரைவில்

விடுதலை என்பவை பற்றி அதிக அக்கறையுடன் பிரஸ்தாபித்தது கூட்டமைப்பு.

எவ்வளவு பிரதேசம் முப்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது?, அதனால் எத்தனை குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன?, எவ்வாறான முன்னுரிமையின் அடிப்படையில் காணிகளை விடுவிப்பது? என்பவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதுகுறித்து கவனத்துடன் கேட்டறிந்த சந்திரிகா, மீள்குடியமர்வு தொடர்பான முழுமையான விவரங்களைத் திரட்டி வழங்குமாறு தமிழ்க் கூட்டமைப்பினரிடம் கேட்டுக் கொண்டார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விவரமும் சந்திரிகாவால் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரிடம் கோரப்பட்டுள்ளது. எத்தனை பேர் எந்தெந்தச் சிறை களில் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர் என்பது தொடர்பாக விவரங்களைத் தருமாறு அவர் கேட்டுள்ளார்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதன்போது, கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட மங்கள – முனசிங்க தெரிவுக்குழு, 1995 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் முன்வைக்கப்பட்ட சர்வகட்சிக் குழு அறிக்கை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பேச்சை விரைவில் ஆரம்பிப்பது என்று இருதரப்பினரும் இணக்கம் கண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற–5)

### மஹிந்த

பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர,

"ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று வாக்கு எண்ணும் பணி ஆரம்பமாகியதும், அதிகாலை 1 மணிக்கு அந்தச் செயற்பாட்டைக் குழப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த சதி நடவடிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, ஜி.எல். பீரிஸ், பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் ஆகியோர் தொடர்புபட்டுள்ளனர்.

அத்துடன் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் மற்றும் வாக்கு எண்ணும் அலுவலகங்களை பனாகொட இராணுவ முகாம் வீரர்களைக் கொண்டு சுற்றிவளைப்பதற்கும் அங்கு கலகங் களை ஏற்படுத்தவும் முயன்றுள்ளனர்.

இந்த நடவடிக்கையை தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவும், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் வன்மையாக எதிர்த்து நின்றுள்ளனர். அதனாலேயே சதி முயற்சி முறியடிக்கப்பட்டது. இருப்பினும் சதி முயற்சி மேற்கொண்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டத்தரணிகள் மூலம் முறைப்பாட்டை கையளித்துள்ளேன்"– என்று தெரிவித்தார். (ற–5)

### நல்லிணக்கத்தை

துன்பப்பட்ட மக்கள் இன்று இங்கு கூடியிருக்கிறார்கள். வன்செயலாலும் இரத்தக் களரியாலும் வடக்கிலும் தெற்கிலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவங்களை யாரும் மறந்து விட முடியாது. தமிழ், சிங்கள மக்கள் இழந்து விட்ட ஒற்றுமை மீண்டும் கட்டியெழுப்பப்படவேண்டும்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைதி, நீதி கிடைக்க வேண்டும். அதற்காக மடு அன்னையிடம் பிரார்த்திப்போம்.

இந்த நாட்டுக்கு விரைவில் அமைதியும் ஒற்றுமையும் கிடைக்க அனைவரும் ஒற்றுமைப்படுவோம்–என்றார் பாப்பரசர். (த–21)

### கூட்டமைப்பின்

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து மாகாண சபைகளிலும் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணசபையில் இதுவரை காலமும் மஹிந்த தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி செய்து வந்தது.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறியிருந்தது. அதனைப் போன்று ரிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் கட்சியும் வெளியேறியிருந்தது. அதனால் கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும்பான்மை பலத்தை இழந்துள்ளது.

இதனையடுத்து எதிர்கட்சிகள் ஆட்சி அமைக்க முடிவு செய்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே கிழக்கு மாகாணத்தில் தனிக் கட்சியாக கூடிய ஆசனம் காணப்படுகின்றது. கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், ஐ.தே.க. 5 ஆசனங்களையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் கொண்டுள்ளன.

அதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமையில் கிழக்கு மாகாண ஆட்சி அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. விரைவில் கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

### மீள்குடியேற்ற

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமசந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு சந்திப்பு நடத்தியிருந்தார். அதில் தமிழ் மக்களின் மீள்குடியமர்வுக்கு ஆலோசனைக் குழு அமைப்பது தொடர்பில் பேசப்பட்டது. தமிழ் மக்கள் அவர்களது சொந்த நிலங்களில் மீள் குடியமர்வு செய்யப்படும் போது, ஏனைய வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இராணுவத்தினர் சகல இடங்களிலும் உள்ள வீடுகளை தரை மட்டமாக்கியுள்ளனர். எனவே பொதுமக்களுக்கு தற்காலிக வீடுகளாவது வழங்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. உடனடியாக செய்து கொடுக்க வேண்டிய வசதிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், மீள்குடியேற்ற அமைச்சின் தலைமை அலுவலகத்தை கொழும்பில் வைத்திருந்தாலும், வடக்கு மாகணத்தில் தனியானதொரு அலுவலகம் நிறுவப்பட வேண்டும் என்று கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கையை மீள்குடியேற்ற அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். (ற–5)

### இலங்கை

என்று இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள புதிய அரசுடன், நரேந்திர மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றது. வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர கடந்த திங்கள் கிழமை பதவியேற்றிருந்தார். இந்த நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் அவரை இந்தியாவுக்கு வருமாறு அழைத்ததையடுத்து எதிர்வரும் 18 ஆம் திகதி அவர் அங்கு செல்லவுள்ளார்.

அதன் போது, ஜனாதிபதி மைத்திரிபாலவின் இந்தியப் பயணம் குறித்து கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபாலவின் செய்தியையும் கையளிப்பார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் புதிய ஆட்சியாளர்களுடன் நெருக்கத்தைப் பேணுவதில் இந்திய மத்திய அரசு தீவிரம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற–5)

# விளையாட்டு

## இலகு வெற்றியுடன் இறுதிக்கு வண்ணார்பண்ணை ஸ்ரீகாமாட்சி

கரணவாய்,ஜன.15

சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை 4 இலக்குகளால் வீழ்த்தி இறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றது. வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழ கம்.

கொம்மாந்தறை விளையாட் டுக் கழகம் இரண்டாவது வருட மாக நடத்தும்; அணிக்கு 8 பேர் கொண்ட 8 பந்துப்பரிமாற்ற துடுப்பாட்டத் தொடர் இமையா ணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. அதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலா வது அரையிறுதியாட் டத்தில் சுன்னாகம் காந்தி நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் வண் ணார்பண்ணை சிறி காமாட்சி விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சுன்னாகம் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய் தது. இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடக் களமிறங்கிய அவ் அணி சிறி காமாட்சி விளையாட் டுக்கழக வீரர்களின் பந்து வீச் சுக்கு முகம் கொடுக்க முடியா மல் ஆரம்பம் முதலே தடுமாறி யது. சீரான இடைவெளியில் இலக்குகள் பறிபோக சுன்னா கம் நியூஸ்ரார் அணி 7ஆவது பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 45 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. அதிக பட்டசமாக ராகுலன் 19 ஓட்டங்களையும் ஜான்சன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் சிறி காமாட்சி விளையாட்டுக்கழகம் சார்பாக சிந்து 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 3இலக்குகளையும் சியு 2 இலக்குகளையும் கைப் பற்றினர்.

பதிலுக்கு 46 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு கள



மிறங்கிய வண்ணார் பண்ணை சிறிகாமாட்சிவிளையாட்டுக்கழக அணி ஆரம்பம் முதலே அதிரடி யாக ஆடி ஆட் டத்தில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. 5.2 பந்துப் பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அதிகபட்சமாக நிக்சன் 19 ஓட்டங் களையும் ரம்மிய ராகுலன் 17 ஓட்டங் களையும் பெற்றனர். பந்து வீச்சில் சுன்னாகம் நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சார்பாக விஸ்ணு, ஜிந்தா, கோபி ஆகியோர் தலா ஒரு இலக்கை கைப்பற்றினர். (த–108–ரி)

## பொங்கலை முன்னிட்டு விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 15

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் உழவரின் திரு நாளை முன்னிட்டு நடத்தும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நாளை வியாழக் கிழமை இடம் பெறவுள்ளன.

நாளை காலை 9 மணி முதல் பட்டம் விடும் போட்டி வலித் தூண்டல் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு அருகில் உள்ள மைதானத்தில் இடம் பெறவுள் ளது. தொடர்ந்து மாலை இள வாலை வாலிபத் திடல் மைதா னத்தில் ஆண், பெண் இருபா லார் மற்றும் சிறுவர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுக்க ளும் இடம் பெறவுள்ளன.

இதில் ஆண்களுக்கான போட் டிகளாகத் தலையணைச் சண்டை, வழுக்கும் மரம் ஏறு தல், தயிர் முட்டி உடைத்தல், கயிறிழுத்தல் போன்றனவும், பெண்களுக்கான போட்டிகளா கத் தேங்காய் துருவுதல், கிடுகு பின்னுதல் போன்றனவும், சிறு வர்களுக்கான போட்டிகளாக யானைக்குக் கண் வைத்தல் போன்ற பல போட்டிகளும் இடம் பெறவுள்ளன. (த–23–ரி)

## உழவர் திருநாள் விளையாட்டுக்கள்

யாழ்ப்பாணம், ஜன. 15

உழவர் திருநாளினை முன்னிட்டு அராலி மாவத்தை விளை யாட்டுக்கழகம் பல்வேறுபட்ட விளையாட்டுக்களை உள்ள டக்கி விழா ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

கழகத்தின் தலைவர் கெ.துஸ யந்தன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வு நாளை நண்பகல் 12 மணியளவில் அராலி தெற்கு மாவத்தை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

குறித்த நிகழ்வில் பிரதம விருந் தினராக வடமாகாண விவசா யத்துறை அமைச்சர் பொ.ஐங்கர நேசன், மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பி னர் ந.நடேந்திரன், ஓய்வுநிலை அதிபர் வி.சிவஞான போதன், சமுர்த்தி உத்தியோகத்தர் க.தர் சனன், அராலி வலிமேற்கு பிர தேச சபையின் பொறுப்பதிகாரி வ.லம்போதரன். ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வலி மேற்கு பிரதேச சபைத் தவி சாளர் திருமதி நா.ஐங்கரன், வடமாகாண சபை உறுப்பினர் ப.கஜதீபன், பேராசிரியர் க.சிற் றம்பலம் ஆகியோரும் கலந்து கொள்வர். (த–ரி)

## உலகக் கிண்ணத்தை இந்திய அணியால் தக்கவைக்க முடியாது

உலகக்கிண்ண சம்பியன் பட் டத்தை இந்திய அணியால் தொடர்ந்தும்வைத்திருக்கமுடியா தென ஆஸ்திரேலிய அதிரடி வீரர் டேவிட் வார்னர் தெரிவித் துள்ளார்.

14 அணிகள் பங்கேற்கும் 11 ஆவது உலகக்கிண்ண கிரிக் கெட் போட்டி ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் அடுத்த மாதம் 14ஆம் திகதி ஆரம்ப மாகிறது.

உலகக் கிண்ணப் போட்டியின் அணிகளின் நிலை குறித்து ஆஸ்திரேலிய அணியின் அதி ரடி ஆட்டக்காரர் டேவிட் வார்னர் கருத்து வெளியிட்டுள்ளார்.

சமீபத்தில் முடிந்த இந்தியா– ஆஸ்திரேலியா டெஸ்ட் போட்டி தொடருக்கு அமைக்கப்பட்ட ஆடுகளங்களுக்கும், உலகக் கிண்ண போட்டிக்கு தயாரிக் கப்படும் ஆடுகளங்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும். கூடுதலாக பந்து பவுன்ஸ் ஆகும் வகையில் ஆடுகளம் அமைக் கப்படும் என்று நினைக்கிறேன். பவுன்ஸ் அதிக அளவில் இருக் கும் வகையில் பிட்ச் அமைப் பதில் ஆஸ்திரேலிய ஆடுகளப் பராமரிப்பாளர்கள் உலக அள வில் தலை சிறந்தவர்கள். அவர்கள் வேகப்பந்து வீச்சுக்கு அனுகூலம் அளிக்கும் வகை யில் பிட்ச்சை நிச்சயம் அளிப் பார்கள். இது அவுஸ்திரேலிய அணிக்கு சாதகமாக அமையும்.

ஆசிய கண்டத்தை சேர்ந்த இந் தியா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட அணிகள் பவுன்ஸ் அதிகம் ஆகும் ஆடுகளங்களில் விளையாட தடுமாறுவார்கள். நடப்பு சம்பியனான இந்திய அணி,உலககிண்ணசம்பியன்பட் டத்தை தங்க வைக்க முடியாது. மேலும் இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலிய அணி, தென்னா பிரிக்கா அல்லது இங்கிலாந்து அணியை சந்திக்கக்கூடும் என வார்னர் தெரிவித்துள்ளார்.(த)

## வில்லியம்சன் விலகல்

நியூஸிலாந்து வீரர் கனே வில்லி யம் சன் காயம் காரணமாக இலங் கைக்கு எதிரான ஏனைய ஒருநாள் போட்டிகளில் விளையாட மாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கை, நியூஸிலாந்து அணிகள் 2 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 7 ஒரு நாள் போட்டிகளை கொண்ட சர்வ தேச போட்டித் தொடரில் மோதி வருகின்றது.

இவ்விரு அணிகளுக்கும் இடையி லான முதலாவது டெஸ்ட் போட்டி யின் போது வில்லியம்சனிற்கு தோள் பட்டையில் காயம் ஏற்பட் டதாக தெரிவிக்கப்பட்டது.


எனினும் 2 டெஸ்ட் போட்டி மற்றும் முதலாவது ஒருநாள் போட்டியி லும் நியூஸிலாந்து அணியின் சார் பில் வில்லியம்சன் பங்கேற்று சிறப் பான ஆட்டத்தை வெளிப்படுத் தினார்.

இந்நிலையில் தற்போது காயம் காரணமாக அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாகநியூஸிலாந்து அணியின் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார். (த)

## பெரடருக்கு நேரில் கோஹ்லி வாழ்த்து

ரென்னிஸ் நட்சத்திரம் ரோஜர் பெரடர் பிரிஜ்பெய்ன் ரென்னிஸ் தொடரில் தனது 1000ஆவது வெற்றியை பதிவு செய்ததை அடுத்து இந்திய டெஸ்ட் தலைவர் விராட் கோஹ்லி பெரடரைச் சந்தித்து வாழ்த்துக் களையும் தெரிவித்து கலந்துரையாடியுள் ளார்.

இது குறித்து கோஹ்லி தன் ருவிட்டர் பதிவில் 'இந்த நாள் எனக்கு மறக்க முடியாத நாள், ரென்னிஸ் மைதானத் திலும் வெளி யேயும் ரோஜர் ஒரு மகத்தான வீரர்' என்று பதிவிட்டுள்ளார். மேலும், தானும் பெரடரும் சேர்ந்து நிற்குமாறு எடுத்துக் கொண்ட புகைப்படத்தையும் அவர் வெளியிட்டுள்ளார். நட்சத்திர வீரர்சச்சின் டெண்டுல்கர் டென்னிஸ் நட்சத்திரம் ரோஜர் பெரடரை சில முறை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)






## கட்டுப்பாட்டுச் சபையுடன் கடுப்பானார் கிறிஸ் கெயில்

உலகக் கிண்ணத் தொடருக்கு டுவைன் பிராவோ, பொலார்ட் தேர்வு செய்யப் படாதது பழி வாங்கும் நடவடிக்கை. இது முட்டாள்தனமான முடிவு என கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து இணைந்து 11ஆவது உலகக் கிண்ணத் தொடரை நடத்துகின்றன. பெப்ரவரி 14 தொடக்கம் மார்ச் 29 வரை நடத்துகின்றன. இதற்கான 15 பேர் கொண்ட அணியை மேற்கிந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது. இதில், சம்பள ஒப்பந்தம் தொடர்பான சர்ச்சையில் சிக்கிய சகலதுறை வீரர்களான டுவைன் பிராவோ, பொலார்ட்டுக்கு இடம் கிடைக்க வில்லை. இதனால் சகவீரர் கிறிஸ் கெய்ல் மேற்கிந்திய துடுப்பாட்ட கட்டுப் பாட்டுச்சபை மீதும் மற்றும் கிளைவ் லாய்டு தலைமையிலான தேர்வுக் குழு வினர் மீதும் கோபமடைந்தார்.

இது குறித்து கெய்ல் கூறியது: –

உலகக் கிண்ணத் தொடருக்கு டுவைன் பிராவோ, பொலார்ட் தேர்வு செய்யப் படாதது அதிர்ச்சியாக உள்ளது. இதனைப் பழி வாங்கும் நடவடிக்கையாக கருதுகிறேன். இது, மிகவும் வேதனை அளிக்கிறது. எங்கள் அணியின் துடுப்பாட்ட வரிசை பலமாக இருந்தது. தற்போது இவர்களை நீக்கியதால் வலுவிழந்துள்ளது. சிறந்த சகலதுறை வீரர்களான இவர்கள் களத்தடுப்பிலும் சிறப்பாக செயல்படுவார்கள் என்பதால், அணிக்கு மிகப் பெரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இவர்கள் நீக்கப்பட்டதன் பின்னணி என்னவென்று முழுமை யாகத் தெரியவில்லை. இது முட்டாள்தனமான முடிவு.

தற்போது மேற்கிந்திய துடுப்பாட்டம் எதை நோக்கிச் செல்கிறது எனத் தெரியவில்லை. தென் ஆபிரிக்காவுக்கு எதிரான 20/20 தொடரை கைப்பற்றியது மகிழ்ச்சி. ஒருநாள் மற்றும் உலக கிண்ண தொடருக்கு சிறந்த வீரர்களான இவர்கள் இல்லாதது ஏமாற்றம்–இவ்வாறு கெய்ல் கூறினார். (த–ரி)

## முதலிடத்தில் சங்கா



டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடர்கள் முடிவில் சர்வதேச கிரிக்கெட் சபை தர வரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இலங்கை மற்றும் நியூஸிலாந்து இடையி லான டெஸ்ட் போட்டித் தொடர் முடிவில் புதிய தரவரிசைப் பட்டியல் வெளியி டப்பட்டுள்ளது.

இதன்படி தென்னாபிரிக்க அணி (124 புள்ளிகள்) முதலிடத்தில் நீடிக்கிறது. ஆஸ்திரேலிய அணி (118 புள்ளிகள்) 2ஆவது இடத்தையும், இங்கிலாந்து அணி (104 புள்ளிகள்) 3ஆவது இடத்தையும், பாகிஸ்தான் அணி (103 புள்ளிகள்) 4ஆவது இடத்தையும், நியூஸிலாந்து அணி (99 புள்ளிகள்) 5ஆவது இடத்தையும், இலங்கை அணி (96 புள்ளிகள்) 6ஆவது இடத்தையும் வகிக்கின்றன.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டித் தொடரில் 0–2 என்ற கணக்கில் தோல்வி கண்ட இந்திய அணி (95 புள்ளி கள்) 6ஆவது இடத்தில் இருந்து 7ஆவது இடத்துக்குப் பின்தங்கி இருக்கிறது.

துடுப்பாட்டத் தரவரிசையில் இலங்கை வீரர் சங்கக்கார (909 புள்ளிகள்), தென் ஆபிரிக்க வீரர் டிவில்லியர்சை (908 புள்ளிகள்) பின்னுக்குத் தள்ளி விட்டு முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இரட்டைச் சதம் அடித்ததன் மூலம் சங்கக்கார மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

பந்து வீச்சு தரவரிசையில் தென்னாபிரிக்க வீரர் ஸ்டெயின் முதலிடத்திலும், அவுஸ் திரேலிய வீரர் ரையான் ஹாரிஸ் 2ஆவது இடத்திலும், இலங்கை வீரர் ஹறத் 3ஆவது இடத்திலும், இங்கிலாந்து வீரர் அண்டர்சன் 4ஆவது இடத்திலும், ஆஸ்தி ரேலிய வீரர் ஜான்சன் 5ஆவது இடத்திலும் உள்ளனர்.

சகலதுறை ஆட்டக்காரர் வரிசையில் பங்களாதேஷ் வீரர் ஷகிப் அல்–ஹசன், தென்னாபிரிக்க வீரர் பிலாண்டர், இந்திய வீரர் அஸ்வின் ஆகியோர் முறையே முதல் 3 இடங்களில் தொடருகின்றனர். (த)




## கோடிக்கணக்கான ரசிகர்களின் எதிர்பார்ப்பை எகிற வைக்கும் இந்தியா- பாகிஸ்தான் மோதல்

உலகக்கிண்ண தொடரில் இந்தியா, பாகிஸ்தான் அணிகளின் மோதல் அதிக ரசிகர்கள் பார்த்த சாதனையை நிகழ்த்தப் போவதாக விளையாட்டு துறை வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

உலகக்கிண்ண கிரிக்கெட்டில் பி பிரிவில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இடம்பெற்றுள்ளன. பெப்ரவரி 15ஆம் திகதி, இந்தியா– பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

இவ்விரு அணிகளின் மோதல் எப்போதும் ரசிகர்களின் மத்தியில் பெரும் வரவேற்பை பெறும். அதற்கு ஏற்ப இரு அணிகளும் வாழ்வா, சாவா என ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ரசிகர்களுக்கு விருந்தளிப்பர்.

கடந்த 2011ம் ஆண்டு மொகாலியில் நடந்த அரையிறுதிப் போட்டியில் இந்தியா– பாகிஸ் தான் அணிகள் மோதின. அதில் இந்தியா வென்று இறுதிப் போட்டிக்குள் சென்றது.

இந்தப் போட்டிக்கு பிறகு இதுவரை இவ்விரு அணிகளும் மோதிக்கொள்ளவில்லை. மொகாலி யில் நடைபெற்ற கடந்த உலகக்கிண்ண அரை யிறுதிப் போட்டியை, உலகமெங்கிலும் 988 மில்லியன் ரசிகர்கள் கண்டு களித்திருந்தனர்.

இந்நிலையில் ஆஸ்திரேலிய உலகக்கிண்ண போட்டியில் இந்தியா–பாகிஸ்தான் மோதும் போட்டியை 1 பில்லியனுக்கும் மேற்பட்ட ரசி கர்கள் கண்டுகளிக்க வாய்ப்புள்ளதாக கூறப் படுகிறது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வரலாற்றிலேயே மிகப்பெரிய போட்டி இதுவாகத்தான் இருக்கும் என்று அந்த நாட்டு விளையாட்டுத்துறை வல்லு நர்கள் தெரிவித்துள்ளனர். (த)

## தங்கப்பந்தைத் தட்டிச் சென்ற ரொனால்டோ



உலகின் மிகச்சிறந்த உதைப்பந்தாட்ட வீரருக்கான பலோன் டி ஓ விருதை போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ வென்றார்.

கடந்த 1991 முதல் சர்வதேச உதைபந்துக் கூட்டமைப்பு சார்பில், ஒவ்வொரு ஆண்டும் சிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான விருது வழங்கப்படுகிறது.

வீரர்கள் திறமை அடிப்படையில் 209 சர்வதேச அணிகளின் அணித் தலைவர், பயிற்சியாளர்கள் மற்றும் உலகம் முழுவதிலும் இருக்கும் பத்திரிகையாளர்கள் அளிக்கும் வாக்குப் பதிவு அடிப்படையில், சிறந்த வீரர் தெரிவு செய்யப்படுவார்.

கடந்த 2009 முதல் 2012 வரை என, தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள், ஆர்ஜென்டினாவின் மெஸ்ஸி இவ்விருதை வென்றிருந்தார்.

கடந்த ஆண்டு (2013) இவ்விருதை இவரிடமிருந்து போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தட்டிச்சென்றார்.

இந்நிலையில் இந்த ஆண்டுக்கான விருதுக்கு ஆர்ஜென்டினாடிவின் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸி (பார்சிலோனா), போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (ரியல் மட்ரிட்), உலகக் கிண்ணம் வென்ற ஜேர்மனி அணியின் கோல் காப்பாளர் மானுவல் நேயூர் (பேயர்ன் முனிக்) என மூன்று வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் மொத்த வாக்குகளில் 37.66 வீத வாக்குகளை பெற்று முதலிடம் பெற்ற ரொனால்டோ, 2014ஆம் ஆண்டின் சிறந்த வீரருக்கான தங்கப்பந்து விருதை தொடர்ந்து இரண்டாவது முறையாக தட்டிச் சென்றார். (த)

# செய்திகள்

## தொடர்ந்தும் தங்க நாயகனாக ஜொலித்தார் ரொனால்டோ



சர்வதேச கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பான 'பிபா' சார்பில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸியை (ஆர்ஜென்டினா) பின்னுக்குத்தள்ளி போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 3வது முறையாக உலகின் தலைசிறந்த கால்பந்து வீரராக தேர்வு செய்யப்பட்டு தங்க காற்பந்தினை தட்டிச் சென்றார்.

180 நாடுகளை சேர்ந்த தேசிய அணிகளின் தலைவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் செய்தியாளர்கள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்றனர். இதில் ரொனால்டோ அதிகபட்சமாக 37.66 சதவீத வாக்குகளை பெற்று முதலிடம் பிடித்தார். இதன்மூலம் தொடர்ந்து 2வது முறையாக பிபா தங்க கால்பந்து விருதை தட்டிச் சென்றார். 3வது முறையாக அவர் இந்த விருதை பெறுவது குறிப்பிடத்தக்கது (2008, 2013, 2014).

இரண்டாவது இடம் பிடித்த லயனல் மெஸ்ஸிக்கு 15.76 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. மெஸ்ஸி இந்த விருதை அதிகபட்சமாக 4 முறை வென்று முன்னிலை வகிக்கிறார்.

சிறந்த வீராங்கனை விருதை ஜெர்மனியின் நடீன் கெஸ்னர் தட்டிச் சென்றார். சிறந்த கோல் அடித்த வீரராக கொலம்பியாவின் ஜேம்ஸ் ரோட்ரிகியூஸ் விருது பெறறார். (ந-ரி)

## ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரின் பரிசுத் தொகை ரூபா 250 கோடி

ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடருக்கான பரிசுத் தொகை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த பரிசுத் தொகை இந்திய மதிப்பில் ரூ.250 கோடிக்கு மேல் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் வரும் 19-ஆம் தேதி முதல் பெப்ரவரி 1-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதற்காக முன்னணி வீரர், வீராங்கனைகள் அனைவரும் ஆஸ்திரேலியா சென்றுள்ளனர்.

இந்நிலையில் ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடருக்கான பரிசுத் தொகையை ஏற்பாட்டாளர்கள் அதிகரித்துள்ளனர். இதன்படி ஒட்டுமொத்த பரிசுத் தொகை ரூ.250 (இந்திய மதிப்பில்) கோடிக்கு மேல் அதிகரிக்கப்பட்டுள்ளது. கிண்ணம் வெல்லும் வீரர், வீராங்கனைக்கு முறையே ரூ.20 கோடி (இந்திய மதிப்பில்) பரிசுத் தொகை கிடைக்கும். முதல் சுற்றில் தோல்வியடைபவர்களுக்குகுறைந்தபட்சம் ரூ.22 லட்சம் (இந்திய மதிப்பில்) கிடைக்கும்.

ஆண்டுதோறும் ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடருக்கான பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ஒட்டு மொத்த ப்ரிசுத் தொகை ரூ.210 (இந்திய மதிப்பில்) கோடியாக இருந்தது. இப்போது சுமார் 40 கோடிக்குமேல்அதிகரிக்கப்பட்டுள்ளது. (ந-ரி)

## இந்தியாவின் தோல்விக்கு தலைவர்களே காரணம்

*– இயன் சப்பல்.*



டெஸ்ட்ஆட்டங்களில் இந்திய அணியின் முன்னேற்றம் தடைப்படுவது தலைமைத்துவத்தின் தவறான அணுகுமுறையால் தான் என இயன் சப்பல் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்திய டெஸ்ட் தொடரின் தோல்விக்குப்பின்னர் இயான் சப்பல் கூறியதாவது –

ஆஸ்திரேலியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி ஆஸ்திரேலியாவின் ஒவ்வொரு முதல் இன்னிங்ஸ்களிலும் 500 ஓட்டங்களை குறைந்தது கொடுத்து வந்துள்ளது.

இப்படிக் கூறுகையில் பந்துவீச்சாளர்கள் மீது குற்றம் சுமத்துவதாக தெரியும், ஆனால் இது உண்மையிலிருந்து வெகுதூரம் விலகியுள்ளது. பந்து வீச்சாளர்கள் மோசமாக வீசுவதற்கு பிரதான காரணம் தலைவர்களான தோனியும் விராட் கோஹ்லியும்.

விராட் ஹோக்லி பொறுமையற்றவராகச் செயல்பட்டதால் பந்துவீச்சாளர்கள் இலக்குகளை எடுக்க தாறுமாறாக எதை எதையோ செய்தனர். கோஹ்லிக்கு யோசனைகள் இல்லாமல் இல்லை, அது தலைமைத்துவத்திற்கு அழகுதான், ஆனால் பந்து வீச்சாளர்களை சீராக துல்லியமாக வீசச் செய்ய கோஹ்லி அவர்களைப் பழக்க வேண்டும். இதற்கு பொறுமை தேவை, எடுத்தோம் கவிழ்த்தோம் அணுகுமுறை பயனளிக்காது.

ஆடுகளத்தில் திறமையான வீரர்களை இந்திய தலைவர்கள் வீழ்த்த கடுமையாக போராடுவது விசித்திரமாகவே படுகிறது. இந்தியாவைப் பொறுத்த வரையில் அஸ்வின் மட்டுமே பாடம் கற்றுக் கொண்டுள்ளார். அஸ்வின் நன்றாக வீசினார், ஆனால் அருகில்இருக்கும்களத்தடுப்பாளர்கள் அவருக்கு உதவியாகஇல்லை – என்றார். (ந-ரி)

## பஞ்சத்தில் பந்து வீச்சு

இந்திய அணிக்குத் தேவைப்படும் அளவுக்கு, திறமையான இளம் பந்துவீச்சாளர்கள் தற்போது இல்லை. உள்ளூர் ஆட்டங்களிலும் எதிர்பார்த்த அளவுக்கு திறமையுள்ள பந்து வீச்சாளர்கள் தற்போது இல்லை என முன்னாள் இந்திய அணியின் ஜாம்பவான் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பதாவது:

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை நன்றாகவே உள்ளது. ஆனால், அண்மைக் காலமாக வெளிநாடுகளில் இந்திய பந்து வீச்சின் தரம் மோசமாக உள்ளது. அதனால், டெஸ்ட் தரவரிசையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

சுழற்பந்து வீச்சோ, வேகப் பந்து வீச்சோ எதுவாக இருந்தாலும் தொடர்ந்து சிறப்பாக பந்து வீச முடியாவிட்டால், உலகத்தரமான பந்துவீச்சாளராக இருக்க முடியாது. முடிவுகளைத் தீர்மானிக்க முடியாவிட்டால் தரவரிசையில் சரிவைச் சந்திக்க வேண்டியதுதான்.

தரவரிசையைப் பற்றி நான் பெரிதாக கவலைப்படுபவனல்ல. எனவே, தரவரிசை என்பதைவிட வெளிநாடுகளில் நாம் எப்படி விளையாடுகிறோம், கடந்த 14 மாதங்களில் சந்தித்த பிரச்சினைகளில் எப்படி கவனம் செலுத்தப் போகிறோம் என்பது தான் முக்கியம். என்றார். (ந-ரி)

**விசேட கருத்தரங்கு**

Feb 7 இல் நடைபெறவுள்ள (OPEN) சட்டமாணி போட்டிப் பரீட்சைக்கான (LLB) கருத்தரங்கு

★ காலம் :- 17.01.2015 சனிக்கிழமை
★ நேரம் :- காலை 9.00 - 4.00 மணி வரை
★ விரிவுரையாளர்:- P. ⋯மாசங்கர் வழமையான ஆசிரியர்.

Feb 6 வரையான பிரதி சனிக்கிழமைகளில் தொடர்ச்சியாக கருத்தரங்கு நடைபெறும்.

நாவலர் கல்வி நிலையம்.
ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 4696695

**தாதி தேவை**

தாதியாக வேலை செய்யப் பெண் பிள்ளை தேவை மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

நடனமுருகன் வைத்திய நிலையம்.
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0777 66 7659 021 222 5655

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்ததுக்கள்!

**German Institute**

German Swiss நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புகள் மொழிபெயர்ப்புடன் ஜேர்மனியில் இருந்து வருகைதந்த ஆசிரியரால் நடைபெறுகின்றது.

10, Palaly Road, Jaffna.
Mrs. P. Kajenthini 077 1604823

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
**தைப் பொங்கலை முன்னிட்டு குறைந்த கட்டணங்களில் கற்கை நெறிகள்**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course**

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)

16/01/2015 @ 9.00am
17/01/2015 @8.00am
18/01/2015 @ 11 am
19/01/2015 @ 3 pm

No.15, Sirambiyadi Lane, Off Stanley road (Above Sathosa SM), Jaffna.
Tel : 021-2224550
Head Office: No.30 15/2, W.A. D. Silva Mawatha, Colombo -06. Tel : 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

**SPOKEN ENGLISH**



O/L எழுதியோர், தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர், யுவதிகள் இணைய முடியும்.

சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 17.01.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00

வாரநாள் (திங்கள், புதன்) பயிற்சிநெறி ஆரம்பம் : 19.01.2015
பிரிவு 1 : 08.00 - 10.00 பிரிவு 2 : 10.00 - 12.00

பயிற்சிநெறி முடிவில் "DIPLOMA CERTIFICATE"

யாழ்நகர் 021 320 33 13
சங்கானை 021 567 41 33
நெல்லியடி 021 3200 607

SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

**9 ஆவது சட்டமாணி பயிலரங்கு 2015/ 2016**

கடந்தளவான தசாப்த காலத்தில் கணிசமான சட்டத்தரணிகளை உருவாக்கியவளவாளர்கள் இம்முறையும் சங்கமிக்கிறாரகள்.

விரிவுரைகள்: சிரேஸ்ட ஊடகவிலாளர்கள் (வானொலி, தொலைக் காட்சி புகழ்)

சட்டத்தரணி M.I. உவைசுர் ரஹ்மான் (LL.B) - பொது அறிவு, ஆங்கிலம்)
ஜனாப் சாபிர் (SLAS, LL.B REDING)
உதவிப் பிரதேச செயலாளர் (தமன) நுண்ணறிவு

**காலம்:- 2015. 01. 17 ஆம் திகதி (சனிக் கிழமை)**
**நேரம்:- காலை 08.30 - 4.30 மணி வரை**
**இடம் :- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபம்.**
**தொடர்புகளுக்கு:- 07777 61477- 351 923**
**கட்டணம்: 800/=**

கலந்து பயன் பெறுங்கள்,
கற்றறிந்த சட்டத் தர ணியாக மிளிருங்கள்

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


உதயன்
தைத்திருநாள்
சிறப்பிதழ் 15.01.2015
30
அகவையில்
உதயன்


எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
New Uthayaa
JEWELLERS
Manufacturers Of Gold Juwels
நியூ உதயா ஜுவல்லர்ஸ்
KARAT METER
உங்களது தங்கநகைகளின்
கரட்டை துல்லியமாக உறுதிப்படுத்து
வதற்கான இலத்திரனியல் கருவி
எம்மிடம் உண்டு.
இல. 91, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
No.91 Power House Road,
Jaffna.
Tel : 021 222 2031



Edinborough
In Every Cuisine
40 Years
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!
தை பிறக்க நல்ல வழி பிறந்து உங்கள் அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சியும் சுபீட்சமும் பொங்கிட வாழ்த்துகிறோம்....
உலகம் முழுவதும் நம்பிக்கையை வெற்றி கொண்ட உயர் தர "எடின்பரோ" தயாரிப்புகள் அனைத்தையும் இப்பொழுது நீங்கள் சுவைத்திடலாம்.
40 வருட அனுபவத்தினூடாக அதிசிறந்த மூலப்பொருட்களை மட்டும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் "எடின்பரோ" தயாரிப்புகளை சுப்பர்மார்க்கட்டுகள் உட்பட நாடுமுழுவதிலுமுள்ள விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
சுவையும் குணமும் நிறைந்த
தக்காளி சோஸ்,
சிலி சோஸ்,
ஒய்ஸ்ட்டர் சோஸ்,
சோயா சோஸ்,
மயோனைஸ் சோஸ்,
மஸ்ட்டட் கிரீம்,
மெங்கோ சட்னி
உட்பட பல்வேறு தயாரிப்புகள் உங்களுக்காக.
Edinborough Products (Pvt) Ltd. Tel: 0117 326 326 | Fax: 0114 617 655 | email: info@edinboroughfoods.com | web: www.edinborough.lk | # 12, New Kolonnawa Road, Moragasmulla, Rajagiriya, Sri Lanka.




Sandy's
beauty care
சான்டீஸ்
அழகுக்கலை நிலையம்
யாழ். மத்தியில்
உங்களுக்காக
நவீனவசதிகளுடன் புதிதாக
ஆரம்பிக்கப்பட்டுள்ளது
Ladies Only
விலைக் கழிவு
100/=
500/=
இற்கு மேல்
செலவு
செய்பவர்களுக்கு
பல வருடகால அனுபவம்மிக்க அழகுக்கலை நிபுணர்களால் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன்
A/C, TV உடன் கூடிய நவீன கருவிகளின் வசதியுடன் சேவைகள் வழங்கப்படுகின்றது.
facial (All Types)
Bridal make up
Waxing
Manicure/ Pedicure
Threading
Hair Cutting
Hair Style
Straightening
perming
Cake Orders
Wedding Cake
Birthday Cake
Member of Tilko Group
65, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P- 021 221 7679




## நன்றியுணர்வோடு சந்தோஷத்தை அனைவருடனும் பகிர்ந்து கொண்டாடுவோம்

புதியதொரு ஆரம்பமும், புதியதொரு எதிர்பார்ப்பும், திடமான நோக்கமும் வாழ்வில் அவசியம். அவ்வாறு வாழ்வின் வெற்றிக்கு வழிவகுக்கும் புதிய வழிகள் பிறக்கட்டும் என இந் நன்னாளிலே நாம் பிரார்த்திப்போம். உழைப்பிற்கு உதவிய ஆதவனுக்கு நன்றி கூறும் அதேவேளை சந்தோஷத்தை அனைவருடனும் பகிர்ந்து கொண்டாடுவோம். நம் தேசத்தின் தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் முன்னணி நிறுவனமான ஸ்ரீ லங்கா ரெலிகொம் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது.

www.slt.lk | துரித அழைப்பு: 1212

Sri Lanka Telecom

LITRO GAS

**"தை பிறந்தால் வழி பிறக்கும்"**

**தைத்திருநாளை முன்னிட்டு லிற்றோ காஸ் வழங்கும் விஷேட விலைத் தள்ளுபடி**

தை 15ஆம் திகதி தொடக்கம் மாசி 16ஆம் திகதி வரை பண்டிகைக் காலத்தில் தாங்கள் கொள்வனவு செய்யும் 12.5 kg லிற்றோ டிவற்று சிலிண்டர் 3400 ரூபா மட்டுமே. அத்துடன் 5 kg வெற்று சிலிண்டர் 2200 ரூபா என்பதையும் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.




**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் S.V. முருகேசு லிற்றோ காஸ் நிறுவனத்தின் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்.**



~~4100.00~~
விஷேட விலை
**3400.00**

~~2600.00~~
விஷேட விலை
**2200.00**

இச்சலுகையினை தங்களுக்கு அருகில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட லிற்றோகாஸ் முகவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விஷேடமாக இப் பண்டிகைக்காலத்தில்

**S.V. முருகேசு**

**இல. 106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

எனும் முகவரியில் அமைந்துள்ள எமது லிற்றோ காஸ் விநியோக நிறுவனத்திலும் நேரடியாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**தொடர்புகளுக்கு:**

**021 492 5830 078 5646 505**

**கையிருப்பு உள்ளவரை மட்டுமே.** நிபந்தனைகளுக்குட்பட்டது.

# புத்தாண்டில் புத்தொளி

ஆண்டவன் நம்பிக்கையில்
அமையட்டும் புத்தாண்டு!
நீண்டு செல்லட்டும்
சாத்னைப் பட்டியல்

ஆனந்தமாய் இருப்பவனுக்கு
அவனி சொர்க்கம்!
மனதை செப்பமாக்கியவனுக்கு
மண் ஆனந்தம்

அழுது புலம்ப
ஆண்டவன் படைக்கவில்லை!
தொழுது இன்புறுதலே
தெய்வத்தின் படைப்பு

கடைசித்துளி கண்ணீரையும்
கழுவி ஏறி!
விடை கொடு
வேண்டாத துன்பத்துக்கு

அன்பாய் பழகு
ஆனந்தம் கிட்டும்!
இன்சொல் பேசு;
இனிதே வையகம்

எதிரியால் தொல்லையா
ஆண்டவனிடம் விடு!
கதிகலங்கத் தேவை இல்லை!
கடவுள் காப்பான்

மண்ணில் பிறந்தது
மகத்தாய் வாழ;
விண்ணில் தேவன்
விடுவிப்பான வாழ்வை

இருளில் இருந்து
இன்னல் வேண்டாம்!
ஒளியாய் உனக்கு
ஆண்டவன் இருக்கிறான்

நம்பிக்கை கொண்டு
நாடு ஆண்டவனை;
தொல்லைகள் நீங்கி
தொடரும் வாழ்வு


கடுகளவு விசுவாசம் கூட
பெயர்க்கும் மலையை;
மடுவோ மலையோ
மணவாழ்வு நலமாகும்.



**சிவா**
**திகிரி ஒழுங்கை, தும்பளை,**
**பருத்தித்துறை,**

யாழ் நகரில்

PEARSON
WOLVERHAMPTON
London South Bank University




Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) from more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...

- உயர் கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற் தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற்கான வாய்ப்பு
- மேலுள்ள துறைகளில் HND ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 க்கு மேற்பட்ட பிரித்தானிய அமெரிக்க, அவுஸ்ரேலிய மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு
- கடந்த 15 வருடங்களில் HND உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
Tel : 021 221 9910
Hotline : 077 710 2131

15 YEARS
www.bcas.lk

Colombo | Mt.Lavinia | Kandy | Batticaloa | Kurunegala | Ampara | Jaffna | Qatar

# தைப் பாவாய்! எழுந்து வருகவே



தைப் பாவாய்! நீ எழுகையில்
எங்கள் மனங்களில் எண்ணச் சுழல்கள்
கடவுளரோடு வாழும் தந்தையர்கள்,
மண்ணிலே வாழ்கையில் வயல்களில்
உடல்களை வருத்தி பயிர்களாக்கி,
கதிர்களை அறுத்து நெல் கொண்டு வரவே,
அன்னையர் பக்குவப்படுத்தி அரிசியாக்கிட,
அதிகாலையில் நாமும் எழுந்து
ஆரவாரங்களோடு உதவிகள் புரிந்திட
தந்தையர் பொங்கிப் படைத்து,
தந்திடவே உண்ணுகின்ற அன்றைய நாள்கள்
நேர்மையும் பண்பாடும் மிளிர்ந்த
நேசம் மிகுந்த அன்றைய நாள்கள்
பாரம்மா; எங்குமே எதிலுமே,
வஞ்சகம் மலிந்த இன்றைய நாள்களை
சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து
அழகாய் எழுந்திட்ட உனக்கு
ஆரார்த்திகள் சுற்றியே நாவூறு கழித்தோம்
நீதியும் நேர்மையும் நிலந்தனிலே,
தழைக்க வைத்திட, பாவாய் நீ வருக!
பண்பாடு மிளிர்த்தே அன்போடு,
அறங்களும் வளர வைத்திட,
நீ எழுந்து வருக!
தேசந்தனில் மலிந்திட்ட சீர்கேடுகளை,
சீர் செய்யவல்ல தைப் பாவாய்!
நீ வருக வருகவே!

**நீசாலையூர் கமலா.**




# இனிமையான தைப்பொங்கல் நல் வாழ்த்துகள்!

இதயபூர்வமான சேவையை அளிக்கும் இலங்கையின் முதன்மை வலையமைப்புடன், உங்கள் உறவுகளுக்கு வாழ்த்துகளை தெரிவித்து அளவளாவி மகிழுங்கள்

an axiata company

எதிர்காலம் இன்றே.


Dialog

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

# பாரதி பதிப்பகம்



'விளம்பரப் பதாகைகள்
ஸ்ரிக்கர் பிறிண்டிங்
உயர் தரத்தில்
குறைந்த விலையில்
செய்து கொடுக்கப்படும்'



BEST PRICE ★ BEST QUALITY ★ BEST CHOICE

- ஓவ்செற் பிறிண்டிங்
- ஸ்கிறீன் பிறிண்டிங்
- டிஜிற்றல் பனர் பிறிண்டிங்
- மக், ரைல் பிறிண்டிங்
- ரி-சேட் பிறிண்டிங் (கலர் போட்டோ)
- கலர் பிறிண்டிங்
- போட்டோ பிரதிகள்
- மற்றும் சகல விதமான பிறிண்டிங் வேலைகளுக்கும்...

DIGITAL BANNER PRINTING BEST QUALITY 40/=

விசேட விலைக்கழிவில்
பாடசாலை மெய்வல்லுநர் வெற்றிச் சான்றிதழ்
வீரர்களுக்கான இலக்கங்கள் உடன் பெற்றுக் கொள்ளலாம்

இல: 430, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 021 222 3081



உங்கள் எல்லையற்ற கனவுகளை நனவாக்கிட

# விவாஹாலஸ்

திருமண அழைப்பிதழ்கள்




## தைத் திருநாள் நல் வாழ்த்துக்கள்

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தனது வாடிக்கையாளர்களை மகிழ்விக்க எமது காட்சியறையிலுள்ள 1000 ற்கும் மேற்பட்ட திருமண அழைப்பிதழ்க ளனைத்தும்
20% -40% விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.
மகளிருக்கான Hand Bag Ladies Purse
Gift Items, Gift Bag, Mug Printing, Tile Printing, T.Shirt Printing, Cake Box என அனைத்து விதமான பொருட்களும்
15 % விசேட விலைக்கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றது.



## டிஜிற்றல் பிறிண்டிங்

முதல்தர பனர் சதுரஅடி 60 /= இற்கும
ஏனையவை ரூபா 40/= இற்கும்
அச்சிட்டு பெற்றுக்
கொள்ள முடியும்.

இச்சலுகை 15.01.2015 தொடக்கம்
30.04.2015 வரை மட்டும்

இல :- 244 கே.கே.எஸ் றோட் யாழ்ப்பாணம். தொ.பே: 021 221 9999

# தைப்பொங்கல் பண்டிகையின் நோக்கம் செஞ்சோற்றுக்கடன் செலுத்துவதே!



தைப்பொங்கல் கொண்டாட்டத்தின் அடிப்படையானது சுதந்திரம், சமத்துவம், இரக்கம் மற்றும் கருணையாகும். அவ்வடிப்படையில் தமது மனக்கசப்புகளை விட்டுவிட்டு குடும்பத்தினர்கள் அனைவரும் ஒன்றுகூடி தங்களுக்கு மாத்திரமன்றி விலங்கினங்களுக்கும் இரக்கம், கருணை மற்றும் செஞ்சோற்றுக்கடன் செலுத்துவது இப் பண்டிகையின் விஷேட அம்சமாகும்.

தென்னிந்தியர்களின் பாரம்பரியத்தின் பிரகாரம் உருவாகிவரும் தைப் பொங்கல் வைபவம் உலக வாழ் தமிழ் மக்களால் இன்று விமரிசையாகக் கொண்டாடப் பட்டு வரப்படுகிறது.

தமிழ் பஞ்சாங்கத்தின் பிரகாரம் தை மாத முதல் தினத்தில் இப்பண்டிகை கொண்டாடப் படுகிறது. இற்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் சோழ மன்னர் ஆட்சி காலத்தில் வருட பிறப்பின் ஆரம்ப அறுவடைப் பண்டிகையாக இது ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப் படுகிறது. தமது அறுவடையை செழிப்புறச் செய்வதற்காக சகலருக்கும் சமத்துவமாக தூய மனப்பான்மையுடன் செஞ்சோற்றுக்கடன் செலுத்துவது இப்பண்டிகையின் நோக்கமாகும். அதனுடன், தமது அறுவடையை செழிப்புறச் செய்வதற்காக உறுதுணையாய் அமைந்த சூரிய பகவானுக்கு நன்றிக் கடன் செலுத்துவதுடன் தமது விவசாய அறுவடைகளுக்கு ஒத்தாசை களைப் பெற்றுக்கொடுத்த இதர உயிரினங்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் பண்டிகையாகவும் கொண்டாடப்படுகிறது.



இன்றைய தினம் தைப்பொங்கலைக் கொண்டாடும் தமிழ் மக்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், எமது நாட்டில் அமைதியும் சமத்துவமும் கருணையும் நிரந்தர சமாதானமும் மலர வேண்டும் என இத்தைத் திருநாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பிரார்த்திப்போம்.

டீ.எம்.சுவாமிநாதன்
புனர்வாழ்வு, மீள்குடியேற்ற
மற்றும் இந்து கலாசார அமைச்சர்

# தை மகளே வருக! எம் தமிழ் மகளே வருக!!



தை மகளே வருக! எம் தமிழ் மகளே வருக!!
கை நிறைய உழைத்திடவே களிப்புடனே வருக!!
மை விழியாள் ஆரணங்கே தைமகளே வருக!
நெய்யுடனே புத்தரிசிப் பொங்கலிட்டோம் வருக!

மாக்கோலம் போட்டே மனமகிழ்வுடன் வரவேற்றோம்
தைமகளே நீ ஓடிவந்து தரணி போற்ற வருக!
சீக்கிரமே நீ எழுந்து சீரோடு இங்கு நாம் வாழ
பாத்திரமே ஜொலிக்க நீ பண்புடனே ஓடி வருக!

நெல் மணிகள் விளைந்திடவே கதிர்வீசி நின்றாய்!
சொல் வளமே சிறந்திடவே நல்வரவே தருக!
புல்தரையில் பசுக்கள் புதுப்பொலிவுடனே மேய,
நெல் நல்வரவாய் நெல் வயல் பொலிய வருக! வருக!!

"கலாபூஷணம்" இராசையா ஸ்ரீதரன்.





அனைவருக்கும் எம் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்.

கமலக்கண்ணன் திருமணசேவை

* டாக்டர்கள், இஞ்சினியர்கள், வங்கி ஊழியர்கள், பட்டதாரிகள், லிகிதர்கள், வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும், செவ்வாய் பாவம் கூடிய குறைந்த மணமக்களும் சூரியன் செவ்வாய் குற்றமுள்ள குற்றமில்லாத மணமக்களும் சைவபோசன மணமக்களும் விவாகரத்து பெற்ற உள்நாட்டு, வெளிநாட்டு மண மக்களும் வர்த்தகர்களும் எம்மிடமுள்ளனர்.
* 85 இல் பிறந்த 11 இல் சூரியனும் செவ்வாயும் 45½ பாவமுடைய சிங்கப்பூரில் பணிபுரியும் சிவில் இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 81 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 16¼ பாவமுடைய வங்கி முகாமையாளருக்கு பட்டதாரி மணமகள் தேவை.

இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
T.P:077 607 0862

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.



பிரெஞ் கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் (www.ambafrance-lk.org) இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136+ நாடுகளில் 1040+ கிளைகள். ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரான Dr. Gérard உட்பட) சரியான உச்சரிப்பு AFஇல் மட்டுமே. இலங்கையில் நாம் மட்டுமே INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)ஐ வழங்குகின்றோம் (பிரான்சில் தொடர்ந்து படிக்க எமது CERTIFICATES உதவுகின்றன). பிரெஞ்சு மொழிபெயர்புகள். AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். படிக்கும் காலம் முழுவதும் PHOTOCOPIES இலவசம். வடமாகாணத்தை சேர்ந்த ஏராளமானோர் AFஇல் படித்தே பிரான்ஸ் செல்கிறார்கள்.

புதிய வகுப்புகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பம்... முன்னரே அனுமதி பெறவேண்டும்.

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

இலவச அழகுக்கலைப் பயிற்சி
(நிபந்தனைக்குட்பட்டது)

Nivithra

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

நிவித்திரா அழகுக்கலை நிலையத்தின் இலவச அழகுக்கலை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இதில் இணைந்து கொள்ள விரும்புவோர் முன் பதிவுகளுக்கு முந்துங்கள்.



முதல் 10 பதிவுகளுக்கு CAKE ICING பயிற்சி இலவசம்

குழுவினராக, பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு விசேட சலுகைகள்



பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இல. 340, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீலங்கா புத்தக சாலை அருகில்)
தொடர்பு:- 0777712604, 0766919277



# எமது விடிவுக்கான கதவுகள் திறக்கப்படும் என்ற நம்பிக்கை பொங்கும் திருநாளாக புலர்ந்துள்ள தைப்பொங்கல்

நாம் அழுத கண்ணீரும் சிந்திய இரத்தமும் அதற்குக் காரணமான இன ஒடுக்குமுறை அரசை இன்று அதிகாரபீடத்தில் இருந்து தூக்கி வீசியிருக்கிறது. மாற்றத்துக்கான வாக்களிப்புடன் புதிய ஆட்சி சிம்மாசனம் ஏறியுள்ளது. அந்த மாற்றத்தை நோக்கிய பயணத்துக்குத் தமிழ் மக்களாகிய நாமும் கரங்கொடுத்தோம். அந்த வகையில் எமது விடிவுக்கான கதவுகள் திறக்கப்படும் என்ற நம்பிக்கை பொங்கும் நாளாகத் தைப்பொங்கல் இம்முறை புலர்ந்துள்ளது.

உலகத் தமிழ் மக்கள் அனைவரும் உழவர் திருநாளாகப் போற்றிக் கொண்டாடும் தமிழ்ப் புத்தாண்டு தினமாகிய தைப்பொங்கல் நன்னாளில் எனது மனம் நிறைந்த பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன்.

விமானக் குண்டு வீச்சுகளும், எறிகணைகளும், துப்பாக்கி வேட்டுகளும் எமது தாய்நிலத்தைக் குருதி வெள்ளத்தால் நிறைத்த நாள்களிலும், ஒப்பாரி ஒலிகள் மத்தியிலும் எமது பொங்கல் விழாக்கள் மங்கல நாள்களாகக் கொண்டாடப்பட்டன. இழப்புகளால் சூழப்பட்ட போதிலும், இலட்சியம் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் எங்கள் பொங்கல் பானைகள் பொங்கி வழிந்தன.

எமது விடுதலைப் போராட்டம் 2009 மே மாதம் பெரிய பின்னடைவைச் சந்தித்தபோதும், நாம் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என இடிந்து போய்விடவில்லை. அகதி முகாம்களிலும் எங்கள் தைப்பொங்கலைப் பொங்கினோம். இருக்கும் ஒரு பிடி அரிசியைப் பொங்கியேனும் சூரிய தேவனுக்குப் படையல் செய்தோம். போர்க்காலத்தைவிடப் போர் முடிந்த பின்பு எம்மைச் சுற்றி ஒடுக்கு முறைகள் இரும்பு வலையாகப் பின்னப்பட்டபோதும், எமது பண்பாட்டு அடையாளங்களை இழந்துவிடாமல் தமிழராக நாம் நிமிர்ந்து நிற்கின்றோம்.

நாம் அழுத கண்ணீரும் சிந்திய இரத்தமும் அதற்குக் காரணமான இன ஒடுக்குமுறை அரசை இன்று அதிகார பீடத்தில் இருந்து தூக்கி வீசியிருக்கிறது. மாற்றத்துக்கான வாக்களிப்புடன் புதிய ஆட்சி சிம்மாசனம் ஏறியுள்ளது. அந்த மாற்றத்தை நோக்கிய பயணத்துக்கு தமிழ் மக்களாகிய நாமும் கரம் கொடுத்தோம். அந்த வகையில் எமது விடிவுக்கான கதவுகள் திறக்கப்படும் என்ற நம்பிக்கை பொங்கும் திருநாளாகத் தைப்பொங்கல் புலர்ந்துள்ளது.

எனினும், எமது உரிமைகளை எவரும் தாமாகத் தந்துவிடப் போவதில்லை. சர்வதேச அரசியல் சதுரங்கத்தில் இப்போது காய்கள் இடமாற்றப்பட்டுள்ளனவே தவிர, பேரினவாத சிந்தனையில் பெரும் மாற்றங்கள் நிகழும் என்பதற்கான உத்தரவாதங்கள் எவற்றையும் எவரும் தரவில்லை. இந்நிலையில் புதிய நம்பிக்கையோடு தளராத உறுதியுடனும் உருக்குப் போன்ற ஐக்கியத்துடனும் மிகுந்தஅரசியல் சாணக்கியத்துடனும் எமது இலட்சிய பயணத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்று தமிழர் திருநாளாம் இத்தைத்திருநாளில் திடசங்கற்பம் கொள்வோம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

**வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்**

# தமிழர் வாழ்வியலின் முக்கிய தொடக்க நாள்

தமிழர் தம் வாழ்வியலின் முக்கிய தொடக்க நாளான இத் தைத்திருநாள் எமது பண்பாட்டின் பல சிறப்பம்சங்களையும் சுமந்து வரும் திருநாளாகவும் எமது தொடக்க நாளாகவும் அமைந்துள்ளது. மிக நீண்ட நெடிய போர் மௌனிக்கப்பட்ட நிலையில் எதிரிகளாலும் துரோகிகளாலும் ஏதிலிகள் ஆக்கப்பட்டு பலவீனர்களாக சகலரும் ஏளனம் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டோம் இந் நிலையில் நாம் நமது வாக்குப் பலத்தின் மூலம் எமது ஒற்றுமையின் தன்மையை வெளிக்காட்டி இவ் நாட்டில் வாழும் தமிழர்களான எமது அபிலாசைகள் எவை என்பதனை உலகறியச் செய்துள்ளோம். இந் நிலை எமது வாழ்வின் விடியலிலும் இலட்சிய பயணத்திலும் முன்னோக்கிய நகர்வுக்கு வித்திடும் என்பது உறுதியானது. இந்த நிலையில் இன்றைய இப் புனித நன்நாளில் பொங்கும் பொங்கலோடு தமிழர் தம் வாழ்வும் வளமும் புது நிலை அடைய அனைவரும் ஒன்று பட்டு பிரார்த்திப்பதோடு எதிரிகளால் கபளீகரம் செய்யப்பட்ட எமது வாழ்விடங்களும் விடுதலை என ஏங்கிநிற்கும் எம் உடன்பிறப்புக்கள் விடுதலை அடையவும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

**திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன்,**
**தவிசாளர்,**
**வலி மேற்கு பிரதேச சபை.**




## அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

## நியூ நெல்சன் லேணர்ஸ்

## New Nelson Learners

**89,Kandy Road, Chundukuli,Jaffna.**

**T.P. 021 222 4527, 077 358 1916, 077 790 6064 Fax: 021 222 9109**

- சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.



## கிளைகள்

இல.89, கண்டி வீதி, சுண்டுக்குளி
021 222 4527
077 358 1916

பஸ் நிலையம் சுன்னாகம்
077 715 0097
021 492 3732

பிரதான வீதி, வல்வெட்டித்துறை
077 557 3711
021 492 3733

இல.127, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி.
021 492 3115
077 111 3382

காளிகோயில் வீதி, சாவகச்சேரி.
021 492 3114
077 761 1686



Northern Central Hospitals

## நொதேன் சென்றல் வைத்தியசாலை



### சத்திரசிகிச்சை

தற்பொழுது நொதன் சென்றல் வைத்திய சாலையில் இருதய சத்திர சிகிச்சை ஒக்சோனியன் காட்பவுண்டேசன் அனுசரணையுடன் குறைந்த கட்டணத்தோடு நடை பெற்று வருகின்றது. இற்றைவரை 19 இருதய சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்டுள்ளன.

### எமது சேவைகள்:

- 24 மணி நேர வெளிநோயாளர் பிரிவு
- மருந்தகம் ஆய்வுகூடம், அவசர சிகிச்சை
- சகல சத்திர சிகிச்சைகள்
- இருதய சத்திர சிகிச்சை
- இருதய சிகிச்சை
- சிறுநீரக சிகிச்சை
- இஇஜி இஎம்ஜி இசிஜி எக்ஸ்றே ஸ்கான் சேவை
- நரம்பியல் சிகிச்சையும் சத்திர சிகிச்சையும்
- பிள்ளைப்பேற்றுக்கான சிகிச்சை
- பற்சிகிச்சை பல்முக சீராக்கல்
- முறிவு நெரிவு சிகிச்சை
- லாப்பரஸ்கோப்பி

**342 பலாலி வீதி யாழ்ப்பாணம்.**

**இணையதளம்:www.nchjaffna.com**

**0212219988 0212219977 0212222263**

## தமிழ் மக்களின் தேசிய வாழ்வை நிலை நிறுத்த தைப்பொங்கல் நாளில் உறுதியேற்போம்




தமிழ்த் தேசிய திருநாளாம் தைப்பொங்கல் நாளில், தமிழ் மக்களின் தேசிய வாழ்வை நிலை நிறுத்த உறுதியேற்போம் என்று தனது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கும் காலநதியில் உலகமானது பல்வேறு மாற்றங்களைக் கண்டு வந்திருக்கிறது. பல்லாயிரம் ஆண்டு நெடிய வரலாற்றை தன்னகத்தே கொண்டுள்ள தமிழர்கள் நாம், கால ஓட்டத்தில் எந்த நிர்ப்பந்தங்கள் வந்த போதும், எமது தேசிய வாழ்வைக் காத்து வந்திருக்கின்றோம். அந்த வகையில் தமிழர்களின் தேசிய வாழ்வியல் அடையாளமாக விளங்குகிற இப்பண்டிகையில் உங்களுடன் அன்பையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வதில் பேருவகை அடைகிறேன். உணவளித்த இயற்கைக்கும், உடன் உழைத்த கால்நடைகளுக்கும் நன்றி சொல்லிக் கொண்டாடப்படும் இத்தைப் பொங்கல் திருநாளில் அனைத்து உறவுகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உலகின் சக்திவாய்ந்த சிறுபான்மையினராகவும், தீர்மானிக்கும் அரசியல் சக்தியாகவும் ஈழத்தமிழினம் மீண்டும் ஒரு முறை உலகிற்கு தன்னை வெளிபடுத்தியுள்ளது. வெற்றியும் மகிழ்ச்சியும் எம் மண்ணில் நிரந்தரமாவதற்கு எமது தேசிய வாழ்வைத் தொடர்ந்து காத்து நிற்பது அவசியமாகும்.

உலகின் மிகச் சிறந்த நாகரீகத்தை வெளிப்படுத்துகிற இத்திருநாளில் எத்தனை தடைகள் வரினும் எங்களின் தேசிய வாழ்வை நிலை நிறுத்த உறுதியேற்போம்—என்றார்.

**து.ரவிகரன்**
**வட மாகாண சபை உறுப்பினர்**

## தமிழர் வாழ்வில் வளம்பெருகி நிலைக்கட்டும் அமைதி, இன்பம்



இன்று பொங்கல் பண்டிகையை கொண்டாடும் அனைவருக்கும் எனது மனமார்ந்த இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு. அந்த வகையில் கடின உழைப்பை வித்திட்ட விவசாயிகளுக்கு சிறப்பான அறுவடையும் வளமும் கிடைக்க வேண்டும். நாட்டு மக்கள் துன்பங்கள் நீங்கி மகிழ்வுடன் வாழ வழி பிறக்க வேண்டும். அனைவருக்கும் மகிழ்ச்சி தருகின்ற அறுவடைத் திருநாளாம் இப்பொங்கல் திருநாளில் தமிழர்களின் வாழ்வில் நலமும் வளமும் பெருகி அமைதியும் இன்பமும் நிலைக்கட்டும் என்று மனமார வாழ்த்தி என் அன்புக்குரிய மக்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**அஸ்மின் அய்யூப்**
**வடமாகாண சபை உறுப்பினர்**















Northern Central Hospitals

நொதேன் சென்றல் வைத்தியசாலை



மகப்பேற்று சிகிச்சை
சாதாரண மகப்பேற்று சிகிச்சை மற்றும் மகப்பேற்று சத்திர சிகிச்சை (Caesarian) நொதேன் சென்றல் வைத்திய சாலையில் குறைந்த கட்டணத் துடன் மேற்கொள்ளப்படுகின்றது. மகப்பேற்று சத்திர சிகிச்சைக்கு ரூபா 85,000/= உட்பட்ட (package) கட்டணம் அறவிடப் படுகின்றது.

எமது சேவைகள்:

- 24 மணி நேர வெளிநோயாளர் பிரிவு
- மருந்தகம் ஆய்வுகூடம் அவசர சிகிச்சை
- சகல சத்திர சிகிச்சைகள்
- இருதய சத்திர சிகிச்சை
- இருதய சிகிச்சை
- சிறுநீரக சிகிச்சை
- இஇஜி இஎம்ஜி இசிஜி எக்ஸ்ரே ஸ்கான் சேவை
- நரம்பியல் சிகிச்சையும் சத்திர சிகிச்சையும்
- பிள்ளைப்பேற்றுக்கான சிகிச்சை
- பற்சிகிச்சை பல்முக சீராக்கல்
- முறிவு நெரிவு சிகிச்சை
- லாப்பரஸ்கோப்பி

342 பலாலி வீதி யாழ்ப்பாணம்.
இணையதளம்:www.nchjaffna.com
0212219988 0212219977 0212222263



இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்.

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

மயூரன்ஸ் நகை மாளிகை
MAYURANS NAKAI MALIKAI

Manufacturers of Gold Jewels

41, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 41, Muslim College Road, Jaffna.
T.P : 077 651 0251



After O/L or A/L
தகவல் தொழில்நுட்ப, ஆங்கிலக்கல்விக்கு...

Professional IT Courses
- Diploma in Information Technology
- Diploma in PC Application
- Diploma in Office Automation
- Dip. in Computerized Accounting
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Dip.in Video Production & Multimedia
- Diploma in Hardware Engineering
- Tally Accounting, AutoCAD
- Programming - JAVA, C, C++, VB.NET

DMI COMPUTER EDUCATION

English Language Courses
Spoken English
Veta Fluency Diploma
ஆங்கிலம் பேசுவதற்கு உத்தரவாதம்
ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி

IELTS
British Council - IELTS பரீட்சைக்கு நீங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் தோற்ற விரும்பின் பதிவுகளை DMI இல் எந்த தினங்களிலும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

DMI is the IELTS Registration center for the BRITISH COUNCIL
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு
பிரிவு II - 17/ 01 /2015 9.30 am
பிரிவு III - 19/ 01/2015 9.30 am

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | கன்னாகம் |
|---|---|---|---|
| No.113, | M.M.V.வீதி, | No.174, | No.130, கே.கே.எஸ் வீதி, |
| Tel.:021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |

யாழ். நகர் மத்தியில் நவீன வசதிகளுடன் கூடிய
அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர்
கலாசார திருமண மண்டபம்
ASR Cultural Wedding Hall

- முற்றிலும் குளிரூட்டப்பட்ட மண்டபம்.
- 700 பேர் இருக்கைகளில் அமர்ந்திருந்து திருமணத்தைப் பார்க்கும் வசதி.
- கீழ் மண்டபத்தில் 350 பேர் அமர்ந்திருந்து நிகழ்வினைப் பார்க்கக் கூடிய வசதி.
- ஒரே நேரத்தில் 200 பேர் உணவருந்தும் வசதி.
- Lift வசதி, விசாலமான வாகன தரிப்பிட வசதி.
- அனைவரும் திருமணத்தைப் பார்க்கும் தொலைக்காட்சி வசதி.
- உணவுகளை தாங்களே பரிமாறிக் கொள்ளும் வசதி. மற்றும் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற முறையில் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இம் மண்டபத்தில் திருமணம் இனிதே நடைபெற்றதில் பதினாறு ஐஸ்வரியங்களும் பெற்று நாம் மகிழ்ச்சியடைகின்றோம். -மணமக்கள்-









ASR Enterprises (PVT) Ltd
இல.542, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 373 4116, 021 222 1355, 021 222 1356.
மின்னஞ்சல்: asrhall@hotmail.com
Find us on: Facebook.com/jaffnaasrenterprises

இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
உலகத்திலேயே தரமான நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை விற்பனைசெய்வதில் பெருமைப்படுகிறோம்









உங்களினதும் உங்கள் குழந்தைகளினதும் ஆரோக்கியமான வாழ்வுக்கு நிரந்தரத் தீர்வு
- உங்கள் வீட்டு கிணற்றுத்தண்ணீரையே நல்ல தண்ணீராக மாற்றித்தரும்.
- தண்ணீரில் உள்ள கல்சியம், உப்பு, கிருமிகள் மற்றும் அனைத்து தாதுக்களையும் நீக்கி வெளியேற்றி தூய்மையான குடி தண்ணீராக மாற்றித்தரும்.
- வீட்டுக்கு மட்டும்அல்ல தேநீர் விடுதிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும். வைத்தியசாலைகளுக்கும். மற்றும் ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களுக்கும். எல்லாவிதமான RO இயந்திரங்களும் உண்டு.
- இலவசமாக தண்ணீர் பரிசோதனை செய்து தரப்படும்.(TDS)Total dissolved Solids.
- விற்பனைக்கு பிந்தியசேவை.

பொதிகளை அனுப்புவதற்கும் எடுப்பதற்கும் எங்களை அணுகவும். இலங்கை இந்தியாவுக்கிடையில் மட்டும் பார்சல் பரிமாற்றம்.
எமது இலங்கை விலாசம்.
வீனஸ் எண்டபிறைசஸ்
இல. 473.2/1. கே.கே.எஸ்.வீதி.யாழ்ப்பாணம்.Ph.No.0773554749, 021-2217744
எமது இந்தியா விலாசம்.
உதயம் ரவலஸ்
இல.6.ராதா அவனியு,சிறிதேவி காடின்,வளசரவாக்கம். சென்னை-87., தமிழ்நாடு. இந்தியா. Ph. No.00 91 9840631766

VENUS AQUA
RO SYSTEMS

100% தூய்மையான குடிதண்ணீர்
1) யாழ்ப்பாணம்:- 021-2217744. 0773554749.
2) முல்லைத்தீவு:- 0775634008.
3) வவுனியா:- 0779912399.
4) கொழும்பு:- 0771987619.

வீனஸ் எண்டப்பிறைசஸ் இல.473.2/1, கே.கே.ஸ்.வீதி, யாழ்ப்பாணம். venusroslk@gmail.com www.venusaquaro.lk

# தைத்திருநாள் சிறப்பிதழ் - 15.01.2015

XI


வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
ஜெகன் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
477, K.K.S. Road, Jaffna.
தொ.பே: 077 4836923
021 222 5035

தைத்திருநாள் வாழ்த்துக்கள்
2015

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

நேரடியாக கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருள்களை யாழ் விலையில் சாவகச்சேரி நகரில் பெற்றுக்கொள்ள....
பாடப்புத்தகங்கள் விசேட கழிவு விலையில்
Diary 2015
பொதிகை
புத்தகசாலை
கொம்பியூட்டர் கிராபிக்ஸ்
இல. 03, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.(நவீனசந்தை அருகாமை)
வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை புரியும்
T.P :0212270447
email : phothigai@gmail.com

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.
நந்தினி பழக்கடை
சகல விதமான உள்நாட்டு, வெளிநாட்டு பழவகைகள் மற்றும் வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய பருத்தித்துறை தட்டை வடை மற்றும் பலகார வகைகள், சுத்தமான பனங்கட்டி, எள்ளுப்பாகு, கேக் வகைகள், பிஸ்கற் வகைகள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
நந்தினி பழக்கடை
நவீன சந்தை, (பஸ் நிலையம் அருகில், பருத்தித்துறை)
T.P: 077 273 7514

அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
RAINBOW TILES STORES
றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி, சிலையடி, மந்திகை- புலோலி
பெயின்ற் வகைகள்,
மாபிள் வகைகள், எஸ்லோன்
பி.வி.சி. பைப் வகைகள்,
கட்டடப்பொருள்கள்,
விவசாய மருந்து வகைகள்,
துவிச்சக்கரவண்டி உதிரிப் பாகங்கள்
மற்றும் மின்சாரப் பொருள்கள்
என்பனவற்றை மலிவு விலையில்
கொள்வனவு செய்யலாம்.
021 226 2696, 077 869 5418

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்.
கிஷோனி வெதுப்பகம்
Kishony Bake House
சகல விதமான கேக்வகைகள், பிஸ்கட், பாண், பணிஸ், சிற்றுண்டி வகைகள் அனைத்தும் சிறந்த முறையில் தரமாக பெற்றுக்கொள்ளலாம்.
Main Street, Point Pedro T.P: 077 163 2873
பிரதான வீதி, பருத்தித்துறை.

அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
NEW STAR PLACE
Mobile Repair
Hardware Software Unlocking
7 நாள்களுக்குள் மீளப்பெற வேண்டும். இல்லாவிடில் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.
T.P: 021 226 0228, Mobile: 077 587 7400
சாவகச்சேரி வீதி, மந்திகை.

சகல அழகுக் கலைச் சேவைகளும் ஒரே இடத்தில்..
இயற்கையான..
அமைதியான..
ரம்மியமான சூழலில்..
மணப்பெண் ஒப்பனைக்கு கற்பனைத்திறன் கொண்ட பெண் கலைஞர்களின் சேவை
தூரிகை பியூட்டி பார்லர்
மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி

இனிய தைத்திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்
Saai Pc For Computer Solution
Computer Repairing All Phone Unlocking & Repairing & All Satellites Receivers Receivers
Recharge Available Here
skype
Chavakachcheri Road, Manthikai.
T.P 021 226 2345
077 636 5882
Fax 021 226 2345
e.mail saaipc@yahoo.c0m

அன்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.
சகலவிதமான சைவ உணவுகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
பிரியங்கா உணவகம்
சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
FIRE EXTINGUISHER
தீ அணைக்கும் கருவிகள்
யாழ்.நகரில் தீ அணைக்கும் கருவிகள் விற்பனைக்குண்டு
வியாபாரத்தாபனங்கள், வாகனங்கள், காரியாலயங்கள், வீடுகளுக்கும், தேவையான சகலவிதமான கருவிகளும் எம்மிடம் விற்பனைக்குண்டு.
கள்வனைக் காட்டிக்கொடுக்கும் எச்சரிக்கை ஒலி (Alarm) எம்மிடம் விற்பனைக்கு உண்டு
YARL FIRE PROTECTORS
146, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
146, KANNATHIDDY ROAD, JAFFNA.
T.P.: 021 221 9905

காஞ்சனா Kanchana
நகை மாளிகை Jewel House
அன்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.
Merchants of Gold Jewels
244, Main Street, Point Pedro. Tel- 021 226 2574, 077 188 2119

**IDM**
**Nations Campus**
Since 1981



# IDM NATIONS CAMPUS JAFFNA

www.idmedu.lk
www.facebook.com/idmnc.j
www.facebook.com/idmnc

புதிய கல்வியாண்டிற்கான Diploma, IHD/HND
இரண்டாவது பிரிவுகள் ஆரம்பம்

முழு நேரம்
20-01-2015
பகுதி நேரம்
(வார இறுதி)
17-01-2015

**Degree** (Final Year) — **12 Months**
- BSc (Hons) In Software Development
- BA (Hons) in Business Management

bucks new university · OPEN UNIVERSITY UNIVERSITI TERBUKA MALAYSIA · Charles Sturt University

**International Higher Diploma** (2nd Year of Degree) — **14 Months**
- International Higher Diploma in Software Development
- International Higher Diploma in Business Management
- BTEC Higher National Diploma in Computing and System Development

Edhat · edexcel advancing learning, changing lives

**Diploma** (1st Semister of Degree) — **4 Months**
- Edhat Computing/BM
- Diploma In ICT/BM
- IDM Int. Dip. in Computing/BM

Edhat · IDM Nations Campus · edexcel advancing learning, changing lives

**After O/L or A/L**

HOTLINE 077 441 9901

# AUTOCAD



2D 3D

Register Before 23rd January

Week Day Classes / Week End Classes
Evening Classes / Personal Classes

bucks new university · Charles Sturt University · OPEN UNIVERSITY UNIVERSITI TERBUKA MALAYSIA · bcs The Chartered Institute for IT · BIT


TVEC TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION SRI LANKA · UGC Sri Lanka Recognized Programme · Edhat International · edexcel advancing learning, changing lives · IDM City Campus # 3

IDM Nations Campus இன் யாழ் குடாநாட்டிற்கான கிளை தலைமையகத்தின்கீழ் பின்வரும் முகவரியில் மாத்திரமே இயங்கி வருகின்றது.

# 216, Nawalar Road, Jaffna.
E-mail : idmnc.jaffna@gmail.com

**TEL : 021 222 9901**

புதுப்பொலிவுடன் சரஸ்வதி
திருமண மண்டபம்
(ராஜா கிறீம் கவுஸ்)
37, சேர்.பொன். இராமநாதன் வீதி,
(நாச்சிமார் கோயிலுக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 320 7369 / 077 923 4176





★ யாழ். நகரில் மிகப் பிரமாண்டமான மண்டபம்
★ நியாயமான கட்டணங்களுடன் கூடிய தரமான சேவை.
★ இரண்டு விருந்துபசார மண்டப வசதி.
★ எல்லா மதத்தினருக்கும் அவரவர் கலாசாரத் திற்கும் விரும்பிய நிறத்திற்கும் ஏற்ற வகையில் மணவறை அலங்காரங்கள்.
★ முற்றிலும் குளிரூட்டப்பட்ட(A/C) வசதி.

அனைவருக்கும்
தைத்திருநாள்
நல் வாழ்த்துக்கள்.

எமது துறையில் புதுமைகளையும்,
புதிய மாற்றங்களையும் அறிமுகப்படுத்தி
வரும் நாம் உலகளாவிய ரீதியில் வேகமாக
வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப
மாறி வளர்ந்துவரும் வேளையதில்
அன்பர்கள் அனைவருக்கும்
இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வடைகின்றார்கள்.

போட்டோ அல்பத்துறையின் இலங்கையின் முன்னோடி
**தவம் போட்டோ கலர் லாப்**
இல. 362 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




எம்முடன் இணையுங்கள்
**JCUD**
யாழ். மாவட்டத்தில்
அனைத்து தொழில்சார்
கற்கைநெறிகளும் ஒரே இடத்தில்

After A/L Join Us!

JAFFNA COLLEGE CEYLON

# Jaffna College
## Undergraduate Department
**464, Hospital Road, Jaffna.**



CA

IBSL

aat SRI LANKA

**CA(Srilanka)**
Chartered Accounting

**Banking Courses**
IABF, DABF

**aat(Srilanka)**
Foundation,
Intermediate & Final

**Pharmacy Course**
Srilanka Medical Council

**English Courses**

**Externel Degree**
B.A & B.Com
Jaffna & Peradheniya Universities.

021 222 3382, 021 373 4500, 021 222 1947, 021 222 9149

# திறமையான சாரதிகள் ஆக வேண்டுமா?

KIRUPA LEARNERS
DS 589

அரச அங்கீகாரம் பெற்ற முதல் தர [A Grade]
சாரதிப் பயிற்சிப் பாடசாலை

# கிருபா லேணர்ஸ்

உங்களுடன் என்றும் இணைந்திருக்கும்

- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்
- காலை 6.00 மணி தொடக்கம் மாலை 7.30 மணி வரையும்
- தங்கள் வசதிக்கேற்ப நேரங்களை தெரிவு செய்யலாம்.
- விரைவில் எழுத்து மூலப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து Learner Permit பெற்றுத் தரப்படும்.
- Licence விண்ணப்பிக்கும் ஒழுங்குகளும் எங்கள் காரியாலயத்திலேயே செய்து தரப்படும்.
- சாரதிக்குத் தேவையான வீதி ஒழுங்கு சட்டநூலும், மாதிரி வினாத் தாலும் இலவசமாகக் கொடுக்கப்படும்.
- சாரதி தெரிந்து கொள்ள வேண்டிய வாகனம் சம்பந்தமான அடிப்படை கல்வி மற்றும் சாரதிக்கான சிறந்த பயிற்சியும் வழங்கப்படும்.
- வாகனம் ஓட்டத்தெரிந்தவர்களுக்கு Licence பெறுவதற் குரிய ஒழுங்குகள் செய்துதரப்படும்.
- உடைந்த, தொலைந்த, தெளிவில்லாத, புதுப்பிக்க வேண்டிய Licence களுக்கு தேவையான வசதிகள் செய்துதரப்படும்.
- சர்வதேச லைசன்ஸ் (INTERNATIONAL LICENCE) பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியும் உண்டு.

**விசேட வசதிகள் (Special Facilities)**

வார நாட்களில் பயிற்சிகள் மேற்கொள்ள முடியாதவர்களுக்கு வார இறுதியில் பயிற்சி வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும். தங்கள் இருப்பிடங்களுக்கு வந்து பயிற்சி வழங்கக்கூடிய வசதியும் உண்டு.

SLOW SCHOOL

தொடர்புகளுக்கு:- கிருபா லேணர்ஸ்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Hotline:- 0777 22 52 92
தொ. பே:- 021 222 4353, 021 492 3200

வவுனியாவில்......
216, ஏ9, வீதி, வவுனியா. (வசந்தி தியேட்டருக்கு முன்பாக)
தொ. பே:- 024 222 7777, 0777 100444

| | | |
|---|---|---|
| சுன்னாகம்<br>021 224 2022<br>071 454 6956 | கிளிநொச்சி<br>021 228 5505<br>071 454 6955 | சாவகச்சேரி<br>021 227 0700<br>071 454 6957 |
| கச்சேரி அருகாமை<br>076 722 5292<br>071 777 5454 | நெல்லியடி<br>021 300 6550<br>071 454 6958 | முழங்காவில்<br>021 300 6544<br>071 454 6955 |
| பருத்தித் துறை<br>021 492 3201<br>071 454 6958 | பூநகரி<br>021 320 1818<br>071 454 6955 | யாழ்ப்பாணம்<br>021 222 4353<br>021 492 3200 |
| விசுவமடு<br>021 320 1515<br>071 454 6955 | மன்னார்<br>023 225 1656<br>077 847 2732 | |

# தைத்திருநாள் சிறப்பிதழ் - 15.01.2015



## அருளாசிச் செய்தி



இன்று தைப்பொங்கல் திருநாள், இந்தப் பொங்கல் பண்டிகை தமிழ் மக்களின் பாரம்பரிய மரபு பேணும் சிறப்புடையதாகும். இன்று தை முதலாம் நாள். நெல் வயலில் நன்கு விளைவதற்கு மூல காரண மூர்த்தியாக இருந்த சூரியபகவானுக்கு நன்றி செலுத்துகின்ற ஒரு பொன்னான நன்னாள் இதுவாகும்.

தை பிறந்து விட்டால் வாழ்வில் மகிழ்ச்சியும் சேர்ந்து பிறந்துவிடும். அதனால்தான் நமது முன்னோர் தை பிறந்தால் வழி பிறக்கும் என்று கூறியிருக்கின்றார்கள். ஆதலால் இன்றைய தைத்திருநாள் தமிழர் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தவிருக்கும் இனிய பெருநாளாகும்.

இந்த மதிப்பார்ந்த இனிய நன்னாளிலே இதுகாலும் பட்ட துன்பதுயரங்கள் நீங்கப் பெற்று இனி சந்தோஷமும் மகிழ்ச்சியும் துலங்கவேண்டும் என்று எல்லாம் வல்ல நல்லைக் குருமணியின் பத்ம மலர்திருப் பாதங்களைச் சிந்தித்து வந்தித்து அருளாசிகள் நல்கி சேவித்து வாழ்த்துகின்றோம்.

ஈழம் வாழ் மக்கள் அனைவரும் ஆனந்த வாழ்வு வாழ்ந்திட நல் ஆசிகள் வழங்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**அதீன குருமுதல்வர்.**

## இவர்களை நாம் போற்ற வேண்டும்

உழவர் பெருமக்களின் உவப்பான திருநாள் தைப் பொங்கல் ஆகும். தலைநிமிர்ந்து வாழும் தமிழினம் தரணியெங்கும் மிக மகிழ்வுடன் கொண்டாடும் திருநாளிது. உத்தராயணம் ஆரம்பமாகும் நாளிது. கால நிலை மாற்றம் வெப்பசக்தி, ஒளி தருகின்ற சூரிய பகவான் மகரராசிக்கு பிரவேசிக்கும் நன்னாள்.

வயலில் அறுவடை செய்த நெல்லை, அரிசியாக்கி வீட்டு முற்றத்திலே அடுப்பு வைத்து, புதுப்பானையிலிட்டு பால் கலந்த நீர்வார்த்து, புத்துணர்ச்சி பொங்க சர்க்கரைப் பொங்கலாக்கி, தலை வாழையிலையில் இட்டு ஆதவனுக்குப் படைத்து நிவேதனம் செய்து, நீராஞ்சனம் காட்டிய பின் அந்தச் சர்க்கரைப் பொங்கலை குடும்பத்தினருடனும் நண்பர்கள், உறவினர்களுடனும் மகிழ்ச்சி பொங்கப் பகிர்ந்துண்ணும் பொங்கல் திருநாளிது.



ஆதவனை வணங்கி, உழவர் பெருமக்களைக் கௌரவப்படுத்தும் நன்னாளிது. உறக்கமின்றி உலகோர்க் குணவளிக்குமிவர்களை நாம் அனைவரும் போற்றிக் கொண்டாட வேண்டும்.

எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லிபுர மாயவனின் பேரருளுடன் இவர்களைப் போற்றி வாழ்த்தி எமது மனமார்ந்த நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் அனைத்து மக்களுக்கும் மிக மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிரம்மஸ்ரீ ச.க சுதர்சனக்குரு, ஜே.பி.**
**(எழுத்தாளர்)**
**ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில், புலோலி**

## செஞ்சொற் செல்வரின் ஆசியுரை.




இயற்கையை இறைவனாகக் கண்டவர்கள் நாம். மண்ணையும் விண்ணையும் மகத்தான எல்லா உயிர்களையும் கடவுளின் வடிவங்களாகக் கண்டவர்கள் நாம். தானாக ஒளி தந்து இந்தத் தரணியைக் காக்கும் கண்கண்ட தெய்வமான சூரியனை காலமெல்லாம் நன்றியோடு நினைப்பதற்கு எம் முன்னோர் விழா எடுத்தனர். தை முதல் நாள் கதிரவனுக்கு பொங்கிப் படைத்தனர். சேற்றுக்குள்ளே நின்று பிறர் சோற்றுக்குள்ளே கைவைக்க உதவும் மாசற்ற உழவனை நன்றி பாராட்டி வாழ்த்தும் நாளாக இந்த நாளைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

பொங்கல் திருநாளில் அனைத்து வீட்டு வாயிலிலும் பொங்கிப் படைத்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றனர். வாழ்நாள் முழுவதும் தடையின்றி உணவு கிடைக்க வேண்டும், நாம் தளர்வின்றி வாழவேண்டும், என மன்றாடி வணங்குங்கள். எம்மை வாழ வைத்த மூத்தோரை இந்த நாளில் நன்றியோடு நினைத்து வணங்குங்கள். பசியில் வாடும் ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதற்கு இந்த நாளில் முயற்சி செய்யுங்கள். எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்று இறைவனிடம் விண்ணப்பியுங்கள். சிறைக் கூடங்களிலும் நோய்களினால் வைத்தியசாலையிலும் துன்புறும் மக்களுக்காக மன்றாடுங்கள். ஏதிலிகளாக அலையும் மக்களுக்கு விமோசனம் கிடைக்க வேண்டுதல் செய்யுங்கள். வெடிகளால் அதிர்ச்சிகளால் விழாவைக் கொண்டாடுவதைத் தவிருங்கள். இவற்றால் துன்புற்றவர்கள் நாங்கள். மகிழ்ச்சியை பகிர்வதற்கு சூழலை மாசுபடுத்தாமல் பயனுள்ள முயற்சிகளை செய்யுங்கள். சிரிக்க வைப்பது, சிந்திக்க வைப்பது, ரசிக்க வைப்பது விழாக்களிலே அவசியமானவை. எனவே நல்ல எண்ணங்களோடு பொங்கல் விழாவை அனைவரும் கொண்டாடி மகிழ்வோம். "அறம் என்றோ ஒரு நாள் வெல்லும்" என்ற செய்தியோடு பொங்கல் நாளை அனைவரும் அமைதியாக வரவேற்போம். அனைவருக்கும் எனது இனிய பொங்கல் வாழ்த்துக்களை சமர்ப்பிப்போம்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை ,**
**தலைவர் , சிவபூமிஅறக்கட்டளை.**




SISIL WORLD
No.106, K.K.S. Road
Jaffna
0212 219 291

SISIL WORLD
No.125, K.K.S. Road
Chunnakam
0212 242 335

SISIL WORLD
No.17/3, Kandy Road
Killinochi
0212 283 755

SISIL WORLD
No.149, Kandy Road
Vavuniya
0777 575 333

# தமிழ் மக்களால் கொண்டாடப்படும் தலையாய திருநாள் பொங்கல்

வருடத்தில் முதலாவது மாதம் தை மாதம். தை மாதம் முதல் திகதி மகர சங்கராந்தி என்பர். உத்தராயணம் ஆரம்பிக்கும் நாளும் அதுவே. தென் திசையிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் திரும்புவதை உத்தராயணம் குறிக்கும். தை முதல் ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயணம் புண்ணியகாலம் என்றும் சுப கருமங்கள் காரியங்கள் நிகழுகின்ற காலம் என்றும் கொள்ளப்படுகின்றது.

உழைப்பின் உயர்வை, உழவர்களின் மேன்மையை மதிக்கும் விழாவாகவும் தைப் பொங்கல் விழா பண்டு தொட்டு வழங்கி வருகிறது. மனித உழைப்பாளிகளுடன், விலங்கு உழைப்பாளிகளையும் நினைத்து நேசித்து நன்றி செலுத்தும் பெருநாளாகவும் தைப்பொங்கல் பண்டிகை விளங்குகின்றது.

பொங்கல்திருநாளில்சூரியன்உதிப்பதற்குஐந்து நாழிகைக்கு முன்னர் அதிகாலையில் மக்கள் நித்திரை விட்டு எழுந்து விடுவர். நீராடித் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வர். வீட்டு முற்றத்தில் சாணத்தினால் மெழுகப்பட்ட நீள் சதுரமான பகுதியை வெள்ளை, சிவப்பு நிற மாவினால் அழகிய கோலமிட்டு மண்டபமாக வடிவமைத்துக்கொள்வர். வாழை, கமுகு, கரும்பு மகர தோரணங்கள், மலர்கள் என்பவற்றால் அலங்கரிப்பர். அதனுள் அழகிய கோலங்களையும் கலைத்திறன் மிளிரப் போடுவர். பிள்ளையார் பிடித்து வைத்து, குத்துவிளக்கேற்றி, பூரண கும்பம் வைத்து பழங்கள், வெற்றிலை,பாக்கு,தேங்காய் முதலிய மங்கலப் பொருள்களை நிவேதிப்பர். விநாயகனை முதலில் நினைத்து இஷ்ட தெய்வங்களை பிரார்த்திப்பர்.

நீரினால் சுத்தம் செய்யப்பட்ட புதுப்பானையைத் திருவணையில் வைத்து அதன் வாய்ப் பகுதியை மஞ்சள் இலை, இஞ்சியிலை, மாவிலை ஆகியவற்றைப் பொருத்தி கட்டி பானையின் மேற்புறத்தில் திருநீற்றைக் குழைத்து திரிபுண்டலமாக மூன்று இடங்களில் பூசி, சந்தனம், குங்குமம் திலகமிட்டு பானைக்குள் பசுப்பாலும் நீரும் விட்டு நிரப்பி தூபதீபம் காட்டி கற்பூர தீபத்தினால் அடுப்பில் நெருப்பை உண்டாக்கிப் பற்ற வைத்து கணவனும் மனைவியும் ஒருமித்த சிந்தையராய் சூரியனை வணங்கி இஷ்ட தெய்வங்களை நினைத்து பானையைப் பக்குவமாய் இருவரும் தம் கைகளால் பற்றிப் பிடித்து தூக்கி அடுப்பில் ஏற்றுவர். இதில் குடும்பத்தவர் யாவரும் இணைந்து கொள்வர்.



பானையில் பால் பொங்கி எழும்போது பொங்கலோ பொங்கல்! என்று உரத்துக் கூவி மகிழ்வர். தம்முடைய வாழ்வில் இன்பம் பொங்கப் போவதை உணர்த்தும் அறிகுறியாகப் பால் பொங்கி ஓங்கி எழுதலைக் கண்டு அவர்களின் மனமும் பொங்கிப் பூரிக்கும். பால் பொங்கி வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாக வேனும், ஈசானத்தை நோக்கியேனும் முதலில் சரிந்து வெளித்தள்ளினால் அதனை நன் நிமித்தமாகக் கருதிப் புளகாங்கிதம் கொள்வர். அதன்பின்னர் குடும்ப தலைவர் புது நெல்லில் குற்றியெடுத்த பச்சரிசியை தம் இருகைகளால் பானையின் விளிம்பை மும்முறை சுற்றி பானையுள் இடுவர். தொடர்ந்து குடும்பத்தலைவி, குடும்பப் பெரியவர்கள் பிள்ளைகள் என்போர் அரிசியைப் பானையில் இடுவர். வெல்லம், கற்கண்டு,நெய், தேன், கருப்பஞ்சாறு, திராட்சை முந்திரிப் பருப்பு, பயற்றம் பருப்பு என்பனவற்றைப் பாலுடன் கலந்துவிட்டு தித்திக்கும் இனிய பொங்கலை ஆக்குவர்.

பொங்கிய அமுதினை மூன்று தலை வாழையிலைகளில் படைத்து பழங்கள் கரும்பு, செவ்விளநீர் மலர்கள் முதலியவற்றைக் கொண்டு மடை பரவி, தேங்காய் உடைத்து வைத்து, நீரும் மலரும் கொண்டு அர்ச்சித்து தூப தீபம் காட்டி பக்தி சிரத்தையோடு திருமுறைகளைப் பாராயணம் செய்து சூரிய பகவானை வணங்கி வழிபாடு செய்வர். பூமியிலே மழை அத்தியாவசியமாகத் தேவை. நீரின்றி இந்த உலகம் இயங்காது. மழையைத் தருவது சூரியன் வெப்பமும், ஒளியும் உயிர்ப்புச் சூரியனாலேயே அனைத்து ஜீவராசிகளுக்கும் வழங்கப்படுகிறது. இன்னார் இனியார், உயர்வு தாழ்வு என்னும் பேதங்களின்றி ஒரே விதமாக எல்லோருக்கும் அவற்றை வழங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தைமுதல் நாளில் பொங்கல் விழா எடுத்து வருகின்றமை தமிழ் மக்களின் நயத்தக்க நாகரிகத்தையும் உயர் பண்பாட்டையும் காட்டுகின்றது.

ஆகவே தைப் பொங்கல் இன்பப் பொங்கலாக அறிவுப் பொங்கலாக, இனிமைப் பொங்கலாக மகிழ்ச்சிப் பொங்கலாக சர்வ மங்கலப் பொங்கலாக அமைய வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போமாக. தை பிறந்தால் வழிபிறக்கும் எனும் நம்பிக்கை நிஜமாக மலரட்டும்.

**மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்.**


# எங்கள் நன்றிகள்!



இனங்களுக்கிடையில் ஐக்கியம்,
மதங்களுக்கிடையில் நல்லிணக்கம்,
தார்மீக நல்லாட்சி,
நீதி மற்றும் நேர்மையான அரசியலுக்காக

மைத்திரி ஆட்சியின் மூலம்
மாற்றமொன்றை ஏற்படுத்த
உங்கள் பெறுமதியான வாக்குகளை
எங்கள் வேண்டுகோளுக்காய்
வழங்கியமை குறித்து,
வடக்கு மக்களுக்கு
எங்களது மரியாதைக்குரிய நன்றிகள்!



உங்களுக்கு இனிய தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!




புதிய மக்கள் கட்சி
146/19, ஹெவ்லொக் வீதி, கொழும்பு - 05.


# மகிழ்ச்சி நிலைபெறப் பொங்கல் செய்வோம்



தைப்பொங்கல் திருநாள். உழவர்களின் பெருநாள். தமிழர்களின் நன்னாள். தமிழினத்தின் பாரம்பரிய கலாசாரத் திருநாள்களுள் உன்னதமானது. இத்தகைய தைப்பொங்கல், தமிழர் வாழும் பெருநிலம் எங்கணும் வருடாவருடம் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.
சூரிய வழிபாடு பேணப்பட்டு வந்த காலம் தொட்டே பொங்கல் நாளைத் தமிழர்கள் உழவர்களின்திருநாளாகவும், தமிழர்களின் பெருநாளாகவும் கொண்டாடி வருகிறார்கள்.
அன்றைய தமிழ் அரசர்களின் காலத்திலிருந்தே இயற்கைய்ய வழிபட்டு இயற்கை அளித்த சிறப்புக்களால் தமிழர்தம் வாழ்வும் அவர் வாழும் நிலமும் வளம் பெற நாட்டை நல்லாட்சி செய்து வந்தார்கள்.
காளைபூட்டி ஏர்நடத்தி வயல் உழுது விதைத்துப் பெற்ற விளைவின் மகிழ்ச்சியில் தைப்பொங்கல் நாளை அறுவடையின் விழாவாகக் கொண்டாடினார்கள்.
அறுவடையால் பொலிந்த நெல் குற்றி அரிசியாக்கி அதனைச் சூரியபகவானுக்குப் படையலிட்டு மகிழ்ந்தார்கள்.
இது முழுக்க முழுக்க தமிழர்களின் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. பொங்கல் பண்டிகையின் சிறப்பு தமிழர்களின் உழைப்பின் மேன்மையை உரத்துரைக்கும் வல்லமைமிக்கதாகும். தமிழர்தம் கலாசாரப் பெருமையில் உழவர்விழா உன்னதவிழாவாக உலகெங்கும் வாழும் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.
மாரிமழை பார்த்துக் கதிரவன் ஒளிவிளங்க விளைந்த நெல் வயலெல்லாம் சிரிக்கும் நெற்கதிர் கண்டு தமிழர் மனம் களிக்கமண் செழிக்கக் கொண்டாடும் தைத்திருநாள், இந்நாளை நாம் மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம்.
மனைதோறும் கோலமிட்டு பொங்கலிட்டு மஞ்சள், கரும்பு போன்ற மங்கலமான பொருள்களோடு பகலவனுக்குப் படையலிட்டுத் தைத்திருநாளைக் கொண்டாடுவோம்.
மகிழ்ச்சி பொங்கும் இந்நாளில் அன்பு கருணை ஆதரவு பெருகவும் மனங்கள் ஒன்றி மகிழ்தாளவும் தமிழர் மனை எங்கணும் புதுப்பொலிவு பெறப் புதுப்பானையில் பொங்கலிட்டு மகிழ்வோம்.
எம் தமிழர் வாழ்வில் எங்கணும் ஒற்றுமையும் நல்லறிவும் பேருழைப்பும் பெருகிடவும் எமக்குத் துயர்தருவோர் இன்று இல்லையென்ற நம்பிக்கையுடன் தொடரும் நாள்கள் யாவிலும் நாம் இடரின்றி இன்புறவும் யாவருமே பொங்கலிட்டுக் குதூகலிப்போம்.

வாழ்க தமிழினம்
தமிழர் வளம் பெருகப் பொங்கல் செய்வோம்
பொழுது சிரிக்கட்டும் கீழ்வானில் – எழில்
பொங்கி மகிழட்டும் நம் மனைகள்
தொழுது சிரிக்கட்டும் நம்தமிழர் – வாழும்
தூய்மை பெருகட்டும் வாழ்வொளிர
அழுதவர் பெற்றிட்ட வெடிகளெல்லாம் – தீயில்
அழித்துச் சிரிக்கட்டும் சிறுவர்குழாம்
உழுதவர் பெற்றிட்ட நெல்மணிகள் – மகிழ்வு
ஊறிப் பெருகிடப் பொங்கல் வைப்போம்
தைத்திருநாள் பொங்கல் வாழ்த்துக்கள்.
எமது மண்ணும் மொழியும் மக்களும் பொங்கு தமிழ்பாடிப் பொங்கலிட வாழ்த்துகிறேன்.





**த.குருகுலராசா**
**அமைச்சர்**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகாரம்**
**வடக்கு மாகாணம்**



# உயிர்களை நேசிக்கும் உன்னத தொழில் விவசாயம்

இந்துப் பண்பாட்டில் பொங்கல் விழா முதன்மையானது. இறைவனுக்கும் பிறர்க்கு உணவு வழங்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்து வழிபாடு செய்யும் நன்நாளே பொங்கல் திருநாளாகும். மனித வாழ்வில் மண்ணில் வியர்வை சிந்தி பிறர் உணவு உண்ண வழி செய்யும் விவசாயி மதிப்புக்குரியவர். விவசாயிகளை உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்க வேண்டும் என்ற பண்பு பல்லாயிரம் ஆண்டுகளாக நிலவி வந்துள்ளது. எந்தத் தொழிலைச் செய்பவரும் விவசாயியிடம் நன்றியாக இருத்தல் அவசியம் என்பதனை நாம் உணர வேண்டும்.

திருவள்ளுவர் திருக்குறளில்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவுபடுத்தினார். விவசாயி ஆனவன் இயற்கையின் பேருதவியோடு பிறரது இடரைக் களைபவன். உலகில் விவசாயிகள் உயர்ந்த நிலையில் வாழ்கிறார்கள். மேலை நாடுகளில் விவசாயம் என்பது மிகத் தரமான தொழிலாகக் கருதப்படுகிறது. விவசாயிகளுக்கு எண்ணிறைந்த விருதுகள் வழங்குகிறார்கள். விவசாயம் தொடர்பாக ஏராளமான பல்கலைக்கழகங்கள் சிறப்பாக இயங்குகின்றன. மேலைநாட்டு விவசாயிகளும் பல்கலைக்கழகமும் நிறைந்த தொடர்பாடலோடு செயற்படுகின்றன. இதனால் விவசாயிகளுக்குரிய சமூக அந்தஸ்து மிக உயர்வாகக் காணப்படுகிறது. எம்மண்ணில் இன்று விவசாயம் செய்பவர்கள் அருகி வருகிறார்கள். விவசாயி என்றால் தரம் குறைந்த ஒன்றாக கருதிவிட்டார்கள். எங்கள் சந்ததியை வாழவைத்த முன்னோர்கள் அனைவரும் விவசாயிகளாக உள்ளார்கள். எந்தத் தொழிலைச் செய்பவரும் தனது குடும்பத்துக்கு வேண்டிய உணவை தாமே உற்பத்தி செய்ய வேண்டிய காலம் ஒன்று இருந்தது. இன்று பொன் விளையும் பூமியாக இருந்த மண் நேசிக்கப்படாமல் இருப்பது கவலை தருகிறது. வேகமாக வளர்ந்த ஜப்பான் நாட்டில் வீட்டுக் கூரைகளில் கூட கொடி மரங்களை உண்டாக்கி பயன்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். மேல் வீடுகளில் கூட சாடிகளில் தாவர வளர்ப்பில் ஈடுபடுகிறார்கள். எங்கள் தலைமுறை வேலையில்லை, வேலையில்லை என்று வீண் பொழுது போக்குகிறார்கள். நிலங்கள் பல பயனற்ற தரிசு நிலங்களாகக் காட்சியளிக்கின்றன. அன்று ஆறில்லாத ஊரில் குளங்களையும், கேணிகளையும், கிணறுகளையும், தூர்வைகளையும் உருவாக்கி தம் தோளின் வலிமையால் வளம் நிறைந்த பூமியாக எம்முன்னோர்கள் காத்தார்கள். விவசாயியின் வீடு கற்பக தருவாக விளங்கியது. வருடம் முழுவதும் உண்பதற்கு தாராளமான உணவு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இன்று எம்மண்ணில் விவசாயம் விபரீதமாகிவிட்டது. எலுமிச்சம் பழம் தொடக்கம் தேங்காய் வரை பிற மாவட்டங்களில் இருந்து வருகிறது. வீட்டு வளவுகளில் வாழை நட்டு தினமும் சுகாதாரமாக இலையில் உண்டு மகிழ்ந்த மக்கள் இன்று பிளாஸ்ரிக் பாத்திரத்திலும், உலோகத் தட்டுகளிலும், கடதாசித் தட்டுகளிலும் இரசாயன தாக்கத்தோடு உண்கிறார்கள்.

இயற்கை எமக்கு தந்த வாய்ப்புக்களை தொலைத்து விட்டு தேடுகிறோம். தைப் பொங்கல் நாளிலே எம் மண்ணை பசுமைப்படுத்தி, உண்ணும் உணவில் தன்னிறைவைக் காண்பதற்கான வழியை அனைவரும் ஒன்றுபட்டு சந்திக்க முற்படுவோம். பொங்கல் விழாவை பக்தி பூர்வமாக கொண்டாடுவதோடு, எனிமேல் புதுமை செய்வதற்கு அனைவரும் தயாராகுவோம், உடலால் உழைப்போம், உணர்வால் எம்மண்ணை கட்டி எழுப்புவோம், எதற்கும் உதவும் விவசாயத்தை மதித்து மலர்ச்சி காண முயல்வோம்.

ரிஷி.தொண்டுநாதன்.




## 'இடம்பெயர்ந்தோர் குடியமர வா மகளே"

குழந்தைகள் குமருகள் இளைஞர்கள் முதியவர்
கேட்ட வரம் கொண்டு வா,
கோணாத கோல் கொண்டு, குலையாத நெறிதந்து
குருவாக எமையாள வா,

இழந்த நிலபுலம், சொத்து வீடெதுவாயினும்
அனைத்தையும் எடுத்திங்குவா
இல்லாதவர் இங்கு அடிமையாகின்ற நிலை
இங்கு இனி இல்லையென்றுவா,

கொழுந்து விட்டெரியும் கொடிய போர்கள்
கூடாமல் அமைதி பெற வா,
குடி போதை, மது, மாது, விபச்சாரம், கொலை, களவு
கூரம்பாய் எதிர் கொண்டு வா,

விழுந்த போதெல்லாம் தூக்கிவிட வரவேண்டும்
வீடில்லார்க்கு வீடு பெற வா,
விடிவு பெற வடிவாக, இடம்பெயர்ந்தோர் குடியமர,
வருகவே தை மகளே.

கலாபூஷணம், கே.எஸ்.சிவஞானராசா, கொக்குவில்.

அனைவரது வாழ்க்கையில் மனநிறைவும் சுபீட்சமும் பெற்றிட சூரிய பகவனை வணக்கும் தைத்திருநாளான இன்று அனைவரையும் வாழ்த்துவதில் சரவணா ரெக்ஸ் பெருமிதம் அடைகின்றது.



பண்டிகைக் காலங்களுக்கேற்ற ஆடை வகைகளினதும்,
பாரம்பரியத்தின் கைராசியான திருமணப் பட்டுப் புடைவைகளினதும்
சாம்ராச்சியம்

நெல்லியடி
சரவணா ரெக்ஸ்
171, பிரதான வீதி, நெல்லியடி,
(சம்பத் வங்கி அருகில்) கரவெட்டி.
021 226 2992

அழகுக்கலை பயிற்சி

யாழ் பியூட்டி அக்கடமியும், ஒறிபிளேம் யாழ் சேவை நிலையமும் இணைந்து தைப்பொங்கலை முன்னிட்டு மீண்டும் மிகக் குறைந்த கட்டணத்தில், இந்தியாவில் விசேட பயிற்சி பெற்று சிறப்புப் பெற்ற ஆசிரியையினால்....

- ஒரு மாத கால அழகுக் கலைபயிற்சிகள் - பதிவுக்கட்டணம் உள்ளடங்கலாக 2080/= மட்டுமே. (மேலதிக கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது. முதல் இணைந்துகொள்ளும் 12 நபர்களுக்கு மட்டுமே இச் சலுகை)
- 3மாத கால டிப்ளோமா அழகுக் கலைபயிற்சிகள் - 40% கட்டணக் கழிவில் (முதல் இணைந்துகொள்ளும் 9 நபர்களுக்கு மட்டுமே இச் சலுகை)
- கேக் ஐசிங் பயிற்சிகள்.

என அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித் தனியாக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
மேற்படி பயிற்சி நிறைவின் பின் வேலை வாய்ப்புகளும் வழங்கப்படும்.



சனி, ஞாயிறு புதிய பிரிவுகள்.
18.01.2015 ஞாயிறு-மு.ப 10 மணிக்கு
கிழமை நாள் புதிய பிரிவுகள்.
19.01.2015 திங்கள் மு.ப 10 மணிக்கு

பதிவுகளையும் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள
அலுவலக நேரத்தில் வருகைதரவும்.
மேற்படி தினத்துக்கு முன்னர் வருகைதர முடியாதவர்கள்
30.01.2015 இற்கு முன்னர் வருகைதரவும்.

நிறுவன அமைவிடத்தை அறிந்து கொள்வதற்கு 0214546026

ஒறிபிளேம்
616, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (வேம்படிச் சந்தியில்)

# தைத்திருநாள் சிறப்பிதழ் - 15.01.2015

XIX

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

தரமானதும் சுவையானதுமான உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**அருள்நாயகி**
சைவ உணவகம்

பிரதான வீதி, நெல்லியடி

(12.3.7)

---

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்.

சகலவிதமான சிற்றுண்டி வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்

**GREEN LEAF CREAM HOUSE**

N.M.M.V.Road, Nelliady, Karavedday.
T.P: 077 377 3197

(12.3.7)

---

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வடமராட்சி, நெல்லியடியில் கேட்டின் ஓடர்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

**நியூ டீசன்ஸ் ரெயிலேர்ஸ்**

உங்கள் விருப்பப்படி நவீன டிசைன்களில் அழகான, புதுவிதமான, கேட்டின் பார், கேட்டின் மற்றும் கேட்டின் வகைகள் மலிவு விலையில் தனித்துவமான கைதேர்ந்த தையல் கலைஞர்களால் உடன் தைத்துக்கொடுக்கப்படும்.

ஓடர்கள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு: நியூ டீசன்ஸ் ரெயிலேர்ஸ்
New Decents Tailors
ம.ம.வி.வீதி, நெல்லியடி.
தொ.பே: 077 670 5370

(12.3.7)

---

வாடிக்கையாளர்களுக்கு இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**யசோ ரெக்ஸ்**

திருமணப்பட்டுப்புடைவைகள் மற்றும் சகலவிதமான ஆடைகளுக்கும்

**YASO TEX**

Main Street, Nelliyadi, Tel: 021 226 4997

---

அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல் வாழ்த்துக்கள்.

**துஷானி கிளாஸ் ஹவுஸ்**

சகல விதமான ஹவுஸ் பேணிச்சர்ஸ், பிற்றிங் வேலைகள், கிளாஸ் வகைகள், மெத்தை வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

இல.114, பிரதான வீதி, நெல்லியடி,
தொ.பே: 021 226 3076

---

**R.K & SONS ELECTRONICS**

*Dealers in All Kind of Electronic & gift Items Etc....*

TV, Deck, DVD, CD Player, Radio, Dish TV, Washing Machine, Fan, Fridge, Grinder, Cassette Recorder, Oven, Rice Cooker, Etc...

No.120, Main Street, Nelliady.
T.P: 021 226 2981

---

அன்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**தமிழ்ப்பூங்கா**
பதிப்பகம்

சகலவிதமான அச்சு வேலைகளும் அழைப்பிதழ்களும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

**Tamil Poonga**

பிரதான வீதி, நெல்லியடி.
OFFSET PRINTERS Main Street, Nelliyady.
Tel: 021 226 4014

(12.3.7)

---

அன்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

சகலவிதமான மருந்து வகைகளும் பால்மா வகைகளும் நியாயவிலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**MANTHIKAI PHARMACY**
Puloly
Tel: 021 226 3283

(12.3.7)

---

அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகளுக்கான புத்தம்புதிய டிசைனில் திருமண நிகழ்வுகளுக்கான பட்டுப்புடைவைகள் மற்றும் சகலவிதமான ஆடைகளுக்கும் நெல்லியடியில நாடவேண்டிய ஒரே இடம்

**அருண் ரெக்ஸ் அன்ட் பான்சி பலஸ்**

**ARUN TEX AND FANCY PALACE**

Main Street, Nelliady.
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே: 021 226 2857

(12.3.7)

---

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

**LEGA'S BEAUTY PARLOUR**
(லேகாஸ் பியூட்டி பார்லர்) நெல்லியடி

சருமங்களின் தன்மைக்கேற்ப ஃபேஷியல்கள், ஐபுறோ, முடிசுருள்பண்ணுதல், முடி அயன் செய்தல்... மற்றும் திருமண, பிறந்தநாள் ஐசிங் கேக் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

**மணப்பெண் ஒப்பனைகள்**

காலத்திற்கேற்ப நவீன முறையில் மேற்கொள்ளப்படும்.

வண்ணமாடலேன், நெல்லியடி.
TP: 077 948 0824, 077 078 30470

(12.3.7)

---

**தீபன்** பதிப்பகம்

சகல விதமான அச்சு வேலைகளும் சிறந்த முறையில் குறிப்பிட்ட தவணையில் செய்து கொடுக்கப்படும்

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

உரிமையாளர்
சி.தீபானந்

தொ.பே: 077 652 0315

வி.எம். றோட், பருத்தித்துறை.
பிரதான வீதி, பருத்தித்துறை.

theepanoffsetprinters@gmail.com

---

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

SEYLAN LEASING செலான் லீசிங்

செலான்வங்கி நெல்லியடி கிளையானது தனது வாடிக்கையாளர்களுக்கு **இனிய தைத்திருநாள்** நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் முதியோருக்கான நிலையான வைப்புகளுக்கு வட்டி வீதத்தினை 1.01.2015 இல் இருந்து 12வீதமாக அதிகரித்துள்ளது என்பதை அனைத்து வாடிக்கையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (நிபந்தனைக்கு உட்பட்டது).

XX தைத்திருநாள் சிறப்பிதழ் - 15.01.2015


அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

மழலைச் செல்வங்களின் மகிழ்ச்சித் தெரிவிற்கு தனித்துவமான ஒரே இடம்

# சாயிராம்

மதர் அன் பேபி நீட்ஸ்

Hospital Road, Manthikai.

T.P: 021 300 1790

(12.3.7)

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

அனைத்து மருந்து வகைகளுக்கும் பால்மா வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்

# நெல்லியடி

மெடிக்கல்ஸ்

N.M.M.V.Road, Nelliady.

T.P: 021 226 2975

(12.3.7)

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.

# ஸ்ரீ சுசீலா

(916 KDM)

தங்க நகைகள் மொத்தமாகக் கிடைக்கும்.

239, பிரதான வீதி, பருத்தித்துறை.

T.P: 021 320 7437, 077 721 0206

(12.3.7)

# EASY SOLUTIONS

www.easysolutions.lk

பண்டிகைக்கால விசேட விலைச்சலுகை

- கணனி விற்பனை
- கணனி திருத்தம்
- லப்டொப் விற்பனை திருத்தம்
- இணைய தள வடிவமைப்பு
- இணைய விளம்பரம்
- டொமைன் சேவர் இடவசதி
- மென்பொருள் வடிவமைப்பு
- நெற்வேர்க்கிங்
- அன்ரிவைரஸ் தீர்வுகள்

EASY SOLUTIONS

MMV Road, Nelliady. TP : 021-226 1120 , 0774386599

அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

# மனோகரன் ஹாட்வெயார்

உங்களுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள், பெயின்ற் வகைகள், PVCபைப், மாபிள்வகைகள் என்பவற்றுடன் துவிச்சக்கரவண்டிகள், எலெக்ரிக் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றிடலாம்.

சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி.

தொ.பே:021 226 4192

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

உங்கள் கட்டடங்களை நீண்டகாலப் பாவனையுடன் அழகாக வைத்திருக்க

ரோக்கியோ சிமெந்து, பெயின்ற் வகைகள் மற்றும் அனைத்து வகையான கட்டடப் பொருள்கள் மற்றும் சூரியலாக் பெயின்ற், சீற் வகைகளை ஒரே கூரையின் கீழ் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள

# எமரல்ட்

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

யாழ்.வீதி, உடுப்பிட்டி.

TP: 021 226 3468

(12.3.7)

வாடிக்கையாளர்களுக்கு இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

# MAHY

beauty an corner

அனைத்து அழகு சாதனப் பொருள்களும், Ladich Hair Cutting, Straightning, Rebounding, Perming, Hair Colouring, Ironing, Hot Oil Massage, Henna Treatment.

உங்கள் விழாக்கள் எதுவாயினும் சிறந்த முறையில் அலங்கரித்துக் கொள்ளலாம்

Ladies Beauty Items, Eye brow shapping Full Face Threading, Facials. Waxing, Face Bleaching, Manicure & Pedicure, Pimple Treatment.

1st Mile Post, Point Pedro. TP: 077 533 6214

(12.3.7)

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்.

சகலவிதமான கட்டட உபகரணங்களுக்கும் பெயின்ற் வகைகளுக்கும், மின்சார உபகரணங்களுக்கும் நாடவேண்டிய இடம்

# IEYNGARA KALANCHIYAM

Main Street, Point Pedro

T.P: 077 190 7478

(12.3.7)

# SINGER Plus

Point-Pedro Road, Nelliady. T.P: 021 226 4937

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

# Beauty

Makeup center

Bridal Makeup

Hair Dressing Facials and

Structure Cakes

(12.3.7)

Main Street,Point Pedro. TP: 021 226 4394 / 077 652 9249

# பொங்கிடுவோம் பொங்கல்!



ஆண்டாண்டு வந்தாலும் அவையெல்லாம் பொங்கலல்ல
இவ்வாண்டு இனிக்குமே தமிழ் பொங்கல்
புண்ணாகிப் புரையோடிப்
போன நெஞ்சங்களில்
பூந் தைலம் பூசிடவே பிறந்த
தைப் பொங்கல்
கண்ணிழந்த ஈனர் சிலர்
கறைப்படுத்திய வாழ்வை
பொன்னொளியில் ஒளிர்ந்திட
பொங்கிடுவோம் பொங்கல்
மண்ணிழந்து மனையிழந்து
மானமிழக்கா தமிழன்
எண்ணமதில் திண்ணமாய்
இருப்பதனால் பொங்கிடுவோம்.

**அபீர்ராஜன்.**














1717 FOLLOW US
www.mobitel.lk
மொபிடெலின்
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!
குடும்பம் எனும் புதுப் பானையிலே,
அன்பு எனும் புத்தரிசியிட்டு,
பண்பு எனும் சர்க்கரையுடன்,
ஆரோக்கியம் எனும் சுவைப் பால் கலந்து,
ஆனந்தம் எனும் இனிய பொங்கல் படைத்து,
உலகெங்கும் வாழும் உங்கள் உறவுகளுடன்
பரிமாறிடவே வாழ்த்துகிறோம்.
TRIAD 32653
Sri Lanka
Telecom
Mobitel


இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
MJ
உரிமையாளர்
(அன்புள்ள அப்பா)
ஐ. நடராசா
ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
தங்க நகை உலகில் மங்கா புகழ் படைத்த
நடராசா கஜந்தன்
நியூ மைதிலி
ஜுவலர்ஸ்
காலத்தால் வெல்லும் கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும் உங்கள் புன்னகை.
உங்களது தங்க நகைகளின்
கரட்டை துல்லியமாக
உறுதிப்படுத்துவதற்கான
இலத்திரனியல் கருவி
எம்மிடம் உண்டு
KARAT METER
புதிய கட்டடத்தில்
யாழ். மண்ணில் தனக்கே உரித்தான தன்னிகரில்லா தலைமை நிறுவனம்
இல. 38,40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 7878, 021 221 7877
Email: newmaithily40@gmail.com


அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
VMK
JEWELLERY
வீ.எம்.கே
ஜுவல்லறி
வீ.எம்.கே.ஜுவல்லறி
V.M.K.Jewellery
80/3, கஸ்தூரியார் வீதி, (யாழ். மாநகரசபை புதிய கட்டடத் தொகுதி) யாழ்ப்பாணம்.
021 720 1117 / 021 222 2515
நியூ வீ.எம்.கே.ஜுவல்லறி
கண்டி வீதி, சாவகச்சேரி.
021 227 0038

Thass Rest / Uthaya Rest
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
வெள்ளவத்தையில் குறைந்த நாளாந்த வாடகைக்கு
A/C, Non A/C Rooms, வீடு Anex உண்டு.
Hotline: 0778676507
Thass Rest
391/6, Galle Road, Wellawatte,
Colombo-06.
Tel: 011 2360515, 011 2362586.
(மங்களா கோல்டுக்கு & Delman Hospital அருகில்)
Uthaya Rest
58, Harmers Avenue,
Colombo - 06
Tel: 011 250 3552, 011 236 1242.
(வெள்ளவத்தை பொலிஸ், புகையிரத நிலையத்துக்கு அருகில்)

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
சாரங்கா நகைமாடம்
மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நாணயமாற்று நிறுவனம்
Sharanga Money Exchange (Pvt) Ltd.
சாரங்கா ஜுவல்லறி
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6972
பக்ஸ்: 021 222 8861

www.captainsteel.lk
உங்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
கேப்டன் ஸ்டீல் (பிறைவெட்) லிமிடெட்
முன்னைய பெயர் - இந்து-ஸ்ரீ இன்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் (பிறைவெட்) லிமிடெட்
1994 முதல்
CAPTAIN 32 RB 500 SLS 375
பலம் - பாதுகாப்பு - சேமிப்பு
தரம்
நம்பகத்தன்மை
நிலைத்தன்மை
உலகப் புகழ்பெற்ற உற்பத்தியாளர்களிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 100% உலோகக்கட்டைகளால் எமது சகல தயாரிப்புக்களும் உற்பத்திசெய்யப்பட்டுள்ளன.
SLS
MGMT. SYS. RvA C 155
SLAB
அழையுங்கள்: 0770 851 240 திரு. R. ஜெகன் - பிரதேச முகாமையாளர் வடக்கு மாகாணம்
தொழில்நுட்ப விசாரணைகளுக்கு: 0777 772 550 Capt(Engr) சரத் டீ சில்வா - பொது முகாமையாளர்
கேப்டன் ஸ்டீல் (பிறைவெட்) லிமிடெட்
249/3, வைக்கியவத்த வீதி, பஹால போமிரிய, கடுவலை.
தொ.பே: 0115 575800, 0115 544277 பெக்ஸ்: 0115 544979
மின்னஞ்சல்: kaduwela@captainsteel.lk / malwana@captainsteel.lk
TMT/ QST BARS - SLS 375
MS ANGLES - SLS 907
MS FLATS - SLS 949 Part 5
MS ROUND BARS - SLS 949 Part 1
MS SQUARE BARS - As per customer requirement
MS 'I' BEAMS - As per customer requirement
MS CHANNELS - As per customer requirement
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்
தொ.பே: 0115 044999, 0777224089
பெக்ஸ்: 0112 692678, 0112 142591
மின்னஞ்சல்: marketing@captainsteel.lk
தொழிற்சாலை விற்பனைக்கூடம் - கொழும்பு
திரு. A. தவரட்ணம் - 0779703176
தொ.பே: 0114 345412 பெக்ஸ்: 0114 740690
மின்னஞ்சல்: factoryoutlet@captainsteel.lk